ரிஜிஸ்டர் நெ. 2041

தனிப்பிரதி விலை ஒரு அணா.

குடி அரசு

வருட சந்தா முன்பணம்	— ரூ.	3—0
6 மாத சந்தா ,,	— ,,	1-12
வெளி நாட்டிற்கு ,,	— ,,	4—0

ஞாயிறுதோறும் வெளிவருவது.

வியாபாரிகள் விளம்பரம் அங். 1க்கு ரூ 1.
கோர்ட் விளம்பரம் அங்குலம் 1க்கு ரூ. 2.
நீடித்த விளம்பரத்துக்கு தனி விகிதம்

மாலை 7 | ஈரோடு, பிரஜோத்பத்தி௵ கார்த்திகை மீ 14௳ (29—11—1931) | மலர் 31

கவனியுங்கள்! கவனியுங்கள்!

ஆயிரக்கணக்கான நற்சாட்சி பத்திரங்களும், தங்க மெடல்களும் பரிசுபெற்றது,

டாக்டர் சிங்காரம் அவர்களின்

உலகப்பிரசித்திபெற்ற உண்மையான மருந்துகள்.

காமகேசரி குளிகை.

(தங்கபஸ்பம் சேர்ந்தது)

தாதுபுஷ்டிக்கு கைகண்ட மருந்து.

இம்மாத்திரைகள் தாதுபுஷ்டியையும் தளர்ந்த நரம்புகளைக் கெட்டிபடுத்துவதிலும் பிரசித்தி பெற்ற பலவித யூனானி சரகுகளும் அசல் தங்க பஸ்பமும் சேர்த்து சாஸ்திர முறைப்படி தயார் செய்யப் பட்டது.

வயது சென்றதாலும், மிதமிஞ்சிய சம்போகத்தாலும், பலவித துர் அப்பியாசங்களாலும் இழந்து போன ஆண் தன்மையானது இம்மாத்திரைகளை சாப்பிட ஆரம்பித்தவுடன், மீண்டும் அதி கரிக்கச் செய்கிறது. பலக்குறைவு, கைகால்அசதி, சோம்பல், இடுப்புவலி, சம்போக காலத்தில் ஏற்படும் நரம்புத்தளர்ச்சி, துரிதஸ்கலிதம், சொற்பனஸ் கலிதம் முதலிய கொடிய வியாதிகளைப்போக்கும். சரீர புஷ்டியும், தேககாந்தியும், வீரிய விருத்தியும், மிகுந்த ஆண் தன்மையும் உண்டாகும். தளர்ந்த நரம்புகளைக் கெட்டிப்படுத்தி இல்லற இன்பத்தை முற்றிலும் அனுபவிக்கச் செய்யும். யாதொரு பத்தியமில்லை.

80 மாத்திரைகள் விலை ரூ. 10—0—0
40 மாத்திரைகள் விலை ரூ. 5—8—0

மஹா சந்தனாதித் தைலம்.

(ஓர் யோகீஸ்வரரின் அனுபவ முறை)

இத் தைலத்தில் அநேகவித பச்சிலை மூலிகைகள் சேர்ந்திருப்பதால் சரீரத்திலுள்ள உஷ்ணத்தை யும் நீக்கிக் குளிர்ச்சியைக் கொடுப்பதுடன் கண்களில் உண்டாகும் பலவித வியாதிகளையும் ஆச்சரியமாய் குணம் செய்கிறது. கண் பார்வை குறைவாயிருந்த அநேகருக்கு இந்த தைலத்தின் உபயோகத்தினால் நல்ல பார்வை ஏற்பட்டிருக்கிறது.

கண் எரிச்சல், கண்ணில் நீர்வடிதல், கண் கூச்சம், கண்ணுக்குள் சதைவளர்தல், மேகநீர் வெள்ளெழுத்து, மண்டையடி, ஒருதலை நோய், பீனிசம், காதுநோய், காதுமந்தம், சரீரத்தில் அதிக உஷ்ணத்தினால் உண்டாகும் தேக காந்தல், கிறுகிறுப்பு, மயக்கம், உள்ளங்கை உள்ளங்கால் எரிச்சல், மூளைகொதிப்பு, நித்திரை யின்மை, தலைமயிர் உதிர்தல் முதலிய சகலவித நோய்களையும் குணம் செய்வதுடன் சரீரத்திலுள்ள எவ்வித உஷ்ணத்தையும் நீக்கி கண்களுக்கும், மூளைக்கும் குளிர்ச்சியைக் கொடுக்கும்.

இத்தைலத்தை ஆண், பெண் யாவரும் ஸ்நானம் செய்யலாம். இத்தைலத்தை உபயோகித்தவர்கள் புகழ்ந்து எழுதும் கடிதங்கள் நாள்தோறும் வந்து குவிகிறது. ஒரு முறை இத்தைலத்தை உபயோகித்துப் பார்த்தால் இதன் உண்மை விளங்கும்.

24 அவுன்ஸ் டின் விலை ரூ. 4—0—0
12 அவுன்ஸ் டின் விலை ரூ. 2—2—0

வி. பி. தபால் சிலவு பிரத்தியேகம். முழுவிலாசம் தெரிவிப்பவர்களுக்குக் கேட்லாக் இலவசமாய் அனுப்பப்படும். வெளி நாட்டு வாசிகள் ஆர்டருடன் 5 ரூபாய் அனுப்பவும்.

டி. சி. சிங்காரம் அண்டு கோ,

சித்த ஆயுர்வேத வைத்தியசாலை, தெப்பக்குளம் போஸ்டு, திருச்சினாப்பள்ளி.

இரத்தவிர்த்தி, தேகபலம், தாதுபுஷ்டிக்கு

மனோரஞ்சித லேகியம்

தங்கபஸ்பம்

சேர்த்துச் சாப்பிடுங்கள்.

சகலவித உஷ்ணத்தையும், இரத்தக் கொதிப்பையும் அடக்கி நல்ல இரத்தத்தை ஏராளமாய்ப் பெருக்கித் தேக புஷ்டி, பலம், ஆண்மை வீரியவிர்த்தி, இந்திரிய விருவு, தாதுக்கட்டு, போக இச்சை முதலியவைகளை உண்டுபண்ணி அடங்காத இன்பத்தைக் கொடுக்கும். திடகாத்திரம், மூளை பலம், ஞாபகசக்தி, அறிவு வளர்ச்சி, மனோவலிமையையும் உண்டாக்கும்.

அதிக ருசிகரமுள்ளது. சிறுவர் முதல் ஆண், பெண் யாவரும் சாப்பிடலாம். மாணக்கர்களுக்கு மிகவும் அவசியமானது. எலும்பை உருக்கும் உஷ்ணத்தை அடக்கி இரத்த விர்த்தியை உண்டுபண்ணி தேகத்தை வளர்க்கும். தனி லேகியமும் சாப்பிடலாம்.

30 வேளை லேகியம் ரூபா 3. தங்கபஸ்பம் 30 வேளை ரூபா 7.

நம்மிடம் சகல வியாதிகளுக்கும் வேண்டிய உயர்ந்த மருந்துகள் கிடைக்கும். வியாதி விபரம் எழுதவும்.

தெண்டபாணி வைத்தியசாலை, பழனி. (S. I.)

சுயநாட்டுப் பொருளிருக்க அயல்நாட்டுப் பொருள் ஏன்?

ஆனந்த டூத் பேஸ்ட்

என்னும்

இந்தியன் டூத் பேஸ்ட்.

பண்டிட் ஆனந்தம் அவர்கள் நமது நாட்டு வைத்தியத்தொழிலை முன்னுக்குக் கொண்டுவர வேண்டுமெனும் பேரவாவினால் இருபது வருஷங்களுக்கு முன் நமது நாட்டு பொருள்களை ஆராய்ந்து மேல் நாட்டாருடைய டூத் பேஸ்ட்களுக்கு மேலான குணத்தோடு தயார் செய்து ராயல் டூத் பேஸ்ட் என்னும் பெயரால் இந்தியாவில் முதன் முதல் 20 வருஷங்களுக்கு முன் வெளிப்படுத்தினர்கள். இதனைப் பல பெரியோர்களும், அரசர்களும், பொது ஜனங்களும் உபயோகித்து ஆயிரக்கணக்கான நற்சாட்சி பத்திரங்களும், பொருட்காட்சிகளில் மெடல்களும் கொடுத்துள்ளார்கள்.

ஒரு டஜன் ஆனந்த டூத் பேஸ்டு டியூப் ரூ. 4—0—0 தபாற் செலவு வேறு. ஏஜண்டுகள் தேவை.

தமிழ் வைத்தியசாலை,
221, தங்கசாலை வீதி, சென்னை.
தந்தி விலாசம், மருத்துவன். டெலிபோன் நெம்பர் 2584.

WANTED Candidates for Electrical Engineering and wireless. Preparation for London City and Guilds Examination. Rail fare Paid Prospectus on 3 annas stamps.

Technical Institute of India, Ltd., Bombay No. 10.

"சன்மார்க்கன்"

உயரிய தமிழ் மாதப்பத்திரிகை.
ஆண்டுசேந்தா.
உள்நாடு ரூ. 1—0—0.
வெளிநாடு ரூ. 1—4—0.
ஆசிரியர் (நாவலூற்று)
சி. சுவாமி சிவநேசம்,
"சன்மார்க்கன்" பழனி.

கெந்தகமே—இந்தயுகம்.

டாக்டர் T. K. வேங்கிடாஜலம் அவர்களால் அனுபவித்து கைகண்ட கெந்தகரசாயனம்.
(மாத்திரைரூபமாய், வெள்ளிக்கவசம்பூண்டது)

கெந்தியின் அருவருப்பான வாசனையையும், காரமான காரலின் துர்குணத்தையும், மற்ற சேரும் சரக்குகளிலுள்ள குற்றங்களையும் நீக்கி, அனுபவமுறைப்படி தயாரித்தது. ஆண், பெண், பாலியர், விருத்தர்களுக்கும் மேன்மையுற்றது.

கர்ப்ப-விந்து மெல்லிய ஸ்தானங்களில் உஷ்ணம் தங்கி இரணமாகி, (இரத்தம் முரிந்த சீழ்) வெளியாகும் 217 வித வெட்டை வியாதிகள், 21 வித கிரந்திகள், கண்டமாலை, சூலை, அரையாப்பு, மர்மஸ்தான சொருக்கு, இரணம், புத்துவகைகள், தொண்டைத் துரு, அண்டப்புத்து, பௌத்திரம், சூதகவாய்வு, உதிரவாய்வு, க்ஷயம், குன்மம், 16-ம் ஜன்னி, 13-ம் பக்கவிலா, வாய்வு பிடிப்புகள், பல்புத்து, பல் கிரந்தியும், பல சிற்றின்ப சேர்க்கையாலே, அதிகவிசனத்தினலோ, அகால போஜனத்தினலோ அன்னதுவேசமாகி, மலச்சிக்கல் அல்லது போக்கு உண்டாகி ஜெனிக்கும் வியாதிகளையும், பிரசவ காலங்களில் கட்டிய இடுப்புகட்டு தளர்ந்ததினலோ, தளர்ச்செய்துக் கொண்டதினலோ, சூதகம் சரிவர, வெளியாகாமல், இடுப்பு, ஜப்பை, சந்துக்களிலும், ஊருவி, வாய்வு சம்பந்தப்பட்டவுடன் குனிய நிமிர முடியாமல், இருப்பதர்க்கு சந்து கட்டு என்பதற்கும் தடையின் இரத்த நரம்பு வழியாக சென்று முழங்கால், முட்டி முதல் பாதம் வரை உபாதையுடன் வீக்கமும் கண்டு நடமாட சௌகரியம் கொடுக்காத இளம் பிள்ளை வாதங்களையும் சொர்ப்பன உணர்ச்சி இல்லாத, துரித ஸ்கலித, முதலிய வியாதிகளையும் 21 தினத்தில் பூர்ணமாய் கண்டித்து, தாது என்னும் நரம்புகளுக்கு சுத்த இரத்தத்தையூட்டி முருக்கேற்றும் வல்லமையுடைய தோழன். உந்தி குளிர (கர்ப்ப இரணங்களை ஆற்றக் கூடிய) கோஷாயி கெந்தக ரசாயனத்தை உபயோகியுங்கள்.

3 வாரம் (21 நாள்) உபயோகிக்கும் கெந்தக ரசாயனம் ரூபாய் 6—0—0 உபயோகிக்கும் விதம் மருந்துடன்.

பாக்கிங் தபால் செலவு வேறு. மலாய் வாசிகள் ஆர்டருடன் ரூ. 7—12—0 அனுப்பிவைக்கவும்.

டாக்டர். B. A. எதிராஜ்,
(கால்ராபைரி)
கோஷாயி வைத்தியசாலை, தென்னூர், திருச்சி.

சுயமரியாதை இயக்கப் பத்திரிகைகள்.

:0:

'குமரன்'

வாரப்பதிப்பு
உள்நாடு வருடசந்தா 5—0—0
வெளிநாடு வருடசந்தா 6—0—0
மாதப்பதிப்பு.
உள்நாடு வருடசந்தா 0—12—0
வெளிநாடுவருடசந்தா 1—0—0
ஆசிரியர்: சொ. முருகப்பா.
விலாசம்:—
மானேஜர், "குமரன்" காரைக்குடி
ராமநாதபுரம் ஜில்லா

'முன்னேற்றம்'

வாரப்பதிப்பு
சிங்கப்பூரிலிருந்து வெளிவருவது
உள்நாடு சந்தா $. 3—0—0
இந்தியாவுக்கு ரூ. 5—0—0
ஆசிரியர்: கோ. சாரங்கபாணி
விலாசம்:—
மானேஜர், "முன்னேற்றம்"
152 சிலிகிரோட், சிங்கப்பூர்

'புதுவைமுரசு'

வாரப்பதிப்பு
உள்நாடு வருடசந்தா 3—0—0
வெளிநாடு " 4—0—0
மானேஜர், "புதுவைமுரசு"
4 லல்லிதொலாந்தால் வீதி
புதுச்சேரி.

"நாடார் குலமித்திரன்"

வாரப்பதிப்பு
உள்நாடு வருடசந்தா 4—0—0
வெளிநாடு " 5—0—0
ஆசிரியர்: சு. அ. முத்துநாடார்
விலாசம்:— மானேஜர்,
"நாடார்குல மித்திரன்"
அருப்புக்கோட்டை
ராமநாதபுரம் ஜில்லா.

ரோஜா முத்தையா ச்சி நூலக அறக்கட்டளை

God and the Universe.

கடவுளும், பிரபஞ்சமும்.

(தோழர் ம. சிங்காரவேலு B. A., B. L.)

II.

கடவுளும், பிரபஞ்சமும் என்று மகுடமிட்டு எழுதிய முன் கட்டுரையில் முடிவாயாக கடவுள் ஒருவர் இருப்பாராயின், அவருக்கு பிரபஞ்சத்தில் தங்குமிடமேது? என்ற விஷயத்தைக்குறித்துக் குறிப்பாக எழுதினோம். இனி முதல் எழுதும் கட்டுரையில், கடவுள், பிரபஞ்சம், ஜீவர் இவர்களைப் பற்றிய சம்பந்தங்களைக் குறித்து, தத்துவஞானிகளும், மதஸ்தரும், பக்தரும் கூறும் பலவித கூற்றினை, விஞ்ஞான முகமாக நின்று விசாரிக்கப் புகுவோம்.

“கடவுள்” என்ற பதத்திற்குக் கொடுத்து வரும் பொருள்களுக்குக் கணக்கே இல்லை. வேதத்தில் கூறுவது ஒன்று, உபநிஷத்துகளில் கூறுவது வேறொன்று. புராண சமயங்களில் கூறும் பொருள் மற்றொன்று. கிருஸ்தவர், மகமதியர், புத்தர்கள் கூறுவதும் வெவ்வேறு. ஒரு பதத்தை பலவேறு பொருள்பட எழுதியும், சொல்லியும் வருவதினாலேயே, அந்த வார்த்தை எதார்த்தத்தில் எதையும் குறிப்பதாகச் சொல்ல முடியவில்லை.

திருஷ்டாந்தமாக, இரண்டு பிரபல நூல்களில் சொல்லியுள்ள விவரங்களைச் சோதிப்போம். உபநிஷத்துக்களின் பிரகாரம். கடவுளை ஸ்பரிசிக்கவாவது, நுகரவாவது, பார்க்கவாவது கேட்கவாவது, ருசிக்கவாவது முடியாதாம். ஆனால், அது சிறியதற்கும் சிறியதாம், பெரியதற்கும் பெரியதாம், எங்கும் வியாபகமாம், காற்றிலும் அசைக்கப்படாதாம், நெருப்பாலும் தகிக்கப்படாதாம், தண்ணீராலும் குளிர் அடையப் பெறாதாம். இத்தகைய பொருளை என்னவென்று தெரிந்து கொள்வது? நித்யம், நிற்மலம், நிற்குணம் முதலிய எல்லாம் எதிர்மறையான பதங்களாக இருக்கின்றன. இவைகளிலிருந்து என்ன பொருள் கொள்ள முடிகிறது? இப்பதங்களுக்கு வியாக்கியானமிடுவோருக்காகிலும் தெரிந்ததென்னே? மற்றும் கடவுளைப் பற்றி உபயோகிக்கும் பதங்களாவும் அகண்டம், பரிபூரணம், மறைபொருள் என்பனவைகளும் நமது எண்ணத்திற்கு எட்டாதவை. இவ்விதமாக மனத்திற்கும், எண்ணத்திற்கும் எட்டாத வார்த்தைகளால் கடவுளைத் தெரிந்து கொண்டதாகிறி உபநிஷத்துகளில் கூறப்பட்டுள்ளது. இது, இவ்விதமிருக்க, கிருஸ்து மதஸ்தராகிலும் தெளிவுபடச் சொல்லுகின்றார்களாவென்று பார்த்தால், அதுவும் காணோம். சகலத்தையும் படைத்தவரென்றும், பிதாவென்றும் கூறுகிறார்களே ஒழிய மற்றபடி தெளிவு அடையச் செய்வதாக இல்லை. குயவன் பானையைச் செய்தமாதிரியாகச் செய்தானா? அல்லது, நம்மைப் பெற்ற தாய் தகப்பன்மார்களைப் போன்று உலகைப் பெற்றானா? என்று கேட்டால் அது தெரியாதாம்! இவ்விதமாக இவ்விரண்டு பிரபல மதஸ்தர்கள், தாங்கள் வாழ்த்தி வணங்கி வரும் தெய்வமென்பதைக் குறித்துச் சொல்லுகின்றார்கள். இந்தக் கஷ்ட நிலைமைக்கு அவர்கள் வந்தவுடன், எழுதியுள்ள சுருதியைக் காட்டுகின்றார்கள் தங்கள் தங்கள் வேதமென்று கூறப்படும் கை எட்டுச் சொற்களை ஆதாரமாகக் காட்டுகின்றார்கள். வாயால் கூறும் வார்த்தைகளுக்கும், ஏட்டில் எழுதியுள்ள சொற்களுக்கும், என்ன வித்தியாசமோ அதையாகிலும் தெரிவிப்பதாகக் காணோம். ஏட்டிலிருந்து வாய் வார்த்தைக்கும் வாய் வார்த்தையிலிருந்து ஏட்டிற்கும் மாறி மாறி காட்டுகின்ற வழிகள் அன்றி வேறு யாதும் விளக்கிய பாடில்லை. கை எட்டுப் புத்தகங்களிலாகிலும் அல்லது அச்சிட்ட புத்தகங்களில் கிறுக்கும் எழுதியாகிலும், அச்சிட்டாகிலும், இருக்கும் சொற்களைத் தான் நாமும் சொல்லுகின்றோம். நாம் சொல்லும் வார்த்தைகளையே, எழுதுகின்றோம், அல்லது அச்சிடுகின்றோம். எழுதி இருப்பதாலேயே எழுதியுள்ள வார்த்தைகளுக்கு சிறப்பு அதிசயம் ஏறப் போவதில்லை. ஆகவே சுருதியெனக் கூறும் மத புஸ்தகங்களில் எழுதியுள்ள வார்த்தைகளுக்கு யாதொரு சிறப்பும், நிவேதனமும் என்னே? ஞாயம் இவ்விதமிருக்க சுருதிகளில் சொல்லியுள்ளதை விசேஷமாகக் கருதுவது மௌடீகமும், வெறியாமைக்கு ஓர் பாகமேயல்லது வேறொன்றுமில்லை. மதஸ்தர்களுடைய தெரியாமையைக் குறிக்க சுருதிகள் ஏற்பட்டுள்ளனவாகத் தெரிகின்றது. சொல்லும் வார்த்தைகளில் உள்ள அபாசங்களைக் காட்டினால், சுருதியைக் காட்டுகின்றார்கள், சுருதிகளிலுள்ள அபாசங்களைக் காட்டினால் தாங்கள் சொல்லுஞ் சொற்களைக் காட்டுகின்றார்கள் இதே குதர்க்க வழக்கையே, எல்லா மதஸ்தர்களும், ஞாயமாக எண்ணுகிறார்கள்.

தத்துவ ஞானிகளிலும், மதஸ்தர்களுடைய ஞாயத்திற்கு மேல்கொண்டு போவதில்லை. மதஸ்தர் கடவுளைப் பற்றி கொண்டுள்ள அபிப்பிராயமே தங்களைப்போல், தத்துவஞானிகளும் கொண்டுள்ளார். ஒரு தத்துவஞானி கடவுளைப்பற்றி தெரிவிக்கும் ஞாயங்கள், மற்றொரு தத்துவஞானி கூறுவதில்லை. ஒருவர் போன போக்கை மற்றொருவர் பின்பற்றுவதில்லை. இருந்தாலும், சகல தத்துவஞானிகளும், மதஸ்தர்கள் போலவே சொல்லோடு நிற்கவேண்டியவர்களே. பொருளைக்குறிக்கும் தத்துவஞானி ஒருவருமில்லை. இந்திய தத்துவ ஞானிகள் ஒரு பிரபல வேதவாக்கியத்தை இந்த சந்தர்ப்பத்தில் கூறிவருகின்றார்கள். அதாவது, ‘ஏகம் ஸத், விப்ரா பகுதா வதந்தி” இதன் பொருள் என்னவெனில் இருப்பது ஒன்று (அதனை) ஞானிகள் பல பெயரிட்டு அழைக்கின்றார்கள். திருஷ்டாந்தமாக இருப்பது கடவுள் ஒன்றே. ஆனால் அதையே சிவனென்றும், பிரமமென்றும், விஷ்ணுவென்றும், பிதாவென்றும், அல்லாவென்றும், உண்மையென்றும், சத் என்றும், சித்தென்றும், ஆனந்தமென்றும், அப்ஸலூட் (Absolute) என்றும், அன்னோவபில் (Unknowable) என்றும் இன்னும் பற்பல பெயரிட்டு அழைக்கின்றார்கள். ஆனால் இத்தகைய ஸஹஸ்ரநாமங்களை (ஆயிரம் பெயர்) பரிசீலனை செய்தால் எல்லாம் வார்த்தை வித்தியாசமேயன்றி, எந்த பொருளையாகிலும் தெளிவு அடைய தெரிவிப்பதாக இல்லையென்றறியலாம். தெரியாதவைகளைக் குறித்துப் பல ஆயிரம் பெயரிட்டழைப்பதால் தெளிவு பெறுவதென்னே? எல்லா வித மத நூல்களிலும், தத்துவ நூல்களிலும் உள்ள கஷ்டம் இதுவே. பிராட்லே (Bradley) என்ற தத்துவஞானி ‘தோற்றமும் உண்மையும்” (Appearance and Reality) என்ற ஒரு தத்துவ நூலை இயற்றியுள்ளார். அதிலுள்ள சொல் அதிசூக்ஷ்மங்கள் போல நான் எங்கும் பார்த்ததேயில்லை. ஆனால் இவ்வளவும் சொல்லோடு நிற்பதேயொழிய விஷயஞானம் அடையச்செய்த பாடில்லை! பிரபல வேதாந்த நூல்களாகிய சங்கர பாஷ்யங்களை எடுத்துக்கொண்டாலும், அல்லது நமது தமிழ் நாட்டில் ஒரு காலத்தில் பிரக்கியாதி பெற்றிருந்த பிரபல வேதாந்தியாகிய ஈசூர், எனக்கு சச்சிதானந்த ஸ்வாமி இழைத்துள்ள பல நூல்களையாகிலும் பார்த்தாலும் எல்லாச்சொற்களும் வெகு அழகாகத்தான் இருக்கும். ஆனால், எல்லாம் வார்த்தை மாலைகளே! சொற்கள் ஒன்றுக்குப்பின் ஒன்றாக அழகாக கோர்க்கப்பட்டிருப்பதேயொழிய ஆரம்பத்திலிருந்து விஷய ஞானத்திற்கு கிஞ்சித்து அருகேயாகிலும் கொண்டு போவதாக இல்லை. எல்லாம் சொல் மயமே! அத்வைத வேதாந்தியாகிய சங்கராச்சாரியார் மற்ற மதங்களைக் கண்டிப்பதில் வெகு சாமர்த்தியத்தைக் காட்டுகின்றவர். ஏனைய மதங்களைக் கண்டிக்கும் ஞாயங்களைக்கொண்டு தான் ஸ்தாபிக்கும் தத்துவத்தைக் கண்டிக்க முயன்றாரில்லை. ஏனைய மதங்களை கண்டிப்பதில் தன்னுடைய புத்தியினைப் பலவிடங்களில் உபயோகிக்கின்றார். ஆனால் தன்னுடைய மதத்திற்கு வரும் போது, தன்னுடைய புத்தியினை ஓர் பக்கத்தில் கட்டி வைத்து விட்டு, வேதவாக்கியமே தனக்கு மேற்கோள் என்கின்றார். இவருடைய ஞாயமுழுமைக்கும், “தனக்கொன்று பிறனுக்கில்லை” என்னும் சட்ட வாதமே பொருந்தும். இவர் ஸ்தாபிக்கும் மதத்திற்கு சுருதியே ஆதாரமென்றால், மற்றவர்களுக்கும் அவரவர்கள் சுருதியே அவரவர் மதங்களுக்குப் பிரமாணமென்று ஏன் விட்டுவிடலாகாது? ஒவ்வொரு மதஸ்தரும் தங்கள் தங்கள் மதப்பொருளுக்கு அதிகாரி தங்கள் தங்கள் சுருதிகளென்றால் எந்தச்சுருதியை உண்மை எனக்கொள்வது? இந்த வழக்கு எந்த மதஸ்தருக்கு முண்டு. விவரித்துச் சொல்வோமாயின், கிறிஸ்துவர்களுக்கு (பைபில்) விவிலிய நூலும், இந்துக்களுக்கு வேதங்களும், மகமதியர்களுக்கு குரானும், புத்தர்களுக்கு திரிபிடகங்களும், பிரமாண நூல்களாகும். பைபிலில் “கர்மம்” என்ற தத்துவமில்லை. ஆனால் பிடக நூல்களிலுண்டு. மறு பிறப்பு இந்துக்கள் நூலில் சொல்லப்பட்டுள்ளது. மகமதியர் இதை ஒப்புவதில்லை. ஒரு மதத்திலுள்ள கோட்பாடுகள் மற்றொரு மதத்தில் இல்லை அல்லது அவை மறுக்கப்படுகின்றன. இவ்விதமாக ஒவ்வொரு மதமும், தத்துவ கோட்பாடுகளில் ஒன்றுக்கொன்று முரணடைந்திருப்பதால் எந்த மதச்சுருதி சொல்லுவது உண்மை? இன்னொரு திருஷ்டாந்தத்தை எடுத்துக்கொள்ளலாம். மதங்களின் முக்கியமான சித்தாந்தம் உலக சிருஷ்டியைப்பற்றிய விஷயமாகும். இந்த சிருஷ்டியைப்பற்றிக்கொண்டுள்ள அபிப்பிராயங்களுக்கு கணக்கு வழக்கில்லை. ஒவ்வொரு பக்தனும் தன் மனம் போனவாறு, கடவுள் உலகைச்சிருஷ்டித்தார் என்று எண்ணினதாக தங்கள் சுருதிகள் மூலமாக தெரிந்து சொல்கின்றான். கிறிஸ்தவன், குயவன் மட்பாண்டத்தைச் செய்ததுபோல் உலகையும், உயிர்களையும் சிருஷ்டித்தார் என்று சொல்லுகின்றான். இந்து, பிரமா தலையிலிருந்தும், முகத்திலிருந்தும், வயிற்றிலிருந்தும், பாதங்களிலிருந்தும் மனிதன் உற்பத்தியானான் என்கின்றான். மகமதியன், கடவுள் உலகைச்சிருஷ்டித்தார் என்று பொதுவாகச்சொல்கின்றான். புத்தன் சிருஷ்டியைப் பற்றி விசாரிப்பதே பயனில்லை என்று சொல்கின்றான். ஒவ்வொருவரும் தமதிஷ்டம்போல் தமது சுருதியை எழுதிக்கொண்டதாகத் தெரிகிறது. அவர்களுக்கு விஷய ஆதாரம் ஏதாகிலும் இருக்குமேயாகில் ஒவ்வொருவரும் சிருஷ்டி சித்தாந்தத்தை ஒரு விதமாகவே எழுதியிருப்பார்கள். யாருக்குமே எந்த விதமாக உலகம் வந்திருக்குமென்று உண்மையாக

(தொடர்ச்சி 17ம் பக்கம் பார்க்க.)

முத்தையா
அறக்கட்டளை

"ஆத்திகரெல்லாம் ஆத்திகரல்லர், நாத்திகரெல்லாம் நாத்திகரல்லர்."

(சாமவேதனுர்.)

கட்டுரை 3.

'பெரியோரெல்லாம் பெரியருமல்லர், சிறியோரெல்லாம் சிறியருமல்லர்' என்றார் நற்றமிழ்ப்புலவர். என் அவ்வாறு கூறினார்? வெளித்தோற்றத்தில் ஒன்றுமில்லையென்ற உண்மையை உறுதிப்படுத்தத்தான். உலகில் நாம்காண்பதென்ன? உருவிற்பெரியவன் அறிவிற்சிறியவனாயிருக்கின்றான். நல்லவனாக எண்ணப்படுபவன் உண்மையிற்பொல்லாதவனாயிருக்கின்றான். புனிதனாய்த்தோன்றுபவன் அழுக்கனாயிருக்கின்றான் என வேதோன்றுவதேபோல் ஒருவரும் ஒன்றும் இருப்பதில்லை என்ற உண்மைபெறப்படுகின்றது.

நானெடுத்துக்காட்டிய புலவரது கருத்தைத்தழுவியே தலைப்பிற்குறித்துள்ளபடி 'ஆத்திகரெல்லாம் ஆத்திகரல்லர், நாத்திகரெல்லாம் நாத்திகரல்லர்' என்று கூறுகின்றேன். இதைச் சற்றுவிரிவாய் ஆராய்ந்து விளக்குதல் நலமென்றெண்ணுகிறேன். முந்தின இருகட்டுரைகளிலும் "ஆத்திகம்—நாத்திகம்" எனும் இருகொள்கைகளின் நன்மை தீமைகளைப்பற்றிக் கவனித்தாய இக்கட்டுரையில் தோற்றத்தில் ஒன்றுக்கொன்று முரண்படும் (Seemingly Antagonistic) இரண்டுவிதக்கொள்கைகளின் மூலம் அல்லது முடிபு என்னவென்பதைப் பற்றிக் கவனிக்க முற்படுவோம்.

ஆத்திகர் இதைக்கேட்டதே உடல் நடுங்குவரென்பதையறிவேன். ஏனெனில் 'நாத்திகத்திலிருந்து நலன்விளையாது' என்று அவர்கள் கற்பிக்கப்பட்டிருக்கின்றனர். 'பழக்கங்கொடிதுபார், பாலையினுங்கோழிகிழிக்கும்' என்றதமிழ்ப்புலவன் நிரம்பவும் கெட்டிக்காரன். ஆத்திகர் தமது ஆத்திகத்தாலன்றி பிறிதொன்றால் நன்மை விளைவதில்லை யென்ற பிறழ்ந்த உணர்ச்சிகொண்டவர். எனவே அவர் பண்டைநாள் யூதரைப்போல 'நாசரேத்திலிருந்து நன்மைவரக்கூடுமோ? (Can any good came out of Nazereth?) யூதப்புரோகிதர் இயேசு கிறிஸ்துவைப்பகிடி பண்ணத்தொடுத்த வசைமொழி) 'நாத்திகம் அல்லது நாத்திகரால் நலன் விளையுமோ?' என்றே வியப்புடன் வினவினால் அவ்வாத்திகரையோருக்கு நாத்திகத்தைப்பற்றி நல்லெண்ணம் உண்டாவது அருமைதான். உலகில் பிறரைப்பற்றிய பிழையான விளக்கத்தால் எத்தனை தீதுகள் விளைகின்றன. ஒரு கொள்கையினர் மற்றொரு கொள்கையைப்பற்றி ஆராய்ச்சியேயின்றி அக்கொள்கையினரைக் கண்டிக்கவும், தூற்றவும் முற்பட்டுவிடுகின்றனர். இந்தத்தவறான கெட்ட எண்ணம் அல்லது முழுவதையும் அறியாது முரணாக முடிபுகட்டுதல் (Prejudice) எனும் தீமை நம் நாட்டில் மிகவும் மலிந்த ஒரு பண்டமாயிருக்கின்றது. 'இந்து'க்களுக்குக் கிறிஸ்தவர் இசுலாமியரைப்பற்றியும தவறான கெட்ட எண்ணம் இசுலாமியருக்கு கிறிஸ்துவர் 'இந்து'க்களைப்பற்றிய தவறான கெட்ட எண்ணம், கிறிஸ்துவருக்கு ஏனைய சமயக்காரரைப்பற்றிய தவறான கெட்ட எண்ணம். எல்லாச்சமயிகளுக்கும் (ஆத்திகருக்கும்) நாத்திகரைப்பற்றிய தவறான கெட்ட எண்ணம். இந்தத் தவறான கெட்ட எண்ணங்களை மாற்றுதற்குப் 'பிரம்மஞானசபை' (Teeosophists) யார் எவ்வளவோ முயன்றும் பயனில்லை.

இனி ஆத்திகத்தின் மூலம் அல்லது மூலாதாரக்கொள்கை என்ன? உலகில் 'கடவுள்' வழிபாட்டால் புனித வாழ்க்கை நடத்தக்கூடுமாயின் பிறருக்குச்சிறிது தொண்டாற்றி 'மறுவுலகு'க்கு மக்களை ஆயத்தப்படுத்துவதுதானே! ஆத்திகர் புனிதவாழ்க்கை நடத்துவதில்லை. பிறருக்குத் தொண்டாற்றுவதில்லை யெனினும் ஆத்திகரான அறிஞர் மேற்சொன்னதே ஆத்திகம் என்பர். சமயப்பித்தரும், மூடபக்தி வைராக்கியமுமுடைய ஆத்திகருக்கு நான் குறித்த கொள்கை ஒப்பக்கூடாததுதான். கிஞ்சித்து வேற்றுமையுடன் நாத்திகத்தின் மூலாதாரக்கொள்கையும் இத்தகையதே. மக்களைப்புனித வாழ்க்கையுடன பயனுடைய வாழ்க்கை நடாத்தப்பயிற்றுவித்தல், தொண்டாற்றல், கண்கண்ட 'தெய்வங்'களாகும். ஏழைகளுக்கு ஊண் உடையளித்தல் அறிவுவளர்ச்சிக்குரித்த இலக்கியத்தை எல்லாருக்கும் ஒன்றுபோல அளித்தல் இன்னோரன்னபிறசீரிய நோக்கங்கள்கொண்ட புனிதக்கொள்கையே நாத்திகத்தின் உயரியமுடிபு. பேரறிஞரான நாத்திகர் சிறுபிள்ளைத்தனமாய் 'கடவுள்' 'மோட்சம' 'நரகம' என்ற விளையாட்டுத்தனங்களில் காலத்தை வீணாக்குவதில்லை. எனவே ஆத்திகத்திற்கும் நாத்திகத்திற்கும் மூலத்தில் அதிகவேற்றுமையில்லை, வேற்றுமையிருக்கத்தேவையேயில்லை யெனலாம். எனினும குறுகிய நோக்கமும குறைந்த அறிவுங்கொண்ட ஆத்திகர் ஆத்திகத்திற்கு ஆக்கந்தேடும் தீய எண்ணத்தால் நாத்திகத்தையும், நாத்திகரையும் தீமையுடன் இணைத்துவிட்டனர். இணைத்துவிடவே பொது மக்களின் மதிப்பையும், ஆதரவையும் கோரும் அறிஞர் தமது மனச்சான்றுக்கு மாறுபட்டே தம்மை 'ஆத்திகர்' என்று கூறிக்கொண்டனர். ஆத்திகர் சூட்டிய இழிந்த பட்டம் நாத்திகத்திலிருந்து விலக்கப்படுமாயின் 'கடவுள் பக்தியிற்சிறந்த' இந்தியாவிலேயே எண்ணற்ற அறிஞர் 'நாத்திகராய்' வெளிப்பட்டுவிடுவர். அங்ஙனமாயின் 'ஆத்திகர்'போல் நடித்த பல வேடதாரிகள் உண்மையில் ஒரு கொள்கையுமற்ற தீய 'நாத்திகராய் விடுவர். பொல்லாதவரென்று இழித்துக்கூறப்பட்ட பல 'நாத்திகர் உயரிய நோக்கமும், சீலமும், சீரிய நேர்மையுமுடைய 'ஆத்திகராய்' விடுவர். ஆனது கொண்டே 'ஆத்திகரெல்லாம் ஆத்திகரல்லர். நாத்திகரெல்லாம், நாத்திகரல்லர்' என்று கூறுகிறேன்.

பெயர் பெற்ற விஞ்ஞான அறிஞரும், புலவருமான சார்ல்ஸ் டார்வின் (Charles Darvin) என்றஆங்கிலேயர் தமது Evolution Theoryக்கு ஆதாரம்தேடுதற்பொருட்டு உலகை மும்முறைசுற்றிவந்தார். முதன் முறை சாந்தப்பெருங்கடலிலுள்ள (Pacific Ocean) தீவுகளில் மனித இறைச்சி தின்னும் மிலேச்சரைக்கண்டு துக்கித்தார். இரண்டாம்முறை அச்சனங்கள் அக்கொடிய வழக்கத்தை விட்டிருப்பதைக்கேட்டின்புற்றார். மூன்றாம் முறை அம்மக்கள் தமது விலங்குத்தன்மையிலிருந்து முற்றாய் நீங்கி நாகரிகமடைந்து புனிதவாழ்க்கை நடத்துவதைப்பார்த்து அளவுகடந்த மகிழ்ச்சியடைந்தார்.

வாசகர்களே! மனிதரைத்தின்னும் விலங்குகளாயிருந்த அத்தீயரை மாற்றியதெதுவென்று நினைக்கின்றீர்கள்? கிறிஸ்துவமதப்பிரசாரகர்களின் (Christian Missionaries) நற்போதனையும், உண்மையான சாதனையுந்தான். திருடார்வின்கிறிஸ்துவ சமயத்தின் அடிப்படையையே பெயர்த்துவிடும. (Evolution Theory)யை-மனிதன், கிறிஸ்துவரும ஏனைய ஆத்திகச்சமயிகளும் கூறுவதேபோல் 'கடவுள்' என்ற ஒன்றால் படைக்கப்பட்டவனல்லன். அவன் தானே புழுவாயிருந்து பூச்சியாகி, தவளையாய், குரங்காய், மனிதக்குரங்காய்மாறி பிறகு மனிதனானான் என்ற கொள்கை உறுதிப்படுத்த ஆராய்ச்சி செய்த அறிஞர். அனைவரும் "நாத்திக"ரென்றே நமது "ஆத்திக" சிகாமணிகளாற் கருதப்பட்டவர். அவர் தமது எதிரிகள் ஆற்றிய ஒரு நல்ல தொண்டை, திருப்பணியை மெச்சினார். அன்றியும் கிருஸ்துவ மதப்பிரசாரகர்களுக்குப் பெருந்தொகை கொடுத்துதவினார். அவர் இறந்த பின்னர் கிறிஸ்தவர் இங்கிலாந்து (Chiristian England] அவருக்காய்த் துக்கங்கொண்டாடி அவரது உடலை வெஸ்ட்மினிஸ்டர் அபி (Westminster Abbey) யில் அடக்கியது.

குறித்த சம்பவத்திலிருந்து என்ன அறிகின்றோம்? "நாத்திகர்" "ஆத்திகர்" பிழையாய் எண்ணுகின்றபடி தீயோரல்லர் என்பதன்றோ? "கடவுள்" பத்தரான கிறிஸ்தவ மதப்பிரசாரகர் செய்த நல்லூழியத்தை 'கடவுளை'ப்பற்றிய சிந்தனையே யற்றவரும், அப்பிராணியின் படைப்புத்தொழிலைவேரறுக்கக் கங்கணங்கட்டி வேலைசெய்து வந்தவருமான ஒரு 'நாத்திகர்' மெச்சுகின்றார். பொருளுதவி புரிகின்றார். எனவே 'நாத்திகத்தின் உயரிய நோக்கம் சிறந்ததென்பது நன்கு புலனாகின்றது. மக்களுக்குத் தொண்டாற்றுதல் என்ற சிறந்த கொள்கையில் ஆத்திகத்திற்கும், நாத்திகத்திற்கும் பெரிதும் வேற்றுமையில்லை. ஆத்திகர் 'கடவுள்' உதவிகொண்டு செய்ய விரும்புவதை நாத்திகர் அப் பிராணியின் உதவியின்றியே செய்யக்கூடுமென்கின்றனர்-செய்தும் வந்துள்ளனர்-வருகின்றனர். கண்ணிற்குத்தென்படாத 'கடவுளை'க் கவனிப்பதா, இல்லேல் கண்ணிற்குத் தென்படுங் கடவுளர்--உண்மைக் கடவுளாகிய ஏழை மக்கட்குப்பணிபுரிதலோ--து மேல்?

ஆத்திகர் வேண்டுமென்றே தவறாய்க் கூறுவதுபோல் 'கடவுள்' இல்லையென்று மறுக்கும் நாத்திகர் 'கடவுள் பயம்' இல்லாராய்; முறையற்று, நீதி நெறியின்றும் பிறழ்ந்து பிழை செய்பவராய், தீங்கு புரிபவராய், விலங்குகள் போல் வாழ்பவராய்த் தம் மனம் போன்ற போக்கிற்போய் அங்குசமிலா யானைபோலும், கடிவாளமிலாக் குதிரை போலும் வழிவிலகிக்கெட்டழிந்து போய் விடுவாரென்பதெல்லாம் வீண் பேச்சே--வெறும பொய்யே. ஆத்திகர் ஏதாதல் நலஞ்செய்கிறதாயின் அது 'கடவுள்' என்ற கிழக்கொடுங்கோல் மன்னனது தண்டனைக்குப் பயந்தே யாகும், அல்லது மறுமை'யிற்கிட்டும் ஏதோவோர் பிரதி பலனை எதிர்பார்த்தே யாகும். ஆனால் நாத்திகர் மனிதன் பிறருக்கு இயன்றளவு உதவி புரியவேண்டுமெனபதையே தமது வாழ்க்கையின் இலட்சியமாகக் கொண்டுள்ளனர்.

நாத்திகர் 'கடவுளை' மறுப்பதும், சமயங்களை வெறுப்பதும், சடங்குகள், பண்டிகைகள் போகவேண்டுமென்பதும், புரோகிதர், குருக்கள், குருவர் முதலிய 'தெய்வ'த் தரகர்கள் ஒழியவேண்டுமென்பதும் எதற்காக? மக்களது ஒழுக்கத்தைக் கெடுத்து, அவர்களது வாழ்க்கையைப்பாழ்படுத்தத்தான்' என்று கூறுவர் ஆழ்ந்த அறிவற்ற ஆத்திகர். ஆயின் பிரபல நாத்திகர்களது மாசற்ற வாழ்வுகளையும், அன்னார் மன்பதைக்குச் செய்துள்ள சீரிய தொண்டுகளையுங் கவனித்திடில் ஆத்திகர் கூறும் அருத்தமற்ற கூற்று பொருத்தமற்றுப் போயவிடும. மனித சமூகத்திற்கு

தொடர்ச்சி 16ம் பக்கம் பார்க்க.

ஹிந்துக்களின் மத புஸ்தகங்கள்.

(*Dr. R. P.* பரஞ்ஜிபே எழுதிய "இந்தியாவின் தேவை" என்னும் புத்தகத்தில் காணப்படும் சாரங்கள்.)

கிறிஸ்துவர்கள், முகமதியர்கள், யூதர்கள் ஆகியவர்களுக்கு தங்கள் தங்கள் மதத்திற்கு என்று மூலாதாரமான ஒரு மதபுஸ்தகம் இருப்பது போல் இந்துக்களுக்கு என்று ஒரு தனிப்பட்ட புஸ்தகம் கிடையவே கிடையாது. இந்துக்களுக்குள்ளாக பல மதப்பிரிவுகள் இருந்தாலும் அவையவைகளின் நடைகளுக்கும், குணங்களுக்கும், ஒழுக்கங்களுக்குமேற்றாற்போல் பல் வேறு பிரிவுகளின் பிரமாணங்களும், கோட்பாடுகளும் ஒன்றுக்கொன்று நேர் முரண்பாடாகவும், பொருத்தமற்றதாகவும் இருந்தபோதிலும்கூட, அவைகளில் ஏராளமான நூல்களை மிகவும் பரிசுத்தமானதெனவும், அவைகளே தங்களுடைய மதசம்பந்தமான புஸ்தகங்களெனவும் கருதப்பட்டு வருகின்றன. இம்மாதிரியான மத புஸ்தகங்களில் சுருதியும், ஸ்மிருதியும், புராணமுமாகிய மூன்றுமே மிக முக்கியமானதென ஒப்புக்கொள்ளப்பட்டும், அங்கீகரிக்கப்பட்டு மிருந்து வருகின்றன. முதல் கூறப்பட்ட வகுப்பில் வேதங்களென கூறப்படுகிறவைகள் யாவும் அடங்கியிருக்கின்றன. சிருஷ்டிகளுக்குக் கர்த்தாவாயிருக்கக்கூடியவனிடமிருந்து அநேக ரிஷிகளால், உண்மையாகவே கேள்விப்பட்டவைகளைத்துமட்டுமே அவ் வேதங்களில் எழுதப்பட்டிருப்பதாகப் பெரும்பாலும் நம்பப்பட்டுவருகின்றது. ஆனால், அவைகள், யாவும் பல்வேறு ஆசிரியர்களால், ஆதியில் வழங்கிக்கொண்டிருந்த வடமொழி பாஷையில் எழுதப்பட்டிருந்த நூல்களையே ஒன்றாகத் தொகுக்கப்பட்டிருப்பதாகக் காணப்படுகின்றது. அவைகளின் மூலவாக்கியங்கள் யாவும் ஒழுங்காகவே காப்பாற்றப்பட்டும் வரப்பட்டிருக்கின்றது. ஏனெனில், முன் காலங்களில், ஒரு பிராமணன் வேதங்களைக்கற்று, மனப்பாடம் செய்து, உருப்போட்டுக்கொண்டு வரவேண்டுமெனவும், அவ்வாறு செய்வதற்காக வேண்டி அவன் தன்னுடைய பாலிய திசையை அதிலேயே செலவிடவேண்டுமெனவும் கருதப்பட்டு வந்தது. ஆனால், பொதுவாகவே அவைகளின் அருத்தமானது அவர்களால் அறிந்தும், தெரிந்தும் கொள்ளப்படவில்லை. அவர்கள் கல்வி பயிலுவதென்பதானது இயந்திரங்களைப்போல் குருட்டுத்தனமாக அப்படியே மனப்பாடம் செய்து ஒப்புவிப்பதுதானெனவும், அவைகளின் சப்தங்கள்கூட ஒரு மாதிரியான பரிசுத்தம் வாய்ந்தது தானென்றும் கருதப்படக்கூடிய அளவிலேயே தானிருந்து வந்தது.

தற்காலத்தில், அதாவது சில ஆண்டுகளாக எல்லா வேதங்களும் பல அறிவாளிகளாலும் ஆராய்ச்சி செய்யப்பட்டு வந்ததின் பயனாக ஆதிகாலத்திய ஆரியர்களின் நாகரீகமென்பது இத்தகையதென்பதைப்பற்றி அறிந்து கொள்ளுவதற்கு சாத்தியமான சில முக்கிய சாதனங்களுக்கு ஆஸ்திவாரமாயிருக்கின்றதென்பதாக ஏற்பட்டது. வேதங்கள்தான் இந்துமதத்திற்கே அல்லது பிராமணீயத்திற்கே மூலாதாரமெனக்கருதப்பட்டு வந்தபோதிலும்கூட, ஆதிகாலத்திலிருந்து வந்த ரிஷிகள் இப்பொழுது உயிர்பெற்று, தற்காலம் தங்களுடைய சந்ததிகள் எனக்கூறிக்கொள்ளுபவர்களைப்பார்க்கும்படியாக நேரிட்டால், அப்பொழுது தங்களுடைய சொந்த நாகரீகத்தின் வம்சம் பரம்பரையாக உற்பவித்த சந்ததிகள் தான் என்பதை அறிந்துகொள்ள அறவே முடியவே முடியாது. வேதங்களில் கூறப்பட்டிருக்கும் அநேக பழக்கவழக்கங்களும், ஆச்சார அனுஷ்டானங்களும் ஒன்று கைவிடப்பட்டாவது அல்லது முற்றிலும் மாறுபாடடைந்தாவது தான் தற்காலம் காணப்படுகின்றது. அப்படியிருந்தபோதிலும்கூட, ஹிந்துக்கள் என்பவர்கள் தாங்கள்வேதங்களையேதான் பின்பற்றுவதாகக்கூறிக் கொள்ளுகிறார்கள். வேதங்களில் கூறப்பட்டிருப்பதற்கும், அவர்களுடைய தற்கால நடைமுறைகளுக்கும் ஒன்றுக்கொன்று விரோதமாகவும், பரஸ்பர சம்பந்தமில்லாமலும், பொருத்தமில்லாமலுமிருக்கின்றதேயெனநாம் யாரையாகிலும் குற்றம் சாட்டினால், உடனே அவர்கள் யாவரும் 'பழக்கவழக்கங்கள் சாஸ்திரங்களைபுறக்கணிக்கின்றன அல்லது காலங்களால் மிதித்துத் தள்ளிவிடுகின்றன' என ஓர் சமாதானத்தை உரைத்து விடுகின்றார்கள். ஆனால், உண்மையாகவே ஹிந்துமதத்தில் அபிமானமுள்ளவர்கள் யாவரும், வேதங்களை ஆராய்ச்சி செய்த அறிவாளிகளின் கண்டனங்களாலும், ஆக்ஷேபனைகளாலும் கோபமோ, ரோஷமோ அடைவதில்லை. மேலும், வைதீகத்திற்கே தூண் கம்பங்கள் போன்று ஆதாரமாயிருக்கக்கூடிய யாவரும் வேதங்கள் யாவும் மனிதர்களால் தான் இயற்றப்பட்டதென்பதையும், அவைகள் மனித இயல்பிற்குமேற்பட்டதல்லவென்றும், அற்புதமானவைகளல்லவென்றும், தெய்வாம்சம் பொருந்தியவைகளல்லவென்றும் கூறப்படும் நியாயத்தை ஆதரிக்கக் கூடியவர்களாகவுமே தான் காணப்படுகின்றார்கள்.

அடுத்தபடியாக, ஸ்மிருதிகள் எனக் கூறப்படுபவைகள் அதி முக்கியமானவைகளெனக் கருதப்பட்டு வருகின்றன. ஸ்மிருதிகளோ அபரிமிதமாகவும், ஏராளமாகவும் காணப்படுகின்றது. அவைகள் கல்வியில் பாண்டித்தியமடைந்த நிபுணர்களெனக்கருதப்பட்டமக்களால் மக்களின் வாழ்க்கைக்குரிய விதிகளைப்பற்றியும், சமூகஸ்தாபனங்களின் போக்கைப்பற்றியும், நிலைமையைப்பற்றியும், ஒழுங்குகளைப் பற்றியுமுள்ள சட்டதிட்டங்களைப்பற்றியுமே எழுதப்பட்டவைகளாகும். உண்மையாகவே, அவைகள் ஒருவிதமான சட்ட புஸ்தகங்களாகவேதான் விளங்குகின்றன. ஆனால், எப்பொழுதுமே அவைகள் ஒன்றுக்கொன்று பொருத்தமென்பது சிறிதுமின்றி, முரண்பாடுடையவைகளாகவேதான் காணப்படுகின்றன. மேலும், இந்தியாவின் பல்வேறு பாகங்களிலும் அநேகவித ஸ்மிருதிகள் பிரமாணங்களாக எடுத்துக்காட்டவும் பட்டுவருகின்றன. ஆதிகாலத்தில் ஆங்கிலேய ஆட்சி இந்தியாவில் முதன் முதலாக ஏற்பட்டபொழுது சமஸ்கிருதஸ்மிருதிகளில் பாண்டித்தியமடைந்த நிபுணர்களெனக்கருதப்பட்டவர்களின் உதவியைக்கொண்டேதான் ஆங்கிலேய நீதிபதிகளால் இந்தியாவில் சட்டங்கள் வழங்கப்பட்டுவந்தன. ஏனெனில், அவர்களுடைய தீர்ப்புகளும், ஹிந்து சட்டங்களையே அனுசரித்ததாகயிருக்க வேண்டுமெனகருதியதால் இத்தகைய கொள்கையை அவர்கள் கையாளும்படி நேர்ந்தது. ஸ்மிருதிகளே மக்களின் எண்ணங்களை படிப்படியாக வெளிப்படுத்தி விரித்துரைப்பவைகளாகவேதான் காணப்படுகின்றன. ஆனால், ஆங்கிலேயர்களின் ஆட்சியானது நாளாவட்டத்தில் ஆதிக்கம் பெற ஆரம்பித்தது முதற்கொண்டு, அவர்களுடைய சட்டங்களே சாஸ்வதமாகஇருக்கும்படி நேர்ந்தது. இக்காரணத்தாலேதான் சமூகஸ்தாபனங்களின் முன்னேற்றமானது தடைப்படும்படியாக நேர்ந்தது. தற்கால இந்து இந்தியாவில் மக்களால் அனுசரிக்கப்பட்டுவரும் பழக்கவழக்கங்கள் யாவும் தற்கால நிலைமைக்கு முற்றிலும் விரோதமாகவும், மாறுபட்டும் காணப்படுவதற்கு இதுவுமோர் காரணமேயாகும்.

இயேசு கிறிஸ்து பிறப்பதற்கு ஆயிரம் வருடங்களுக்கு முன்பாக ஹிந்து இந்தியாவின் நிலைமையானது எத்தகைய ஸ்திதியிலிருந்து கொண்டுவந்ததென்பதை ஸ்மிருதிகளெனக்கூறப்படும் இப்புஸ்தகங்கள் நன்றாக விளக்கிக்காண்பிக்கின்றன. அநேகவிதங்களில் அந்நிலைமையானது மாறுபட்டோ அல்லது அடியோடு மறைந்தோ இருந்தபோதிலும்கூட, பெரும்பான்மையான மக்கள் தாங்கள் அப்பழைய கொள்கைகளையேபின்பற்றுவதாகத்தான் இன்னும் நம்பிக்கொண்டும், திருப்தியுடனுமிருந்துகொண்டுந்தான் வருகின்றார்கள். வைதீக ஹிந்துக்களிடம் நாம் ஏதாகிலுமொன்றைக்குறித்து வாதாடுவோமானால் அப்பொழுது அவர்கள் யாவரும் அநேகமாக ஸ்மிருதிகளிலுள்ள வாக்கியங்களையே மேற்கோள்களாகவும், பிரமாணங்களாகவும் எடுத்துக்காண்பித்து, அவைகளுக்கு நாம் கட்டுப்பட்டு நடந்துதான் தீரவேண்டுமென ஓர் முடிவும் கூறிவிடுவார்கள். ஆனால் அநேகமாக இரண்டு கட்சிக்காரர்களும் இம் முடிவை அங்கீகரித்து ஒப்புக்கொள்ளவே மாட்டார்கள். அப்படியிருந்தபோதிலுங்கூட, இருவரும் தங்களுக்கு அநுகூலமாகக்காணப்படும் வாக்கியங்களை எடுத்து பிரமாணமாகக்காண்பிப்பதில் மட்டும் சிறிதும் பின்னடையமாட்டார்கள். இம்மாதிரியாகவேதான் விதவாவிவாஹத்தைப்பற்றிய பிரச்சினைகள் உண்டாகும்பொழுதெல்லாம், இம்மாதிரியான விவாஹமென்பது கூடவேகூடாதென தடுப்பதற்கும் அந்த ஸ்மிருதிகளேதான் பிரமாணமாக எடுத்துக்காட்டப்பட்டு வருகின்றன. இக்காரணத்தாலேயேதான் இப்பரிதாபகரமான விஷயத்தில் இந்தியர்களின் பழக்கவழக்கங்கள் இத்தன்மையதாயிருந்திருக்கக்கூடும் என நிட்டமாய்க் கூறுவதற்கு முடியாமலிருந்துகொண்டு வருகின்றது.

இனி மூன்றாவதாக புராணங்கள் எனக்கூறப்படுபவைகள் ஹிந்துக்களின் வேதங்களெனவும், அவைகள் மிகவும் பரிசுத்தம்வாய்ந்ததெனவும் கருதப்பட்டு வருகின்றன. ஆனால், இப்புராணங்களோ ஸ்மிருதிகளைவிட கணக்கு, வழக்கற்றுத்தான் காணப்படுகின்றன. மேலும் இப்புராணங்களில் [illegible]மான கதைகளும் கூறப்பட்டிருப்பதுடன், சிலஉண்மை விஷயங்களும் அவைகளுடன் கலந்து தானிருக்கின்றன. ஆனால் இவ்வுண்மை விஷயங்களை அக்கதைகளினின்றும் வேறாகப் பிரிப்பதென்றால் அது ஓர் முடியாதகாரியமேயாகும். இப்புராணங்களில் எல்லா மக்களுக்கும் முக்கியமாய்த் தெரிந்திருப்பவைகள் இராமாயணமும், மகாபாரதமுமெனக்கூறப்படும் இரண்டு இதிகாசங்களேயாகும். கிறிஸ்துவின் சகாப்தம் ஆரம்பமானகாலத்தில் இந்தியாவின் நாகரீகம்எத்தகைய நிலைமையிலிருந்ததென்பதைக்குறித்து இவ்விரண்டு புஸ்தகங்களும் விளக்கமாயும், விரிவாயுமெடுத்துரைக்கின்றன. இரண்டு புஸ்தகங்களிலும் அநேக பாகங்களிருக்கின்றன. மேலும் இடையிடையே அடிக்கடி மாறுதல்களும் ஏற்பட்டிருப்பதாக நினைக்கவேண்டியிருக்கின்றது. ஏனெனில், மேற்கூறிய இரண்டு புஸ்தகங்களும் பெருமை வாய்ந்ததெனவும், கீர்த்தி வாய்ந்ததெனவும் பொது மக்களால் கருதப்பட்டு ஓர்விசேஷ கௌரவம் அவைகளுக்கு அளிக்கப்பட்டு வந்தபடியால் இடை-

கௌமார ஜோதிடத்தின் புரட்டு.

(குடந்தை K. T. வேலு)

நம் இந்திய நாட்டின் கண் வழங்கிவரும் ஜோதிடம் என்பதில் அனேகவகைகளுண்டு. முற்காலத்திலிருந்த சுயநலக்காரர்களான சில ஆரியர்களுடைய புத்திக்கும், யுக்திக்கும் எட்டியவாறு பாமர ஜனங்களை ஏமாற்றி தங்களிலர்த்தாரும், இன்னுமவர்களை யடுத்த சோம்பேரிகளும் வயிறு வளர்ப்பதற்கேதுவான முறையில் பல பொய்யும், புனைந்துரைகளையும் சேர்த்து ஜோதிட சாஸ்திரம் என்பதாகச்சில நூல்களை எழுதிவைத்துக்கொண்டு ஏமாற்றிப் பொருள் பறித்துக்காலந்தள்ளிவந்திருக்கிறார்களென்று தெரியவருகிறது. அப்படியேற்படுத்தி வைத்துக்கொள்ளப்பட்டிருக்கிற பல புரட்டுகளில் “கௌமாரநாடி ஜோதிடம்” என்பது ஓர் தலை சிறந்த ஜோதிடப்புரட்டாகும். மற்றப்புரட்டுகளெல்லாம் இதற்கு உறைபோடக்காணாது என்பது என் துணிபு. ஆனால் இந்த கௌமாரநாடி ஜோதிடத்திலும் சில உட்பிரிவுகளுண்டு. அவைகளாவன:— ‘கந்தர்நாடி சாஸ்திரம்’ ‘காக்கையர்நாடி சாஸ்திரம்’ ‘சிவசிந்தாமணி’ ‘புஜங்கர் மகாவாக்கியம்’ ‘துரோணர் சாஸ்திரம்’ ‘கன்மகாண்டம்’ முதலியவைகளாம்.

இந்தக் கௌமாரநாடி ஜோதிடமும், அதன் உட்பிரிவுகளும் பரமசிவன், பார்வதி, முருகக்கடவுள் மற்றும் பல ரிஷிகள் ஆகிய இவர்கள் மூலமாக வந்தவைகள் என்று கதை கட்டி வைத்திருக்கின்றனர்.

இந்த ஜோதிட சாஸ்திரத்தில் சொல்லப்படுபவைகள், ஒருமனிதன் இன்னும் கொஞ்ச காலத்திற்குள் பெரிய பிரபுவாக ஆகிவிடப்போகிறானென்றாவது, அல்லது இன்னும் இரண்டொரு மாதத்திற்குள்ளோ, வருடத்திற்குள்ளோ இறந்து விடப்போகிறனென்றோ இருக்கின்றன. ஆனால் இவைகள் இரண்டும் ஒரு காலத்தில் ஏற்படுமென்பது எல்லாருக்கும் தெரிந்த விஷயமே. இந்த ஜோதிடத்தை பார்க்கப்போன ஒரு மனிதனை கொஞ்சகாலத்திற்குள் இறந்துபோய் விடுவாய் என்று சொன்னால் அவன் எவ்வளவு திடசாலியாக இருப்பினும், மனதில் சஞ்சலமேற்பட்டு அதே வியாதியாகவும் மாறி அவனின் முடிவுக்குக் காரணமாயிருக்குமென்பது மறுக்கக்கூடியதல்லவே.

மேல்கண்ட ஓலைச்சுவடிகளில் ஒரு ஜாதகனுடைய பெயரும், அல்லது ஒரு ஜாதகியினுடைய பெயரும், தாய் தந்தையினுடைய பெயரும் சொல்லப்படுகிற விடங்களில் தெளிவாக இன்னபெயருள்ளவர்களென்று ஒரு விடத்திலேனும் சொல்லப்படாமல் பொதுவாகவும், குறிப்பாகவும், சொல்லப்படுகிறது. சமீபத்தில் ஒரு நண்பர் தன்னுடைய ஜாதகத்தைப்பார்க்கச் சொன்னபொழுது அவருடைய பெயர் ‘குருபரன் நாமமாகும்’ என்று சொல்லப்பட்டது. அதற்கு சுப்பிரமணியக் கடவுளின் பெயர்களில் ஒன்றையுடையவன் என்று இச்சுவடிகளைக் கையாண்டு வருபவர் பொருள் கூறுகிறார். ஜாதகத்தைப்பார்க்கச் சொன்ன அந்த நண்பருடைய பெயர் ‘சாமிநாதபிள்ளை’ ஆனதால் அது சுப்பிரமணியக் கடவுளின் பெயர்களொன்றும். ஆகையால் அதில் சொல்லப்பட்டது முற்றிலும் உண்மையானதென்று சாதித்து விட்டார். மற்றும் தாய் தந்தையர்கள் பெயர் சொல்லப்பட்டது. அது வருமாறு

“அன்னையாள் பிருந்தையாவாள்
அத்தனுந்தாள சாமி”

என்று சொல்லப்படுகிறது. அதற்கு, தாயார் பெயர் துளசியம்மாள் என்றும், தகப்பன் பெயர் முத்துச்சாமி என்றும் பொருள் சொல்லப்படுகிறது. மேற்கண்ட பாடலில் தாயின் பெயர் பிருந்தை என்று சொல்லுவதற்கு துளசி யென்று அனார்த்தம் பண்ணினால் ஏன் அது “பிருந்தையம்மாள்” என்ற ஒரு பெண் பிள்ளையினுடைய பெயராக இருக்கக்கூடாது? தகப்பன் பெயர் தாளசாமி என்றிருப்பதற்கு தாளம் என்றால் முத்து; சாமி என்றால்சாமி அதாவது முத்துசாமிஎன்றுபொருள் கூறியமேதாவி, தாளம் என்றால் முத்து, சாமி என்றால்கடவுள் முத்துக்கடவுள் என்று ஏன் சொல்லக் கூடாதோ தெரியவில்லை. (முத்துக் கடவுள் என்பது சரியான பெயரல்லவென்று வாசகர்கள் நினைக்கக்கூடும். அப்பெயரையுடையவர்கள் அனேகரிருக்கின்றார்கள். எடுத்துக்காட்டாக:- “முத்துக்கடவுள் சாம்பான்” என்ற பெயர் கொண்ட ஆதித்திராவிடர் ஒருவர் இருக்கிறார்.) நிற்க, இந்த ஓலைச் சுவடிகள் சமீபகாலத்தில் எழுதப்பட்டவைகளென்பதற்கும் பல காரணங்கள் இருக்கின்றன. “புயலொடு புலவன் சாலில்.

பூமகன் மதிகோலாக
வெயில் மகன் போகி நண்டில்,
வேதியன் தேள்மீதாக
செயுமிக்கோன் நிலையில் தோற்றும்
சேயவார்க் குயிர்சேயத்தே
பயன் தரு மிகனின் ஜென்மம்,
பாண்டியன் நாட்டுக் குள்ளே.”

என்பதாகும். இப்பாடலில் சொல்லிய விதமாய் (இந்த பாடலில் சொல்லிய கிரகங்களின் நிலையை விளக்கிச் சொல்லுதல் அனாவசியமென்பதோடு, விரிவஞ்சி விடுத்தனம்.) கிரகங்கள் அமையப் பெற்ற ஒரு மனிதனுடைய ஜனனபூமியானது ‘பாண்டியன் நாட்டுக் குள்ளே’’ இருக்குமென்பது இதன் கருத்தாகும். பாண்டியன், சோழன், சேரன், முதலிய மன்னர்கள் தென்னிந்தியாவில் சமீபகாலத்திலிருந்து அரசுபுரிந்தவர்கள் என்பது வெள்ளிடை மலையாம். ஏறக்குறைய அதாவது கி.மு. 200-ம் வருஷவாக்கில் பாண்டியர்கள் மதுரையை ராஜதானியாகவும், கொற்கையை துறைமுகப் பட்டணமாகவும் கொண்டு அரசு புரிந்திருக்கிறார்களென்பது சில சரித்திர ஆராய்ச்சி மூலமாகத் தெரிய வருகிறது. ஆனால் இந்த 1930 ம் வருஷத்தில் ஜாதகம் பார்க்கிற ஒரு ஜாதகருடைய ஜனன பூமியானது பாண்டியன் நாட்டுக்குள்ளே என்று சொன்னால் அது எவ்வகையில் பொருத்தமுள்ளதென்று சொல்ல முடியும்? இந்த பனையோலை சாஸ்திரங்களை திருவாய் மலர்ந்த பரமசிவனுக்கோ, பார்வதிக்கோ, சேர சோழ பாண்டியர்களுக்குப் பிறகு அவர்களுடைய நாடானது அனேகருடைய வசத்திலிருந்து அதற்குப் பிறகு ஐரோப்பியர்கள் கைப்பற்றி ஆட்சி புரிவார்களென்று தெரிந்திருந்தால் இவ்விருபதாம் நூற்றாண்டில் ஜாதகம் பார்க்கிற ஒரு மனிதனுடைய ஜன்ன பூமி பிரிட்டிஷ் இந்தியாவுக்குள் இருக்குமென்றோ பிரஞ்சு இந்தியாவுக்குள் இருக்குமென்றோ, இன்னும் மற்ற சுதேச அரசர்களுடைய ஆளுகைக்குட் பட்டிருக்கும் தேசங்களில் இருக்குமென்றோ ஏன் சொல்லியிருக்கக் கூடாது? பாண்டியன் முதலியவர்களுடைய பெயர் பிரஸ்தாபிக்கப் படுவதால் பாண்டியன் காலத்திலோ, அல்லது அவர்கள் காலத்திற்குப் பிறகோ ஜீவனார்த்தமாக இந்த ஓலைச்சுவடிகள் எழுதப் பட்டிருக்க வேண்டுமே யொழிய இந்த கௌமார ஜோதிடம் ஒருக்காலும் பரமேஸ்வரனால் சொல்லப்பட்டது மல்ல. பார்வதியால்கேட்கப்பட்டதுமல்ல. என்பது உறுதிப்படுகின்றது. அச்சுவடிகளில் தற்காலத்தில் வழங்கப்படும் நவநாகரீகமான பெயர்களாகிய ரோகிலாம்பாள், சுசீலா, மோகனவல்லி, அம்புஜா, சரோஜனி, இரவணதாஸ் தமிழன், பொதுநலப்பிரியன், புருத் தகவுக்காரன், புஷ்பவனம், ரோஜாப்பூ முதலிய பெயர்களும் பின்னும் மோசஸ், ஜான், ஹாமர், உட் (Wood) அபுபக்கர், மகமட்கௌஸ் முதலிய பெயர்களும் இந்த ஓலைச் சுவடி எழுதப்பட்ட காலத்தில் வழங்கியிருக்க மாட்டாதாகையால் இந்த சுவடிகளை எழுதி வைத்துள்ள சவுண்டிகளுக்கோ, அல்லது அதை உபதேசித்ததாகச் சொல்லும் லிங்க தேவராகிய பழைய பரமசிவனுக்கோ, மேலே விபரிக்கப்பட்டுள்ள பெயர்கள் தெரிந்திருக்க பிரமேயமேயில்லையாதலாலும், அப்பெயர்கள் இந்தச்சுவடிகளில் ஒரு இடத்திலேனும் காணப்படாதது கவனிக்கத்தக்கது. இதில் கந்தர் நாடியென்பதை சிவபெருமான் உபதேசித்திருக்க அதற்கு கந்தர்நாடி என்று பெயரேற்படுவதற்கும் காரணம் தெரியவில்லை.

இவ்வளவு புரட்டுள்ள இச்சுவடிகளை உண்மையான சாஸ்திரமென்று மதிமயங்கித்திரியும் நமதருமைச்சகோதர சகோதரிகளுக்கு நல்லுணர்ச்சியேற்பட்டு சுயமரியாதையைக்காப்பாற்றிக்கொள்ளும் திறமை எப்பொழுது ஏற்படுமோ. நம்முடைய ஆயுட்கால பலனையும், முற்பிறப்புகளின் விர்த்தாந்தங்களையும பரமசிவன் என்று சொல்லப்படும் ஓர் கடவுள், தன் பத்தினியாகிய பார்வதிக்குச் சொல வேண்டிய அவசியம்தானென்ன? இந்த விர்த்தாந்தங்களை சொல்லும்படி பார்வதி கேட்டாளா? அப்படியானால் அந்த பார்வதிக்குத்தெரியாதா? ஒருவேளை பரமசிவனே வேலையற்றுப்போய் இந்த சவிஸ்தாரங்களை சொல்லிக்கொண்டிருந்தாரென்று சொல்லுவதற்கும் இடமில்லை. ஏனெனில் இவரோ பிச்சையெடுத்துக்கொண்டுவந்து தன் பெண்ஜாதிபிள்ளைகளை போஷிக்கவே நேரம்சரியாகயிருக்குமே ஒருவேளை இவருக்குக் கொஞ்சம் அவகாசமிருந்ததென்று வைத்துக்கொண்டாலும், தான் குந்தியிருக்க ஒரு குடிசையாவது கட்டிக்கொள்ளக்கூடாதா? பரிதாபம். இவர் வசிப்பதோ பனிமலைமேல். மழை வெயிலெல்லாம் இவர் தலைமேல். இவ்வளவு செல்வத்தோடு வாழப்பட்டவருடைய ஜாதகத்தை யார் எழுதிவைத்திருக்கிறார்களோ தெரியவில்லை. இவ்வளவு யோக்கியதை

தொடர்ச்சி 15ம் பக்கம் பார்க்க.

யில் தோன்றியவர்களில் சிலர் தங்களுடைய சொந்த கருத்துக்களையும், அபிப்பிராயங்களையும் எழுதி, அப்புஸ்தகங்களுடன் சேர்த்துவிடுவது அவர்களுக்கு சாத்தியமாகவிருந்தது.

அப்புஸ்தகங்களில் கூறப்பட்டுள்ள கதைகளில் சிறிதளவு வேகமொழுனும் ஒருசமயம் உண்மையாக இருந்தாலும் இருக்கலாம், ஆனால் அக்கதைகளில் மனோகற்பனையினால் சிருஷ்டிக்கப்பட்ட விஷயங்களும், தெய்வீகமபொருந்தியதுமான செய்கைகளுமே அளவுக்குமீறி காணப்படுகின்றன. நடுநிலைமையிலிருந்து அப்புஸ்தகங்களை வாசிக்கக்கூடிய ஒருவருக்கு அவைகளில் காணப்படும் விஷயங்களில் சரித்திர சம்பந்தமான உண்மைகளென்பது சிறிதுமில்லாமலிருப்பது புலனாகாமலிருக்காது. அப்படியிருந்தபோதிலுங்கூட, அதாவது அக்கதைகளுக்குச்சிறிதும் சம்பந்தமில்லா விஷயங்கள் இடையிடையில் அடிக்கடி கூறப்பட்டிருந்தபோதிலுங்கூட அவைகள் யாவும் மிகவும் உபயோகமுள்ளதாகவேதானிருக்கின்றன.

(தொடரும்)

லால்குடி தாலூகா சுயமரியாதைத் தொண்டர் மகாநாடு.

திரளான ஜனக்கூட்டம்.

வரவேற்புக்கழகத்தலைவர் தோழர் பி. கே. பிரசன்ன வெங்கடாஜலம் அவர்கள் வரவேற்புப் பிரசங்கம்.

22—11—31ந் தேதி பகல் 2 மணிக்கு லால்குடித் தாலூகா சுயமரியாதைத் தொண்டர் மகாநாடு கூடியது. சுமார் 1.30 மணிக்கு மகாநாட்டுத் தலைவர் தோழர். அழகிரிசாமி அவர்கள்பாப்பையா சத்திரத்திலிருந்து லால்குடி போர்டு ஹைஸ்கூல் கட்டிடத்திற்கு மேளவாத்தியங்களுடன் ஊர்வலமாக அழைத்துச் செல்லப்பட்டார். ஜனங்கள் திரள் திரளாக வந்து கூடியதால் அக்கட்டிடத்தில் இடம் போதாதென்று அங்கு நடைபெறுவதாக இருந்த மகாநாடு வெளிப்புறத்திலே நடைபெற்றது. ஆயிரத்துக்கு மேற்பட்ட ஜனங்கள் வந்திருந்தனர்.

திருவாளர்கள். என். எஸ். கந்தசாமி, எஸ். இராமசாமி, நாகை காளியப்பன, சித்தய்யன், அ.பொன்னம்பலம், இரங்கோன் செல்லப்பா இராமசாமி, ஆர். எம். எஸ். சின்னையா, லெ. சோமசுந்தரம் செட்டியார், புதுக்கோட்டை மாஜி சட்டசபை மெம்பர் சதாசிவம், இராஜம் செட்டியார், அம்பில் செல்லப்பா முதலியார், டி. குருநமசிவாயம் பிள்ளை, வைத்திய லிங்க ஐயா, பாலசுப்பிரமணியம், ராமசுபபிரமணியம், வாசுதேவன், கே. கலியபெருமாள், கி. ஆ. பெ. விஸ்வநாதம், கே. எஸ். மணி, வீரபபன், சுப்பையா, முத்துக்கண்ணு, ச. ம. சி. பாமசிவம், ஆரோக்கியசாமி, ரெங்கசாமி, முதலானவர்களும் மற்றும் முசிரி, திருச்சி, சேலம், கோயமுத்தூர், புதுக்கோட்டை, செட்டிநாடு, தஞ்சை, நாகை முதலிய ஊர்களிலிருந்தும், முக்கியமாக பெண்ணாடம், மஞ்சக்குப்பம் முதலிய இடங்களிலிருந்தும் ஏராளமான தொண்டாகள் வந்திருந்தார்கள். மேனாட்டு டெனமார்க்கு மிஷனரிகளான, பெண்கள் இவ்வியக்கத்தின் பற்றால் மகாநாட்டிற்கென வந்திருந்தது குறிப்பிடத்தக்கது. நூற்றுக்கணக்கான தாழ்த்தப்பட்ட வகுப்பினைச் சேர்ந்தவர்கள் குழுமியிருந்தார்கள்.

திரு. டி. வி. சோமசுந்தரம் அவர்கள் பிரசங்கம்.

மகாநாடு 2 மணிக்கு ஆரம்பித்து சுயமரியாதைக் கீதங்கள் பாடப்பட்டன. பின்னர் திரு. எம். கே. கூந்தப்பெருமாள் எழுந்து, திரு. டி. வி. சோமசுந்தரம் பி. ஏ., பி. எல், அவர்களை மகாநாட்டைத் திறந்துவைக்குமாறு கேட்டுக்கொண்டார். திரு. சோமசுந்திரம் அவர்களும், சுயமரியாதை இயக்கம் மக்கள் விடுதலைக்காக ஏற்பட்டதென்றும், திரு. ஈ. வெ. ராமசாமியாரின் முயற்சியும், வாலிபர்களின் எழுச்சியும், காரணமாக தற்காலம் விடுதலைத் தோற்றம் விளங்கியிருக்கிறதென்றும் 50 வருடங்களில் செய்யும் வேலையை, சுயமரியாதை இயக்கம் 5 வருடங்களில் செய்திருக்கிறதென்றும், ரஷ்யா, பிரான்ஸ், டர்க்கி முதலிய தேசங்கள் தங்கள் மத ஆதிக்கத்தையும், சமூக சமய மூடக்கொள்கைகளையும் அறவே யொழித்ததால்தான் சமத்துவம் டாவி இங்கிலையில் வந்தன என்றும், மேனாட்டு அறிஞர் மார்வின் வேல்ஸ் என்பவர், "ஈ. வெ. இராமசாமியாரால் தென்னிந்தியாவில் ஆரம்பிக்கப்பட்ட சுயமரியாதை இயக்கமானது உலக சமதர்ம இயக்கத்துடன் கலந்து கொள்ளும்" எனக் கூறியிருக்கிறார் என்றும், ஆகையால் இவ்வியக்கம் அதிசீக்கிரம் உலக சமதர்ம இயக்கமாக வேண்டுமென்றும் கூறி, மகாநாட்டைத் திறந்து வைத்தார்.

லால்குடி தாலூகா முதலாவது தொண்டர் மகாநாட்டின் வரவேற்புக்கழகத்தலைவர் தோழர் பி. கே. பிரசன்ன வெங்கடாசலம் அவர்கள்.

பின்னர், வரவேற்புக் கழகத் தலைவர்தோழர். பி. கே பிரசன்ன வெங்கடாசலம் அவர்கள் தன்னுடைய பேருரையை நிகழ்த்தினார். அது வருமாறு:—

சகோதரிகளே! சகோதரர்களே!

உங்கள் எல்லோரையும் அன்புடன் வரவேற்கின்றேன.

தலைவருக்குவாழ்த்து.

இம்மகாநாட்டை நடத்திக் கொடுக்க ஆற்றலும், அறிவும், பொதுநோக்கமும் நிறைந்து மக்களுக்குத்தொண்டுசெய்வதற்கே தனது வாழ்நாட்களை தத்தம் செய்துவரும் தலைவரும், தொண்டரும் ஆகிய தோழர், K. V. அழகிரிசாமி அவர்கள் தலைமை ஏற்ற பேற்றினை நினைந்து மகிழ்ச்சியுடைவதுடன் அவர்கட்கு எங்களது மனமுவந்த நன்றியறிதலைச் செலுத்துகிறோம். தம்முடைய மனதில் உண்மையெனப்பட்டதை எதிரிகளின் எதிர்ப்புக்கும் அஞ்சாது வெளியிடுவதில் இவரே முதன்மையானவரென்று சொன்னால் அது மிகையாகாது. பேச்சுவன்மையும், அஞ்சாநெஞ்சமும், உண்மை உழைப்பும் நிறைந்த, இவரது தலைமையில் நமது தொண்டர் மகாநாடு சிறப்பாக நடைபெறுமென்று மகிழ்ச்சியோடு எதிர்பார்க்கிறோம்.

நமது இயக்கம்.

உலகத்திலுள்ள நாடுகளெல்லாம் நாகரீகம, கல்வி, கைத்தொழில், அறிவு முதலியவற்றால் சிறந்து முன்னேற்றமடைந்து வருகின்றன. ஆனால் நம் நாடோ கல்வியின்மை, மூடப்பழக்கவழக்கங்கள், பழமைகள் இவற்றில் மூழ்கி ஏழ்மை நீங்காது பண்டைப்பெருமை பேசி மிஸ். மேயோ போன்ற அயல்நாட்டுப் பெண்கள்புத்தகம எழுதிப் பழிக்கும் தாழ்ந்த நிலையில் இருந்துவருகிறதென்பதைப்பற்றி நாம் வெட்கம் அடையவேண்டியதுதான். இதுபோது திரு. ஈ. வெ. ராமசாமியாரால் புத்துயிர் அளிக்கப்பெற்று எங்கும் காட்டுத்தீபோல் டாவி இயங்கி வரும் நமது சுயமரியாதை இயக்கமொன்றே அத்தகைய இழிவான குறைகளைப் போக்கி உண்மையானவிடுதலையைபெறச்செய்யும். அன்னிய ஆட்சியைத்தொலைக்க வேண்டுமானால் முதலில் நம் ஜன சமூகத்திலுள்ள மூடப்பழக்கவழக்கங்களையும், சாதித்திமிர், தீண்டாமைபோன்ற கொடியதீமைகளையும் அறவே தொலைக்க வேண்டும். அப்பொழுதுதான் நம் நாடு உண்மையான தன்னாட்சியும்பெற்று அதனை உரிய முறையில் காப்பாற்ற முடியும்: படிப்பு, ராஜரீகதந்திரம், உறுதி, தைரியம், தன்மதிப்பு, பகுத்த

தொடர்ச்சி 13ம் பக்கம் பார்க்க

பார்ப்பனரல்லாதார்—சுயமரியாதை இயக்கம்.

சர். ஏ. பி. பாத்திரோவின் பிரசங்கம்.

இங்கிலாந்தில் 10-11-31ல் லார்டு லோதியன் தலைமையில், சர். ஏ. பி. பாத்ரோ செய்த பிரசங்கத்தில் உள்ள முக்கியமான பகுதிகளாவன:—

சமுதாயச்சீர்திருத்த வாதிகள் ஜாதி ஆதிக்கத்திலும், புரோகிதக் கொடுமையிலுமிருந்து விடுதலை பெறும் செய்தியை மிகுந்த ஆர்வத்துடன் எங்கும் பரப்பி வந்தார்கள். சமுதாயமோ தலைமுறை, தலைமுறையாக புரோகித வகுப்பார் ஏற்படுத்திய பழக்க வழக்கங்கள், மூடக்கொள்கைகள் முதலியவைகளால் கட்டுண்டு கிடந்தது. புரோகிதக் கூட்டத்தார் தெய்வாம்சமுடையவர்கள். அவர்கள் பிரமாவின் முகத்திலிருந்து உற்பத்தியானவர்கள் என்னும் கொள்கைகளை ஒன்றுமறியாத எளிதில் எதையும் நம்பும் இயல்புடையவர்கள் மனதில் வேரூன்றி நிற்கும்படி செய்திருந்தார்கள். இதை மத சீர்திருத்தக்காரர்களும், சமுதாய சீர்திருத்தக்காரர்களும் கண்டித்து வந்திருக்கிறார்கள். புத்தர், வைணவ பக்தர்கள், நானக், துக்காராம், ராம் மோகனராய் முதலியோர் ஜனங்களுக்குப் போதித்து அறிவை வளர்க்க முயன்றார்கள். ஆனால் சந்தடியில்லாது வேலை செய்யும் பார்ப்பனீயத்தின் முன் அவர்கள் அசக்தர்களாய் விட்டார்கள். இதுபோது எல்லா வாழ்க்கைத் துறையிலும் புதிய உணர்ச்சி ஏற்பட்டிருக்கிறது. தென்னிந்தியா, தக்ஷிணம், மத்திய இந்தியா முதலிய இடங்களில் இதுவரை பழய சமுதாய பழக்க வழக்கங்களுக்கு கட்டுப்பட்டு வாழ்ந்தவர்கள் எல்லாம் புரோகித ஆதிக்கம் தங்கள் அறிவையும் சாமர்த்தியத்தையும் நசுக்குகிறது என்பதை உணர ஆரம்பித்தார்கள். தங்கள் தினசரி வாழ்க்கையில் ஆதிக்கம் செலுத்தும் அப்பழக்க வழக்கங்களிலிருந்து விடுபட அவர்கள் தீர்மானித்தார்கள். ஜனங்களை அடிமையாக வைத்திருப்பதற்காக பிறந்தது முதல் இறக்கும் வரை, ஏன் இறந்த பிறகும், தொடர்பாய் அநேகம் அருத்தமில்லாத கிரிகைகள் ஏற்படுத்தப்பட்டிருக்கின்றன.

சுயமரியாதையை நிலை நாட்டுவதற்காக ஜஸ்டிஸ் இயக்கம் தோற்றுவிக்கப்பட்டது. சமுதாயத்தை முற்போக்கான முறையில் திருத்தி அமைக்கவேண்டும் என்னும் விருப்பம் தைப்பலவகைச் செய்கைகளால் தெரிவிக்கப்பட்டது. ஜஸ்டிஸ் கட்சியின் அஸ்திவாரக் கொள்கை சமுதாய நீதி வழங்க வேண்டுமென்பதே. ஜாதி ஆதிக்கத்துக்கு சாஸ்திரங்களின் அதிகாரம் இருப்பதாக ஒருகாலத்தில் கருதப்பட்டது. ஆனால் பிற்கால சம்பவங்கள் ஜனங்கள் மனதிலிருந்த அம்மாதிரியான எண்ணத்தை மாற்றி விட்டது. ஜஸ்டிஸ் இயக்கம் நாட்டின் முன்னேற்றத்துக்காக ஜாதி இருமாப்பும், அறிவாளிகளென்னும் அகந்தையும் ஒழியவேண்டுமெங்கிறது.

எங்கள் நாட்டிலிருந்து ஜாதிக் கட்டுப்பாடு ஒழிந்தால் தான் பரிபூரண தேசீயம் தோன்றும். மற்றைய ஜாதியாரையும், தாழ்ந்த வகுப்பாரையும் வழக்கமாய் நடத்துவதில் தோய்ந்திருக்கும் மனப்பான்மை மாறுவிடில் ஜனங்கள் கையில் அதிகாரத்தைக் கொடுப்பது பாதுகாப்பாகாது. நாட்டில் பொறுப்புள்ள சுயாட்சி முன்னேற்றத்திற்கு சந்தேகத்துக்கிடமான வகுப்புவாதத்திலிருந்து ஜனங்களை விடுதலை செய்வது தான் முதற்படியாகும். ஒவ்வொரு சமூகமும் பலம் வாய்ந்ததாகி திருப்தி அடைந்தால்தான் சமுதாயம் பத்திரமானதாக இருக்கும். அப்படியில்லாது போனால் தேசீய முன்னேற்றம் ஒரு சலையானதாகவும், ஒரு ஒழுங்கில்லாததாகவும் இருக்கும். இதையறிந்து தான் ஒவ்வொரு சமூகமும் தனக்குப் போதுமான சுதந்திரம் வேண்டுமென்று போராடுகின்றன.

எல்லோருக்கும் சமமாக தருணம் வழங்கவேண்டும் என்னும் கொள்கையை தாழ்ந்த வகுப்பாருட்பட எல்லோர் விஷயத்திலும் அநுஷ்டிக்காவிடில் அரசியல் அதிகாரம் நிரந்தரமாக இருக்க முடியாது என்பதைப் பார்ப்பனரல்லாதார் இயக்கத்தலைவர்கள் உணர்ந்தார்கள். அதற்கு இரண்டு வகை கொள்கைகளிருந்தன:—

"சமுதாய சேவை செய்யவேண்டியது. அதன் கிளையின் ஒன்றான சுயமரியாதை இயக்கம், வாலிபர் இயக்கம் முதலியவற்றின் வேலை. அரசியல் துறை வேலையைச்செய்ய வேண்டியது ஜஸ்டிஸ் கட்சியின் வேலை.

அது சர்வாதிகாரி முறையை ஒப்புக்கொள்ள முடியாமல், அடிமை மனோ பாவத்தையும், குருக்களுக்கோ அல்லது அரசியல் வாதிகளுக்கோ யுக்திக்குப் பொருத்தமில்லாத நிலைமையில் அடிமையாகப் போவதையும் ஒழிப்பதையே நோக்கமாகக் கொண்டிருந்தது.

சர்க்கார் உத்தியோகங்களில் சில ஸ்தானங்களைக் கைப்பற்றுவதையோ, அல்லது இழந்து விடுவதையோ கட்சி முக்கியமாகக் கருதவில்லை. ஆனால், எல்லாவற்றையும் சமப்படுத்துவதற்கு இது முக்கியமான விஷயம்தான்.

உத்தியோகங்களுக்குப் போதுமான யோக்கியதையுள்ளவர்கள் பலர் இருந்தாலும், பிரதிநிதித்துவமில்லாத அல்லது குறைந்த பிரதிநிதித்துவமுள்ள வகுப்பாரிடமிருந்தே முதலில் அவ்வுத்தியோகங்களுக்கு ஆட்களைத் தெரிந்தெடுக்க வேண்டுமென்று நாங்கள் கூறுகிறோம். இக்கொள்கையினால் ஏற்கனவே, உத்தியோகத்திலிருப்பவர்களின் பாத்தியதைகளுக்குச் சிறிதும் பாதகமேற்படாது. இக்கொள்கை எந்த விதத்திலாவது திறமையைக் குறைக்க வேண்டுமென்றும் உத்தேசிக்கவில்லை. எல்லா சமூகங்களுக்கும சமத்துவமான சந்தர்ப்பங்கள் வழங்கப்பட வேண்டும். இது ஜஸ்டிஸ் கட்சியால் கண்டுபிடித்த ஒரு புதிய கொள்கையல்ல. இது 1846 ஏப்ரல் 23ந் தேதி கிழக்கிந்தியா கம்பெனி போர்டின் நிரந்தர விதிகளில் கூறப்பட்டிருக்கிறது.

பற்பல ஜாதிக்கட்டுப்பாடுகளை உடைத்தெறிந்து ஒருவருக்கொருவர் சகோதரர்கள் என்ற மனோ பாவத்தை உண்டு பண்ண உதவி செய்யக்கூடியமான ஒவ்வொன்றும் இந்தியா முழுப்பொறுப்பாட்சி கவர்ன்மெண்டைப்பெறும் காலத்தைத்துரிதப்படுத்தும். இவ்வேலை மிகவும் கஷ்டமானது.

இக்கட்சிமீது அது ஒரு சமூகத்தை விலக்கி வைத்திருப்பதாகக்குறைகூறப்பட்டது. அந்த விஷயத்தைக்காலஞ்சென்ற பனகால் அரசர் கீழ்க்காணும்விதம் விளக்கியிருக்கிறார்:—

'நமது கட்சி துவேஷத்தின் மீது ஏற்பட்டதென்றும், ஒரு சமூகத்தை வெறுத்துத்தள்ளுகிறதென்றும், அதன்மீது கடுமையாகப்புகார் கூறப்படுகிறது இதில் உண்மையைத்தவிர வேறு ஒன்றும் இருக்கமுடியாது. நீண்டகாலமாகவும், பழக்க வழக்கம் காரணமாகவும் நமது சமுதாய அரசியல் வாழ்க்கையைப்பறிமுதல் செய்து கொண்டிருப்பவர்களின் கட்டுப்பாட்டை உடைக்கநாம் விரும்புவது உண்மைதான். நமது புராதனசாஸ்திரங்களின் நீதிவாக்கியங்களை மீறவும் தங்களை உயர்ந்தவர்களென்று கூறிக்கொள்வதை உடைக்கவும் நாம் முயற்சிக்கிறது உண்மையே. ஏகபோகமாக அனுபவித்து வந்தவர்கள் தங்கள் சுகத்தை விட்டுக்கொடுத்தல் என்றால் முடியாத காரியம்தான் அதனால் அவர்கள் தங்கள் நிலைமையைப் பாதுகாத்துக்கொள்வதற்காக பல பல குறைகூறுவார்கள் அதில் அவர்கள்மிகவும்கைதேர்ந்தவர்கள்.

இந்தியா விடுதலைபெறும்போது அதன் அதிகாரம் பணக்காரர்களிடமும், அறிவாளிகளிடமும், போய்விடாமல் பொது ஜனங்களுக்கு அதில் அதிகாரம் வரும்படியாகப்பார்த்துக் கொள்ளவேண்டியிருக்கிறது சீர்திருத்தத்தில் எல்லா சாதிகளுக்கும், சமூகங்களுக்கும்பிரதிநிதித்துவம் இருக்க வேண்டும்.

கோயமுத்தூர் முனிசிபல் எலக்ஷன்.

கோயமுத்தூர் முனிசிபல் எலக்ஷனில் காங்கிரஸ்காரர்களும் சேர்மன் திவான்பகதூர் சி. எஸ். இரத்தினசபாபதி முதலியார் கட்சியினரும தங்களுக்குள் போட்டியில்லாமல் இருக்கும்படி ஒரு சமாசம் செய்துகொண்டனர். இந்தச்சமாதானத்தின்படி காங்கிரஸ்காரர்களுக்குப்பத்து ஸ்தானங்களை விட்டுக்கொடுப்பதென்றும் மற்றஸ்தானங்களை சேர்மன் கட்சியினருக்கு விட்டுக்கொடுப்பதென்றும் ஏற்பாடு செய்துகொண்டனர். காங்கிரஸ்காரர்கள் சேர்மன் ஸ்தானத்திற்கு போட்டிபோடுவதில்லையென்றும், சேர்மன் கட்சியினர் கதர், மதுவிலக்கு, ஹிந்தி முதலிய காங்கிரஸ் திட்டங்களை ஆதரிக்கவேண்டுமென்றும் முடிவு செய்துகொண்டனர் என ஒருநிருபர் எழுதுகிறார்.

பார்ப்பனசூழ்ச்சிக்கு மற்றொரு உதாரணம்.

பார்ப்பனர்களுடைய நன்மைக்கோ, அவர்களுடைய சௌகரியத்திற்கோ இடையூறான சந்தர்ப்பங்கள் ஏற்படுகின்ற காலங்களில் எல்லாம் அதிலிருந்து தப்புவதற்கு மூன்று விதமான தந்திரங்களை (சூழ்ச்சிகளை அவர்கள் கையாள்வதுண்டு.

1 அவர்களுக்கு விரோதமாயிருக்கின்ற கூட்டத்தில் பிளவை உண்டு பண்ண எவ்வளவு அயோக்கியத்தனமும், அக்கிரமுமானவர்கள் காலுக்குள் நுழைந்தும் அவ் வயோக்கியத்தனத்திற்கும், அக்கிரமத்திற்கும் தாங்களும் உடன்பட்டு அவர்களுக்கு அநுகூலமாயிருந்து கட்சிப் பிரதி கட்சிப் பிளவை யுண்டாக்க முயற்சிப்பது

2 தொட்டதற்கெல்லாம் சட்டம் பேசி விவகாரத்திற்கு இழுத்து விட்டு சட்ட வியாக்யானத்தின் பேரில் காரியங்களில் தடை முறையைக் கையாடி முட்டுக்கட்டை போட்டு இம்சை கொடுப்பது.

3 இந்த இரண்டிலும் தங்கள் காரியம் ஈடேற வில்லையானால் பொது நலம் என்னும் போரால் ஏதாவது கூட்டங்கள், சங்கங்கள் ஆரம்பித்து சில்லரை ஆள்களையும், பொறுப்பற்றவர்களையும் கூலி கிடைத்தால் போதும் எந்த வேலையும் செய்யத் தடையில்லை என்கின்ற ஆள்களையும் மற்றும் சுய நலத்திற்கு எந்தக்கட்சியானாலும் சரி, எந்தக்காரியமானாலும் சரி செய்வதில் ஆக்ஷேபனை இல்லை என்று துணிந்திருக்கும் ஆள்களையும்பிடித்து அப்படிப்பட்ட சங்கங்களில், கூட்டங்களில், முதன்மை ஸ்தானமும், கூலியும் கொடுத்து அவர்களை முன்னணியில் நிறுத்தி அவர்கள் எதிர்ப்பை நடத்தித் தொல்லைகளை விளைவித்துத் தங்கள் காரியங்களை சாதித்துக் கொள்ளுவது.

என்பவைகளான மேற்கண்ட மூன்று தந்திரங்களையும் கையாளுவதே அவர்களது முக்கியமான சூழ்ச்சியாகும்.

இந்த முறையிலேயே தான் வெகு காலமாகவே இந்நாட்டில் அவர்களது ஆதிக்கத்தை நிலை நிறுத்தி வருகின்றார்கள். இதை சுயமரியாதை இழந்து இழிவு படுத்தப் பட்ட நமது பாமர மக்களில் அனேகர் தெரிந்துகொள்ளாமல் ஏமாந்துபோகின்றார்கள். சிலர் தெரிந்தும் தங்களது சுயநலமும் ஜீவியமுமே பிரதானமாகக் கருதி மேற்படி சூழ்ச்சிகளுக்கு ஆயுதங்களாய் இருந்து வருகின்றார்கள். மேலே நாம் கூறியுள்ள மூன்று வித தந்திரங்களும் இப்போது நம்நாட்டில் நடைபெறுகின்ற தேர்தல்களில் பார்ப்பனர்களால் கையாளப்பட்டு வருகின்றன என்பதற்கு ஒரு சிறு உதாரணத்தை எடுத்துக்காட்டக் கருதுகிறேன்.

வரி செலுத்துவோர் சங்கம்

சமீபத்தில் ஒரு ஊரில் முனிசிபல் தேர்தல்கள் துவக்கப்பட்ட உடன் அத்தேர்தல்கள் துவக்குவதற்கு சிறிது காலத்திற்கு முந்தி 5 பார்ப்பனர்கள் ஒரு இடத்தில் ஒன்று கூடி தாங்கள் வரிசெலுத்துவோர் கமிட்டி பிரமுகர்கள் என்று தாங்களே சொல்லிக் கொண்டு பொது ஜனங்கள் பேரால் சர்க்காருக்கு ஒரு விண்ணப்பம் அதாவது ஈரோடு முனிசிபல் நிருவாகம் பார்ப்பனர், பார்ப்பனரல்லாதார் என்கின்ற வகுப்பு உணர்ச்சியில் நடப்பதாகவும், பார்ப்பனர் தெருவுகளை சரிவர கவனிப்பதில்லை யென்றும், பார்ப்பன டாக்டர்கள் இருந்த வைத்திய சாலையை எடுத்து விட்டார்களென்றும், தங்கள் வீதியில் பள்ளிக்கூடம் இல்லையென்றும், வரிகள் தாறுமாறாகப்போட்டிருக்கின்றதென்றும் சில காரணங்கள் கண்டு ஒரு விண்ணப்பம் போட்டார்கள். அது குப்பைத் தொட்டியில் போடப்பட்டது.

கக்ஷி உண்டாக்குதல்

தேர்தல் சமீபித்த உடன் ஒருவருக்கொருவர் சொந்த மனஸ்தாபமிருக்கும் கவுன்சிலர்களைப் பிடித்துக் கட்சிஉண்டாக்கி, அவர்களுக்கு சேர்மென் ஆசை உண்டாக்கி அவரவர்கள் ஒரு கட்சி சேர்க்கும்படி ஏற்பாடு செய்து ஒவ்வொரு தொகுதிக்கும் தங்கள் தங்கள் கட்சி போட்டி போட ஆள்களை நிறுத்தச் செய்தார்கள். இதை அறிந்த சில பிரமுகர்களால்இதைவெளியாக்கி கவுன்சிலர்களைசமாதானப்படுத்தி போட்டிகளை யெல்லாம் குறையும்படி செய்யப்பட்டு விட்டது.

சட்டம் கிளப்புதல்

இது பயன்படாமல் போனதும் தேர்தல்நடவடிக்கைகளைச் சட்டத்தின்படி அது தப்பு, இது தப்புஎன்று கூச்சல் போட்டு சட்ட சம்பந்தமான விஷயங்களை தங்கள் இஷ்டப்படி எடுத்துச் சொல்லி "நாளைக்கு நாமிநேஷன் ஸ்லிப்புகள் கேன்சலாகி புது எலக்ஷன் வரப் போகின்றது" என்று பாமர மக்களையும் பேராசைக் காரரையும் ஏமாற்றிப் பொய் கையெழுத்துகள் வாங்கி சர்க்காருக்குத்தந்தியும், விண்ணப்பமும் அனுப்பி மிரட்டினார்கள்.

"நகர நல உரிமைச் சங்கம்"

இந்த சூழ்ச்சி பயன் படாமல் போனதும நகர நல உரிமைச்சங்கம் என்று ஒன்றைத்திடீரென்று உச்சரித்து அப்படி ஒன்றுஇருப்பதாக ஏற்பாடு செய்து அதன் பெயரைச் சொல்லிக் கொண்டு எலக்ஷன்களில் நாணயக் குறைவுகள் நடக்கின்றதாகவும், அதைக் கவனித்து ஓட்டர்களுக்குப்புத்தி புகட்டுவதாகவும், அபேட்சகர் பணம் செலவு பண்ணி ஓட்டு வாங்குவதையும், ஓட்டர்கள் பணம் வாங்கிக் கொண்டு ஓட்டுப்போடுவதையும் அடியோடு நிறுத்தப் போவதாகவும், அதற்காகவே நகர நல உரிமைச் சங்கம் வேலை செய்யும் என்றும் சொல்லித் தெருவு தெருவுக்கு கூட்டம் போட்டுப் பேசி மக்களை ஏய்க்கப் பார்த்தார்கள். இந்த போலிப் பொது நலத்தின் உண்மையினால் சில பார்ப்பனரல்லாத வாலிபர்கள் தங்களுக்கு ஏதாவது பேசவோ, மற்றவர்களை வையவோ சமயமேற்பட்டதே என்று சிலரும், உண்மையாகவே ஏதாவது காரியத்தைச்சாதிக்கலாமோ என்று சிலரும் கருதி அதில் கலந்து கொண்டார்கள், என்றாலும் இவர்கள் செய்ததெலாம் பார்ப்பனர்கள் தலைமை வகிக்கவும், வாலிபர்கள் மேடையேறி மற்றவர்களை வையவும், பார்ப்பனர்கள் கைதட்டவும் ஏற்பட்டதைத் தவிர வேறு ஒன்றுமே ஏற்படவில்லை. என்றாலும் ஒரு வேடிக்கையான விஷயம் சிரிக்கத் தக்கதாக ஏற்பட்டதை மட்டும் குறிப்பிட்டுவிட்டு இதை முடிக்கின்றேன். அதென்னவென்றால் அக்ராரவார்டில் பார்ப்பனர்கள் தவிர வேறுயாரும் கவுன்சிலராக வரமுடியாது. அங்கு ஒரு பார்ப்பனர் நகர நல உரிமைச் சங்கத்தின் பெயரைச் சொல்லிக் கொண்டு ஸ்லிப்பு போடக் கருதினார். மற்றொரு பார்ப்பனர் அந்த நகர நலவுரிமைச் சங்கத்தை வைதுகொண்டு பார்ப்பனரல்லாதார் தயவைப்பிடித்து கவுன்சிலராகலாம் என்று பார்ப்பனர்களை விட்டு வெளி வந்து பார்ப்பனரல்லாதார் பெயரைச் சொல்லிக் கொண்டு நின்றதுடன் பணம் செலவு செய்வதாகவும் மிரட்டினார். "நல உரிமைச் சங்கத்"தின் பெயரைச் சொல்லிக் கொண்டு நின்ற பார்ப்பனர் பயந்து கொண்டு வேறு தக்க பார்ப்பனரை நிறுத்தயோசித்து ஒரு பணக்காரரும், மற்ற பார்ப்பனர்களை விட யோக்கியர் என்ற பெயர் எடுத்தவருமான ஒருவரை நல உரிமைச் சங்கத்தார் நிறுத்தினார்கள். அவர் நின்றவுடன் "நல உரிமைச் சங்க"த்தை வைது கொண்டு நின்ற பார்ப்பனர்பயந்துகொண்டு, நலஉரிமைச்சங்க ஆசாமிகள் தயவைநாடினார். நல உரிமைச் சங்கத்தார் இவருக்கு உதவி செய்வதானால் நலவுரிமைச் சங்கத்தை ஒப்புக் கொள்ள வேண்டும் என்றும், எலக்ஷன் சம்பந்தமாய் தாங்கள் சங்கம் செய்யும் தகாறுகளுக்கு உதவி செய்வதுடன் பணமும் கொடுக்க வேண்டும் என்றும் கேட்டார்கள். வெளி அபேக்ஷகர் இரண்டுக்கும் சம்மதித்து விட்டார். இதுகேட்ட பழைய ஆசாமி அதாவது நலஉரிமைச் சங்கத்தின்பேரால்நிறுத்தப்பட்ட சங்க அபேக்ஷகப் பார்ப்பனர் நல உரிமைச்சங்க பிரமுகரிடம் சென்று 'இப்படி ஒரு பிரஸ்தாபம் கேள்விப்பட்டேன் வாஸ்தவமா? என்றார். அதற்கு சங்க பிரமுகர் ஆம் என்றார்.

சங்க அபேக்ஷகர்:—இது நியாயமா என்றார்.

சங்க பிரமுகர்:- என்ன செய்வது நிலைமை அப்படிமாறிவிட்டது. நீராவது சங்கத்திற்கு 250 ரூபாய் கொடுக்கிறீரா?

சங்க அபேட்சகர்:- இப்படி கேட்பது நியாயமா?

சங்க பிரமுகர்:- நியாயமோ, அநியாயமோ, அவர்பணம்கொடுப்பதாய் ஒப்புக் கொண்டார். அவ்வளவு தான் சொல்ல முடியும்.

சங்க அபேட்சகர்:- நீரேதான் என்னைக்கூப்பிட்டு நிற்கச்சொன்னீர். பணம் செலவு செய்யக்கூடாது என்றீர் இப்போது இப்படிச்சொல்லுகிறீரே.

சங்க பிரமுகர்:- அதெல்லாம் சரிதான் அவர் ரூபாய் கொடுக்க ஒப்புக்கொண்டார். நாம் சொன்னபடி எல்லாம் சாக்ஷியும் கொடுத்து கையெழுத்தும் போட்டிருக்கின்றார். நீர் பார்ப்பனரல்லாதாரைப்போய்ஓட்டுக் கேட்பதில்லை என்று சொல்லிவிட்டு இப்போது சிலபார்ப்பனரல்லாதாரிடம்ஓட்டுக்கேட்டதாகத்தெரிகின்றது. ஆதலால் உமக்கு ஆதரவளிக்கமுடியாது.

தொடர்ச்சி 13ம் பக்கம் பார்க்க.

அறிவிப்பு.

"குடி அரசு" ஆபீசுக்கு எழுதும் கடிதங்கள், ரிஜிஸ்டர், மணியார்டர்கள்முதலியவைகளை இனிமேல் நாகம்மாள் பிரிண்டர் அன்ட் பப்ளிஷர் 'குடி அரசு' ஈரோடு என்ற விலாசத்திற்கு அனுப்பும்படி தெரிவித்துக்கொள்ளுகிறோம்.

குடி அரசு

ஈரோடு 1931 நவம்பர் 22உ

எல்லாம் பழைய ஆதிக்கம் செலுத்தவே.

—:0:—

நமது நாட்டில் ஆங்கிலப்படிப்பு பரவ ஆரம்பித்ததன் பலனாகவும், ஏழு ஆண்டுகளாக நமது இயக்கம் யாருக்கும் அஞ்சாமல், எந்த எதிர்ப்புக்கும் பின் வாங்காமல் உண்மைகளை எடுத்துக்கூறிப்பிரசாரம் செய்ததன் பலனாகவும், பார்ப்பனீயத்திற்கும், வருணாச்சிரம தருமங்களுக்கும் ஏற்கனவே ஏற்பட்டிருந்த மதிப்பு கொஞ்சம் கொஞ்சமாகத் தளர்ச்சியடைய ஆரம்பித்து விட்டது. இதனால் உயர்ந்த சாதிக்காரர்கள் என்று சொல்லிக்கொண்டும், பூதேவர்கள் என்று கூறிக்கொண்டும், இருந்த பார்ப்பனர்களுடைய கௌரவமும் குறையத்தொடங்கி விட்டதென்பதும் உண்மையாகும். ஆகையால் அவர்கள் காங்கிரசின் பெயராலும், அரசாங்க உத்தியோகத்தின் செல்வாக்காலும், மற்றும் பல பொது இயக்கங்களின் பேராலும், தங்களைத் தலைவர்களாகவும், தியாகிகளாகவும், தேசாபிமானிகளாகவும் செய்து கொண்டு, பார்ப்பனரல்லாத மக்களை ஏமாற்றி வாழ்ந்து வந்தவர்கள், இப்போது மேற்படி பொது இயக்கங்களிலும் பார்ப்பனரல்லாதார் புகுந்து தங்களுக்கும் பங்கு கொடுக்கவேண்டும் என்று போராட ஆரம்பித்தவுடன் வேறு பல பேர்களாலும், பிரசாரங்களாலும் தங்கள் ஆதிக்கத்தை நிலைநாட்ட முயற்சி செய்கின்றார்கள்.

நமது இயக்கமானது, பார்ப்பனர்களை நமது மக்கள் உயர்வாகக் கருதுவதற்குக் காரணமாக இருந்த 'மதம்', 'வேதம்', 'புராணம்', 'ஸ்மிருதி', 'கடவுள்', 'ஆன்மா', 'மோட்சம்', 'நரகம்', 'பாவம்', 'புண்ணியம்' முதலிய அடிப்படைகளிலேயே கை வைத்து அவைகளை அழிக்கத்தொடங்கியவுடன், அவர்கள் விழித்துக்கொண்டு அந்த அடிப்படைகளை மறுபடியும் புதுப்பித்து அவைகள் மூலம் மீண்டும் பழைய ஆதிக்கத்தைப் பெறவே வழி தேடுகிறார்கள். இதற்காகவே பார்ப்பனர்கள், காங்கிரசின் பெயரால், 'மகாத்மா' 'பாரதமாதா' 'அவதாரம்' 'கதர்' 'ஹிந்தி' 'கொடியேற்ற வணக்கம்' 'ஜெயந்தி' விழாக்கள் முதலியவைகளைக்கொண்டு பாமர மக்களின் மனத்தில் பழைய வருணாச்சிரம தருமத்தையும், மூட நம்பிக்கைகளையும் உண்டாக்குவதோடுமட்டும் அல்லாமல், 'பிராமண சபை' 'சனாதன தரும சபை' 'தருமரக்ஷணசபை' 'வேதோத்தாரண சங்கம்' 'அத்வைத சபை' 'ஹிந்து மத சபை' முதலிய சங்கங்களை அமைத்துக்கொண்டு இவைகள் மூலமாகவும், மக்களுடைய பகுத்தறிவைத் தடுத்து, அவர்களை வைதீக மூட நம்பிக்கையுடையவர்களாக்க முயற்சி செய்கிறார்கள். இந்த மாதிரியான வைதீக சபைக்காரர்களுக்கு நாம் நன்றி பாராட்டுகிறோமே யொழிய உண்மையில் அவர்களிடம் துவேஷமோ, கோபமோ அடையவில்லை. ஏனெனில் அவர்கள் பிராமணர்களின் உண்மைமனக்கருத்தை அச்சபைகளிற் செய்யும் பிரசங்கங்களின் மூலமாகவும், தீர்மானங்களின் மூலமாகவும் வெளிப்படுத்துவதால், பிராமணரல்லாதார் ஏமாறாமல் இருக்கவும், பிராமணர்களை நம்பிக்கொண்டிருக்கும் மக்களை எச்சரித்துத் திருத்தவும் முடிகிறது, என்கின்ற இந்தக்காரணத்திற்காகவே நாம் அவர்களுக்கு நன்றி பாராட்டுதக் கூறுகிறோம்.

பார்ப்பனர்களுடையஉண்மையான அபிப்பிராயத்தை அறிய வேண்டுமானால், சென்ற 23—11—31ல் கும்பகோணத்தில் கூடிய தஞ்சை ஜில்லா பிராமண சபையின் இரண்டாவது வருடக் கொண்டாட்டத்தின் நிகழ்ச்சிகளைக் கவனித்தால் விளங்காமல் போகாது. அப்பொழுது, பணக்காரர்களாகவும், ஆங்கிலம் படித்தவர்களாகவும், வக்கீல் தொழில் செய்பவர்களாகவும், அரசாங்க உத்தியோகத்திலிருந்து உபகாரச்சம்பளம் பெற்று நீங்கியவர்களாகவும், உபாத்தியாயர்களாகவும், ஒன்றுந் தெரியாத வைதீகர்களாகவும் உள்ள பார்ப்பனர்கள் ஒன்று கூடிப்பேசிய வார்த்தைகளின் சில பகுதிகளைக்கவனிப்போம். (இந்நிகழ்ச்சி சென்ற 26-11-31ந் தேதி வெளியான "தமிழ் நாடு" பத்திரிகையில் காணப்படுகிறது.)

"நவ நாகரீகத்தில் அகப்பட்டுக்கொண்டு ஆயிரக்கணக்கான பிராமணர்கள் தங்கள் தங்கள் தர்மத்தை மறந்து நிற்கிறார்கள். மாமிசம் உண்ணும் பிராமணனையும், குடிக்கும் பிராமணனையும் நாம் இப்போது பல இடங்களில் காண்கிறோம். எனக்குப் பிரத்தியட்சமாய்த் தெரிந்ததைத் தான் கூறுகிறேன். டில்லியில் ஒரு விருந்துநடந்தது. அதில் சற்றும் அச்சமில்லாமல் மாமிசம் சாப்பிட்ட பிராமணனை நான் அறிவேன்".

கவர்னர்முதலிய பிரமுகர்களுக்கு நடத்தும் விருந்துக்கச்சேரிகளில் ஆதிதிராவிடர்களால் பரிமாறப்பட்டு அநேக பிராமணர்கள் சாப்பிடுகிறார்கள். இது என்ன பிராமணீயம் என்று கேட்கிறேன். ஆதிதிராவிடர்களைக்கோயில்களுக்குள் பிரவேசிக்கக்கூடாதென்று நாம் சொல்லுகிறோம். ஆனால் ஆதிதிராவிடர்கள் கையில் போஜனம் செய்யும் பிராமணர்களை நாம் கோயிலுக்குள் நுழையாமல் தடுக்கிறோமா? கடல்கடந்துவரும் பிராமணர்களை நாம் வரவேற்று உபசரிக்கிறோம். வைதீகர்கள் பிள்ளைகள்கூட ஐ. சி. எஸ். முதலான பரீட்சைகளுக்குச் சீமைக்குச் செல்லுகிறார்கள். அதைப் பற்றி நாம் என்ன செய்கிறோம்?"

என்று தலைமை வகித்த பார்ப்பனர் பேசியிருக்கிறார்.

இவர்பேசியிருப்பது முழுவதும் உண்மையான விஷயம் என்பதில் யாரும் சந்தேகப்படவேண்டியதில்லை. இந்த நிலைமையைச்சீர்திருத்திப் பழைய வைதீக நிலைமைக்கு மறுபடியும் பார்ப்பனர்களைக்கொண்டு வரவேண்டுமே என்னும் உணர்ச்சியோடு அவர்பேசியிருக்கலாம். அதைப் பற்றி நாம் கவலைப்படவேண்டியதில்லை மேற்கூறியபடி 'ஒழுக்கம்' கெட்ட பார்ப்பனர்களும்தங்களைப்பார்ப்பனர்களாகவே மதித்துக்கொண்டு மற்றவர்களைச் 'சூத்திரர்களாக' மதிக்கும் அகங்கார மனப்பான்மைதான் ஒழியவேண்டும் என்று நாம் கூறுகிறோம். ஏதோ இவர் இம்மாதிரி பார்ப்பனர்களின் நடத்தையை வெளிப்படையாகக்கூறிவிட்டாரேயொழிய செய்கையில் மேற்கூறியவாறு 'ஒழுக்கங்கெட்டவர்'களாக உள்ளபார்ப்பனர்களையெல்லாம் பகிஷ்கரிக்க எந்தப்பார்ப்பானும் முன்வரமாட்டான்என்பதை நாம் அறிவோம். நேற்று திருவனந்தபுரத்தில் நடந்த சம்பவத்தைக்கவனித்தாலேஇது விளங்கும். திரு. காந்தி பண்டித ஜவகர்லால்நேரு, லாலா லஜபதிராய், முதலியவர்களைக் கப்பலேறிச்சென்று வந்தவர்கள் என்ற காரணத்திற்காக உள்ளே செல்வதைத்தடுத்தகோயிலில் மகாராஜாவின் உத்தரவு காரணமாக கப்பல் பிரயாணம்செய்த சர். சி. பி. ராமசாமி அய்யர் அவர்கள் செல்லவில்லையா? அவர் இல்லாமல் வேறு ஒரு பார்ப்பனரல்லாதாருக்காக மகாராஜாவால் தடைநீக்கப்பட்டு அப்பார்ப்பனரல்லாதாரும் கோயிலுக்குள் போயிருந்தால் திருவாங்கூரில் உள்ள பார்ப்பனர்களும் பிரிட்டிஷ் இந்தியாவில் உள்ள வைதீகர்களும் சும்மா இருந்திருப்பார்களா? திருவாங்கூரில் 'இந்துமதம் அழிந்துவிட்டது' என்று போடும் கூச்சல் ஆகாயத்தைப்பிளக்கும் அல்லவா? அன்றியும், இதே சர். சி. பி. ராமசாமி அய்யர் அவர்கள் சட்டமெம்பராய் இருந்த காலத்தில் கும்பகோணத்திற்கு வந்திருந்தபோது 'உலககுரு' என்று பார்ப்பனர்களால் கூறப்படுகின்ற 'சங்கராச்சாரியார்' அவரை 'ஆசீர்வதித்து' பாராட்டினாரே. இதுபோலவே 'சூத்திரர்கள்' என்கின்றவர்களிடத்தில் பேசினால் 'பாவம்' என்ற கொள்கையையுடைய 'சங்கராச்சாரியாரும்' மற்றும் வைதீகப் பார்ப்பனர்களும், உத்தியோகப் பார்ப்பனர்களையும், இங்கிலாந்து சென்று வந்தபார்ப்பனர்களையும், கறி தின்னும் பார்ப்பனர்களையும், குடிக்கும் பார்ப்பனர்களையும், வரவேற்றும், ஆசீர்வதித்தும் அவர்களைப் புகழ்ந்தும், அவர்களுடைய வாக்கு உதவியையும், பொருள் உதவியையும் பெற்றார்கள்—பெறுகிறார்களே இவற்றையெல்லாம் யாராவது கண்டித்தார்களா? இல்லையே, ஆகையால் மேற்கூறிய பார்ப்பனர் அபிப்பிராயத்தை வேறு எந்தப்பார்ப்பனரும் ஒப்புக்கொண்டு நடத்தை

யில் அனுஷ்டிக்க முன்வரமாட்டார்கள் என்பது நிச்சயம்.

மற்றொரு பார்ப்பனர் 'ஆங்கிலப்படிப்பினால்தான் பார்ப்பனீயம்கெட்டது' என்று பேசியதற்குப்பதிலாக 'நான் ஆங்கிலக்கல்வி கற்றவனே. ஆனால் என்னுடைய மத தர்மங்களில் அக்கல்வி தலையிட்டிருக்கிறதாய் நான் சொல்ல முடியாது. முக்கியமாய் நாம் நம் சிறுவர்களுக்கு சமஸ்கிருதக் கல்வியைப்புகட்டினால் பல தீமைகள் வராமல் தடுக்கலாம். இது மிகவும் முக்கியமான காரியமாகும்' என்று ஒரு சர்வகலாசாலைப்பட்டம் பெற்ற பார்ப்பனர் பேசியிருக்கிறார். இதிலிருந்து படித்த பார்ப்பனர்களும் உத்தியோகம்செய்யும்பார்ப்பனர்களும் என்னதான்கெட்டாலும் தங்கள் பிராமணீயக்கொள்கைகளைத் தாம் விட்டுவிட்டதாக நினைத்துக்கொள்ளுவதேயில்லையென்பது விளங்கும். அவர்கள் வருணாச்சிரம தர்மமுறைப்படியே தாங்கள் மேலாகவும் மற்றவர்கள் தங்களுக்குக்கீழாகவும் இருக்கவே விரும்புகிறார்கள் என்பதும், அதற்காகவே உழைக்கிறார்கள் என்பதும் உண்மையென்பதில் சந்தேகப்படவேண்டியதில்லை. மற்றும் 'பிராமணீயம் ஒருநாளும் அழியாது அது எந்தக்காலத்திலும்நிலைபெற்றிருக்கும் சக்தியை உடையதாகும். சென்ற யுகங்களிலும் அனேக பிராமணர் நாஸ்திக புத்தியை உடையவர்களாய் இருந்தார்கள். இப்பொழுது இது புதிதல்ல'' என்று ஒருவரும்,

''நீங்கள் இவ்விடத்தில் ஒரு சத்தியம் செய்துகொள்ளவேண்டும். பெண்களை நாம் பள்ளிக்கூடங்களுக்கு அனுப்பக்கூடாது. தகுதியற்ற கல்வியைப் பெண்களுக்குப் போதிப்பதனால் தான் நம்முடைய குடும்பங்கள் கெட்டுப்போகின்றன. நம்மை நாம் பலப்படுத்திக்கொள்ள வேண்டும். சாரதாசட்டத்தை எதிர்த்து அதற்குநாம்கீழ்ப்படியாமல் இருக்கவேண்டும். இந்தியாவுக்கு எதிர்காலத்தில் ஏற்படக்கூடிய அரசாங்கம் நமக்கு அநேக தீங்குகளைச்செய்யப் போவதும், நிச்சயம். ஆகையால் நாம் முன் ஜாக்கிரதையுடனிருந்து காரியங்களைக் கவனிக்க வேண்டும்'' என்று ஒருவரும் பேசியிருக்கின்றனர்.

இந்தப் பேச்சுகளிலிருந்தும், இவ்வாறு பார்ப்பனர்கள் பிரச்சாரங்கள் செய்து கொண்டு வருவதிலிருந்தும் நாம் தெரிந்து கொள்ளவேண்டியது. ''அவர்கள் அனேவரும், மீண்டும் வருணாச்சிரம தருமராஜியத்தை நிலைநாட்டவே பாடுபடுகிறார்கள்'' என்பது தான். இந்த வகையில், பார்ப்பன சபைகளில் உள்ள பார்ப்பனர்களும், காங்கிரசில் உள்ள பார்ப்பனர்களும், அரசாங்கத்தில் உத்தியோகஞ்செய்யும் பார்ப்பனர்களும், மற்றும் எந்த இழிவான நிலையில் உள்ள பார்ப்பனர்களும், தங்கள் ஆதிக்கம் அழியாமல் இருப்பதற்கும், தங்கள் ஆதிக்கம் மறுபடியும் தேசத்தில் நிலைபெற்றுப் பார்ப்பனரல்லாத மக்களை அடிமைப்படுத்துவதற்குமே பல துறைகளிலும் இருந்து உழைக்கிறார்கள் என்ற உண்மையை யாரும் மறுக்க முடியாது.

இந்தக் காரணத்திற்காகவே தான், மதசம்பந்தமான ''அவதாரபுருஷர்கள்'' என்று அவர்களாலேயே கொண்டாடப்படுகின்ற ''ஆழ்வார்கள்'' ''நாயன்மார்கள்'' ''பக்தர்கள்'' முதலியவர்களிலும் பார்ப்பனர், பார்ப்பனரல்லாதார் என்ற வித்தியாசத்தை மனத்திற்கொண்டு பார்ப்பனரல்லாத ''ஆழ்வார்''களுக்கும், 'நாயன்மார்''களுக்கும், ''பக்தர்''களுக்கும், பெருமை கொடாமல் பார்ப்பனர்கள் என்பவர்களுக்கே பெருமை கொடுக்கும் இவர்கள், வருணாச்சிரம தருமத்தைக் குரங்குப்பிடியாகப் பிடித்திருக்கும் திரு. காந்தியை, ''மகாத்மா'' வாகவும் ''அவதார'' புருஷராகவும் கொண்டாடுகின்றனர். இந்தியாவில் உள்ள மதங்களுக்கும், கலைகளுக்கும் நாகரீகங்களுக்கும், பாதுகாப்பு வேண்டும் எனக் கூறும் காங்கிரசைப் போற்றுகின்றனர். இன்றேல், திரு. காந்தியை மூலையில் தூக்கிப் போட்டு விட்டுக் காங்கிரசையும் ஒழித்து விட அவர்கள் முயற்சி செய்யப் பின்வாங்க மாட்டார்கள் என்பது நிச்சயமான செய்தியாகும்.

மக்களுடைய பகுத்தறிவை வளர்ப்பதற்குரிய நூல்களோ, இலக்கியங்களோ இல்லாததைப், வருணாச்சிரம தருமத்தைப் போதிக்கும், துளசிதாஸ் ராமாயணம், பகவத்கீதை முதலிய நூல்கள் உள்ளதுமாகிய ஹிந்திமொழியைப் பிரசாரஞ் செய்கின்றனர். சனாதன தர்மத்தைப் போதிக்கும் சமஸ்கிருதப்படிப்பை விருத்திசெய்யவேண்டுமென்று பேசுகின்றனர்.

இவ்வாறு செய்வதில் உள்ள தந்திரத்தையும் யோசித்துப் பாருங்கள். ஆங்கிலப் படிப்பினால் விஞ்ஞான அறிவும், பிறநாட்டு நாகரிகங்களும், சுதந்திர உணர்ச்சியும் உண்டான காரணத்தால் தான் இன்று பார்ப்பனரல்லாதார் சுயமரியாதை உணர்ச்சி பெற்றிருக்கிறார்கள் என்ற விஷயம் தெரிந்தே மேற்கூறியவாறு பிரசாரஞ் செய்கின்றனர் என்று கூறுவதில் தவறு என்ன இருக்கிறது என்று கேட்கிறோம்.

இச்சமயத்தில் மற்றொரு விஷயத்தையும், கூறி வைதீக அரசியல் பார்ப்பனர்களின் சூழ்ச்சியை வெளிப்படுத்த விரும்புகிறோம்.

சென்ற சில தினங்களுக்கு முன் குருவாயூர் கோயில் சத்தியாக்கிரகத்தைக் கண்டிக்க முன்வந்த, திரு. எம். கே. ஆச்சாரியார், ''கோயில் பிரவேசஞ் செய்ய விரும்புகிறவர்கள், மத பக்தியினால் சுவாமி தெரிசனத்திற்காக கோயிலுக்குள் செல்லவேண்டும் என்று விரும்பவில்லை. அரசியல் காரியங்களை முன்னிட்டு சமவுரிமை வேண்டும் என்பதற்காகவே கோயிற்பிரவேசம் விரும்புகின்றனர் ஆகையால் அதைத் தடுக்கவேண்டும்'' என்ற அபிப்பிராயத்தை வெளியிட்டிருந்தார். இதிலும், எப்படியாவது, மததர்மம் அழியாமல் காப்பாற்றப்படவேண்டும் என்ற அபிப்பிராயம் அடங்கியிருப்பதைக் காணலாம். ''மத தர்மத்தை ஒப்புக்கொள்ளுகிறவர்களுக்குக் கோயில் பிரவேசம் அளிக்கலாம்' என்ற அபிப்பிராயத்தையும் அவரே ஒப்புக்கொண்டிருக்கிறார்.

இதிலிருந்து மத தர்மம், ஒப்புக்கொள்ளப்பட்டு விட்டால் எந்த வகையிலும் பிராமணீயம் அழியாமல் நிலைக்கும் என்பது தான் அவர் கருத்து என்பதை அறியலாம்.

ஆனால், மத தர்மம் ஒப்புக்கொள்ளப்படும்போது, எல்லா வகுப்பினரும் கோயிலுக்குள் செல்லலாம் என்ற உரிமை எப்படி ஏற்படும் என்பது தான் நமக்கு விளங்கவில்லை. இன்னார் கோயிலுக்குள் போகலாம், இன்னார் கோயிலுக்குள் போகக்கூடாது என்பதற்கும் அந்தப் பாழும்மத தர்மந்தானே காரணமாக இருந்து கொண்டிருக்கிறது. ஆகவே, திரு. ஆச்சாரியார் கூறும் மத தர்மத்தையும், பிராமண சபையார் பிரசாரம் செய்யும் மத தர்மத்தையும் எவ்வாறு நாம் ஒப்புக்கொள்ள முடியும்? ஒரு போதும் ஒப்புக்கொள்ளவே முடியாது. அழிக்கப்படவே ஆக வேண்டும் என்றே கூறுகின்றோம். ஆகையால், பார்ப்பனர்கள் செய்யும், எல்லாப் பிரசாரங்களும், மதத்தையும், மத தர்மத்தையும், அதன் மூலம் வருணாச்சிரம தருமத்தையும், பார்ப்பனீயத்தையும் காப்பாற்றவே செய்யப்படும் பிரசாரங்களே என்பதை மீண்டும் கூறி எச்சரிக்கை செய்கிறோம்.

தீண்டாதார் கல்வி.

தாழ்த்தப்பட்டவர்களுக்குத் தனித்தொகுதி கொடுக்கக்கூடாதென்றும், தனித்தொகுதி கேட்டவர்கள் தாழ்த்தப்பட்டவர்களின் பிரதிநிதிகள் அல்லவென்றும், தேசியவாதிகளும் தேசியப் பத்திரிகைகளும் பிரசாரம் செய்துகொண்டு வருகின்றன. ஆனால் அவர்கள் பொதுப்பள்ளிக்கூடங்களில்கூட சேர்ந்து படிப்பதற்கு நமது நாட்டு மக்கள் தடையாக இருக்கிறார்கள் என்ற விஷயத்தை அறிந்தால் தாழ்த்தப்பட்ட தீண்டாதார்களை உயர்ந்த ஜாதி இந்துக்கள் எவ்வளவு கீழாகவும் கொடுமையாகவும் நடத்துகிறார்கள் என்பது விளங்கும். சென்னை சர்க்கார் 1930-31 வருஷத்தில் தொழில் இலாகா செய்துள்ள வேலையைப் பற்றி வெளியிட்டிருக்கும் அறிக்கையில் தீண்டப்படாதார்களுக்காக 1784 தனிப்பள்ளிக்கூடங்கள் இருப்பதாகக்குறிப்பிட்டிருக்கின்றனர். இவ்வாறு தீண்டாதவர்களுக்கென்று தனிப்பள்ளிக்கூடங்கள் வைப்பதற்குக்காரணம் 'கிராமாந்தரங்களில் ஜாதித்துவேஷங்கள் வேரூன்றியிருப்பதால் அவர்கள் பொதுப்பள்ளிக்கூடங்களில் சேர்ந்து படிக்கமுடியவில்லை' என்றும் கூறியிருக்கின்றனர். இதிலிருந்து நமது தேச நிலை எவ்வாறு இருக்கிறதென்பதை அறிந்துகொள்ளலாம். இந்த நிலையில் உள்ள நமது நாட்டில் தீண்டாதார் பொதுத்தொகுதியில் நின்று எவ்வாறு தேர்தலில் வெற்றிபெறமுடியும் என்பதை யோசித்துப்பாருங்கள். பரோடா அரசாங்கத்தார் தீண்டாதார்களும் சமூக சமத்துவம் பெறுவதற்குச் சாதகமாக அங்குள்ள பொதுப்பள்ளிக்கூடங்களில் தீண்டாதார்களை தாராளமாகச் சேர்த்துப்படிப்பிக்க உத்திரவு பிறப்பித்திருக்கின்றனர். ஆனால் நமது நாட்டில், பொதுப்பள்ளிக்கூடங்களில் தீண்டாதார்களைச் சேர்க்க மறுக்கக்கூடாது என்ற உத்திரவு இருந்தும், அதைக் கவனிப்பாரும், அமுலுக்குக் கொண்டு வரவேண்டும் என்னும்கவலையுள்ளவர்களும் இல்

லையெனில், கல்வியிலாக்காவில் உள்ள அதிகாரிகளும், பள்ளிக்கூடத்தில் உள்ளவர்களும் பார்ப்பனர்களாக இருப்பதே காரணமாகும். கிராமாந்தரங்களிலும், நகரங்களிலும், பொதுப்பள்ளிக்கூடங்களில் தீண்டாதார்களைத் தாராளமாகச் சேர்த்துக்கொண்டால், 1784 பள்ளிக்கூடங்கள் தனியாக இருக்கவேண்டிய அவசியம் இல்லையே. அவ்வளவுக்காகும் செலவைக்கொண்டு இன்னும் கல்வியை அதிகமாக விருத்தி செய்யவும் பள்ளிக்கூடங்கள் இல்லாத இடங்களில் பள்ளிக்கூடங்கள் வைக்கவும் முடியுமல்லவா? இதற்காக யார் முயற்சியெடுத்துக்கொண்டு வேலை செய்கிறார்கள் என்று கேட்கிறோம்.

மூட்டைப்பூச்சிகளின் சேஷ்டை.

“பம்பாய் ஐகோர்ட்டிலிருந்து டாக்டர் அம்பேட்காருக்கு ஒரு சம்மன் அனுப்பப்பட்டது. அவர் இங்கிலாந்திலிருப்பதால் இச்சம்மன் திரும்பி வந்து விட்டது. அவர் இந்தியாவில் அடி வைத்தவுடன் அவரை வரவேற்க இச்சம்மன் தயாராயிருக்கும். ஐந்தாவது மாகாண மாஜிஸ்திரேட்டால் வழக்கு விசாரிக்கப்படும். பம்பாய் எல்பின்ஸ்டன் ரோடு, கோவாப்பரேட்டிவ் கிரெடிட் சொசைட்டியின் காரியதரிசி திரு. ராமகிருஷ்ணாவால் மேற்படி வழக்குத் தொடரப்பட்டிருக்கிறது. டாக்டர் அம்பேட்கார், அடிதடி, கொள்ளை, சட்டவிரோதமான கூட்டத்தில் சேர்ந்தது ஆகியவைகளே அவ்வழக்குத் தொடர்வதற்குக் காரணமாகக் காட்டப்பட்டிருக்கின்றது”. என்று பத்திரிகைகளில் ஒரு செய்தி காணப்படுகின்றது. இதன் உண்மை என்னவோ அதைப்பற்றி நாம் தற்சமயம் ஒன்றும் கூற விரும்பவில்லை. ஆனால் காங்கிரஸ், காந்தீயம் இவைகளுக்கு விரோதமான அபிப்பிராயம் உடையவர்கள் யாரோ அவர்களை நம் நாட்டுப்பார்ப்பனர்களும், அவர்களால் தூண்டப்பட்ட கோடரிக்காம்புகளும் சும்மாவிடமாட்டார்கள் என்பதும், மூட்டைப்பூச்சிகள் போல அவர்களுக்கு ஏதாவது தொல்லை தொந்தரவுகளைச் செய்துகொண்டே இருப்பார்கள் என்பதும் ஆகிய விஷயத்தை மாத்திரம் நினைப்பு மூட்டுகிறோம்.

இராமசாமி உடல் நிலை.

உயர்திரு. இராமசாமி அவர்கள் இருதய வியாதியின் பயனாய் ஏற்பட்ட மயக்கம், தலைவலி முதலியவை அதிகப்பட்டதால் டாக்டர் அபிப்பிராயப்படி பெங்களூருக்குச் சென்றிருக்கிறார். அவர் திரும்பி வந்து காரியங்களை கவனிக்க இன்னும் இரண்டு மாதங்கள் செல்லக்கூடும்.

ஈ. வெ. ரா. நாகம்மாள்.

சென்னை சுயமரியாதை மகாநாடு.

சில அசந்தர்ப்பங்களாலும், மழையின் தொந்தரவாலும் குறிப்பிட்டிருந்தபடி 29-11-31ல் மகாநாடு நடைபெற முடியவில்லை. ஆகையால் டிசம்பர் கடைசி வாரத்தில், மிகுந்த விமரிசையாக தவறாமல் சுயமரியாதை மகாநாடு, தொண்டர் மகாநாடு, மாதர் மகாநாடு முதலியவைகள் நடைபெறும் என்று மகாநாட்டின் காரியதரிசிகள் அறிவிக்கின்றனர்.

அறிவிப்பு.

திரு. ஈ. வெ. இராமசாமியாரை நாகையில் கேட்கப்பட்ட பன்னிரண்டுகேள்விகளை பிரசுரித்து அவற்றிற்கு திரு. இராமசாமியார் கூறியபதிலை அடுத்த வாரம் பிரசுரிப்பதாக வெளியிட்டிருந்தோம். ஆனால் அக்கேள்விகளுக்கு பதில் திரு. ஈ. வெ. இராமசாமியாரிடமிருந்து கேட்டு எழுதவேண்டியிருப்பதாலும், அவர் இப்பொழுது உடல் நலத்தின்பொருட்டு வெளியூருக்குப் போயிருப்பதனாலும் அவர் திரும்பிவந்தபின் வெளியிடப்படும்.

காந்தியோடு பந்தயம்.

பூனாவில் கூட்டிய அகிலஇந்திய தீண்டாமை விலக்கு சங்கத்தின் காரியதரிசியான திரு. கே. ஜி. பாத்தகி தாழ்த்தப்பட்டோரின் கூட்டமொன்றில் பேசுகையில் பின்வருமாறு கூறினார்:— நமது எதிர்கால முன்னேற்றமும், க்ஷேமமும் டாக்டர், அம்பெட்கார் போன்ற தலைவர்களை பொருத்தே இருக்கிறது. காங்கிரசாலும் காந்தியாலும் நமக்குநன்மைவிளையப்போவதில்லை. தீண்டாதாரின் பிரதிநிதியாக விருக்க அம்பெட்காருக்குத் தன்னைப் போன்ற உரிமை கிடையாதென திரு. காந்தி கூறியதை நான் பலமாகக் கண்டிக்கிறேன். அகில இந்திய தீண்டாமை விலக்கு சங்கத்தின் காரியதரிசி என்ற ஹோதாவில் திரு. காந்தி அறை கூவியழைப்பதை நான் ஏற்றுக்கொள்ளுகிறேன். ஹிந்து மகாசபையின் பீஷ்மாச்சாரியர்களுடனும், கௌரவர்களுடனும் போராடத்தயாராயிருக்கிறேன்.

திரு. காந்தி இந்தியாவிற்குத் திரும்பியவுடன் இந்தியாவிலுள்ள எந்தப் பெரிய நகரத்திலும் நடக்கும் எந்தத் “தீண்டாதார்” பொதுக்கூட்டத்திலும் திரு. அம்பெட்காருக்கு ஆதரவிருக்கிறதா? திரு. காந்திக்கு ஆதரவிருக்கிறதா? என்பதையறிவதற்காக நான் திரு காந்தியுடன் வாதாடுவதற்குத் தயாராயிருக்கிறேன்.

திரு. ராஜமாணிக்கபண்டாரம் வெற்றி.

சேலம்ஜில்லா சகண்டரி எஜுகேஷன் போர்டின் தலைவர் கனம் ஜி. எப். எப் போக்ஸ் துரை அவர்கள் இங்கிலாந்திற்குச் சென்றிருப்பதால் தலைவர் ஸ்தானம் சென்ற சிலமாதங்களாகக் காலியாயிருந்ததால் 23-11-31 மாலை 5 மணிக்கு சேலம் ஜில்லா எஜுகேஷனல் ஆபீசில் நடைபெற்றது. சேலம் ஜில்லா சகண்டரி எஜுகேஷன் போர்டு தலைவர்பதவிக்கு தாலூகா போர்டு பிரசிடெண்டும் சேலம்ஜில்லா எஜுகேஷனல் கவுன்சில பிரசிடெண்டுமான திருவாளர் எஸ். பி. ராஜமாணிக்க பண்டாரம் அவர்களை சேலம்ஜில்லா எஜுகேஷனல் ஆபீசர் திருவாளர் டி. பி. கிருஷ்ணசாமி முதலியார் எம். ஏ. பி. எல், அவர்களால் பிரேரேபிக்கப்பட்டு நாமக்கல் போர்டு ஹைஸ்கூல் ஹெட்மாஸ்டர் திருவாளர் இ. ஐ ராஜரத்தினம் பி. ஏ. எல். டி. அவர்களால் ஆமோதிக்கப்பட்டு திரு. ராஜமாணிக்கபண்டாரம் அவர்கள் ஏகமனதாய் தேர்ந்தெடுக்கப்பட்டார்.

திரு. எஸ். ஆரோக்கியசாமி நியமனம்.

லால்குடி தாலூகா நகர் கிராமத்திலிருக்கும் திரு. எஸ். ஆரோக்கியசாமி அவர்களை லால்குடி பெஞ்சுகோர்ட்டுக்குகௌரவ மாஜிஸ்திரேட்டாக நியமனம் செய்யப்பட்டிருக்கிறது.

திருமதி. மரகதவல்லி அம்மையார் வெற்றி.

திருமதி. மு. மரகதவல்லி அம்மையார் மீண்டும் காரைக்குடி முனிசிபல் அங்கத்தினராகப்போட்டியின்றித் தேர்ந்தெடுக்கப்பட்டார்.

ஆதிதிராவிட வாலிபர் சங்கம்.

சிக்கத்தம்பூர் பாளையம்.

ஷை சங்கத்தின் மாதாந்திரக் கூட்டம் 15-11-31ல் ஞாயிற்றுக்கிழமை இரவு 7-மணிக்கு பிரஸிடெண்ட் அவர்கள் வீட்டில் பிரஸிடெண்ட் அவர்கள் தலைமையில் கூடி பல தீர்மானங்கள் நிறைவேற்றப் பட்டபின் கூட்டம் கலைந்ததென ஒரு நிருபர் எழுதுகிறார்.

ஈரோடு முனிசிபல் அங்கத்தினர்களுக்கு விருந்து.

19--11--31ந் தேதி மாலை 5 மணிக்கு தாலூகாபோர்டு மீட்டிங் ஹாலில் தாலூகாபோர்டு ஹெட் கிளார்க் திரு. கே. ராமநாதமேனன் அவர்களால் வெற்றிபெற்ற முனிசிபல் அங்கத்தினர்கள் திருவாளர்கள் எம். சிக்கைய நாயக்கர், ஈ. எஸ். கோவிந்தசாமி நாயுடு ஆகிய இருவருக்கும் ஒரு தேநீர் விருந்து நடத்திவைக்கப் பட்டது.

22--11--31ந்தேதி ஞாயிற்றுக்கிழமை இரவு 8மணிக்கு அர்பன் பாங் மேல்மாடியில் வெற்றிபெற்ற முனிசிபல் அங்கத்தினர்கள் யாவருக்கும் பெரிய அக்கிராரம் கிராமப்பஞ்சாயத்துப் பிரசிடெண்டு ஜனாப் எஸ். ஈ. ஜி. முகமது இப்ராஹீம் சாயபு பஹதூர் அவர்களால் ஒரு பெரிய விருந்து நடத்திவைக்கப்பட்டது.

23--11--31ந் தேதி திங்கட்கிழமை மாலை 5 மணிக்கு அங்கத்தினர்கள் யாவருக்கும் திருவாளர்கள். வி. வி. சி. ஆர். முருகேச முதலியார், வி. வி. சி. வி. பெரியசாமி முதலியார், என். எம். ஷண்முக சுந்தர முதலியார் ஆகிய மூவரும் ஈரோடு மகாஜன ஸ்கூலைச்சேர்ந்த சரஸ்வதி ஹாலில் ஒரு பெரிய தேநீர் விருந்து நடத்தினார்கள்.

24--11--31ந் தேதி மாலை 5 மணிக்கு வெற்றிபெற்ற அங்கத்தினர்களுக்கு மகாஜன ஹைஸ்கூல சரஸ்வதி ஹாலில் திருவாளர்கள். எஸ் வி. எஸ். ராமலிங்கம், வி. பி. எம். வையாபுரி, கே. பழனியப்பன் ஆகிய மூவர்களாலும் ஒரு தேநீர் விருந்து நடத்தப்பட்டது.

இவ்விருந்துகளுக்கு முனிசிபல் அங்கத்தினர்களும், உள்ளூர் பிரபலஸ்தர்களும் விஜயம் செய்திருந்தார்களென ஒரு நிருபர் எழுதுகிறார்.

(9ம் பக்கத் தொடர்ச்சி)

சங்க அபேட்சகர்:- நீங்கள் ஆதரிக்க ஒப்புக்கொண்டிருக்கும் அபேட்சகரும் பார்ப்பனரல்லாதார்வீட்டுக்குப்போய்ஓட்டுகேட்டவர்தானே?

சங்க பிரமுகர்;- அதெல்லாம் தெரியாது அக்ராரத்து ஜனங்களுக்கு அவர்மீது கருணைவந்துவிட்டது ஏனென்றால் அவர் சாக்ஷிகொடுத்தார். ஆதலால் நீர் 250 ரூபாய் கொடும், வேலைசெய்யும் ஆட்களுக்கும், சில ஓட்டர்களுக்கும் தாராளமாய் பணம் கொடுக்கவேண்டும். வக்கீல் சங்கத்துக்கும் ஏதாவது கொடுக்கவேண்டும். சம்மதமா?

சங்க அபேட்சகர்:- எலக்ஷனில் பணம் கொடுப்பதை நிறுத்தவேண்டும் என்று சொல்லி ஆரம்பித்த சங்கத்தின் கர்த்தாவாய் இருந்துகொண்டு நீரே இப்போது இப்படி பணம் கேட்கின்றீரே தர்மமா? எப்படியானாலும் முதலில் நீர்சொன்னபடியேநான் ஒருகாசும் செலவு செய்வதில்லை. கிடைத்தால் கிடைக்கட்டும், இல்லாவிட்டால் போகட்டும்.

சங்க பிரமுகர்:-அப்படியானால் நாம் உம்மை ஆதரிக்க முடியாது.

சங்க அபேட்சகர்:- கோபித்துக்கொண்டு வந்து விட்டார்.

மற்ற அபேக்ஷகர் நகரநல உரிமைச்சங்கத்திற்குப்பணம்கொடுத்தார். அதுமாத்திரமல்லவக்கீல்சங்கத்திற்குபணம்கொடுத்தார். அதுமாத்திரமல்ல ஓட்டர்களுக்கும் பணம் கொடுத்தார். சங்கப்பிரமுகர்கள் கூடவே திரிந்து பணம் வினியோகம் செய்தார்கள். கடைசியாக சங்கத்தையும், அதன் பிரமுகர்களையும் கொள்ளை அடிக்கும்சங்கம்என்றும், அயோக்கியர்கள்சங்கம்என்றும், தலையில் களிமண் உருண்டை இருக்கின்றவர்களால் ஆரம்பிக்கப்பட்ட சங்கம் என்றும், அதன் பிரமுகரை ஒரு மாசத்தில் பைத்தியக்கார ஆஸ்பத்திரிக்கு அனுப்பப்போகிறேன் என்றும் சொன்னதோடு மற்றும் எவ்வளவோ கேவலமாய்ப் பார்ப்பனர்களை வைத கனவானே வெற்றிபெற்றார். கடைசியாகத்தேர்தல்லஞ்சத்தை நிறுத்த ஆரம்பித்த சங்கமும் லஞ்சம் வாங்கிக்கொண்டே அக்கனவானை ஆதரித்தது.

அதுமாத்திரமல்ல, வக்கீல்களும் தங்கள் சங்கத்திற்கு 25 ரூ. லஞ்சம், அல்ல--அல்ல, டொனேஷன் வாங்கிக்கொண்டே அவரை ஆதரித்தார்கள்.

இதை எதற்காக வெளியிடுகிறேன் என்றால், பார்ப்பன சூழ்ச்சியையும், அவர்களது பொதுநல வேஷத்தையும் வெளிப்படுத்தவே தானே ஒழிய தனிப்பட்ட நபர்களின் யோக்கியதையைப் பற்றி குறிப்பிடுவதற்கு அல்ல.

நகரதூதன்.

(7ம் பக்கத் தொடர்ச்சி)

றிவு முதலியவைகளை ஒவ்வொருவரும் பின்பற்றி நடக்கவேண்டுமென்றே நம் இயக்கம் அரும்பாடுபடுகிறது. அரசியல் வாழ்வில் சுயநலக்காரர்கள் கலந்து நாட்டைப் பாழாக்காவண்ணம் நமது இயக்கம் கண்காணித்து அவர்கள் புரட்டினை தைரியமாய் அவ்வப்போது வெளிப்படுத்திவருகிறது. இவ்வியக்கம் நாடு முழுவதும் பரவி, இதன் உயரிய கொள்கைகள் கையாளப்பட்ட அன்றே உண்மையான விடுதலையை நம் நாடு அடையுமென்று உறுதி கூறுகிறேன். அவ்வாறின்றி எத்தனை மகாத்மாக்களும், நேருக்களும், மாளவியாக்களும், படேல்களும், ஆச்சாரிகளும் சுயராஜ்யம், "சுயராஜ்யம் ராமராஜ்யம்" என்று கதறிக்கொண்டு வருணாசிரம தர்மத்தையும், சாதித்திமிரையும், வைதீகப்பேயையும் கைவிடாமலே தாங்களே விட்டுக் கொடுக்கக்கூடிய நியாயமான பொதுஜன உரிமைகளைக் கூட சமரசமாக வழங்காமல் வெறும் கூப்பாடு போட்டுக் கொண்டிருந்தால் உண்மையான சமதர்ம அரசியலை அடைய முடியாது என்று தைரியமாய் மும்முறையும் கூறுகிறேன்.

எதிர்ப்பு.

நம் இயக்கத்திற்கு செல்வந்தர்கள், பதவியாளர்கள், பார்ப்பனர்கள், பண்டிதர்கள், அரசாங்கத்தினர்கள், ஆதீனத்தார்கள், சைவர்கள். சாஸ்திரிகள், சாதி வெறி கொண்டவர்கள், சமயப்பித்தர்கள், சுயநலக்காரர்கள், கூலிக்காக கொள்கையை விற்று தேர்தல் நாடகம் நடிப்பவர்கள் முதலிய அனைவர்களும் எதிரிகளாய் இருக்கிறார்கள். எனினும் நம் புனித இயக்கம் இவ்வித எதிர்ப்புகளினிடையே காட்டுத்தீபோல் பரவி வருவதொன்றே நம் இயக்கத்தின் சீரிய நிலையை மெய்ப்பிக்கிறது. இவ்வெதிர்ப்புகளையெல்லாம் நாளடைவில்நமது இயக்கஜோதிமறைத்துவிடும்என்பதில் கிஞ்சிற்றேனும் சந்தேகமில்லை. மற்றும் இந்தியாவுக்கே பெரிய அரசியல் ஸ்தாபனம் என்று திரு காந்தியவர்களால் லண்டன் வட்டமேஜை மகாநாட்டில் மார்தட்டிக் கூறப்பட்டதும், பார்ப்பனீயத்தையும், வருணாசிரமத்தையும், கொடுமை நிறைந்த ராம ராஜ்யத்தையும், ஸ்தாபிக்க முற்படும் காங்கிரசும், பிராமண சபைகளும் சைவசித்தாந்த சபைகளும், தேசியத்திற்கும் சுயமரியாதைக்கும் இடையில் அர்த்தமற்ற ஓர் பெயரைச் சூட்டி வருவாய் ஒன்றையே கருதி சுயநலத்தால் கொள்கையைவிற்றுக்கூப்பாடு போடும் ஒரு சிலரும் நமது இயக்கத்தையும், நமது இயக்கத் தலைவர்களையும் பற்றி உண்மைக்கு மாறாகத்திரித்துக்கூறிஎதிர்த்தாலும் கண்டிப்பாய் அக்கூட்டங்கள் ஏமாற்றமடையும் என்பது திண்ணம்! திண்ணம்!! திண்ணம்!!

கதர்.

கதரின் முன்னேற்றத்திற்கு அரும்பாடுபட்ட பல தலைவர்களையும், தொண்டர்களையும் உடைய நம் இயக்கம் இன்று கதரின் தத்துவத்தை எதிர்க்கும் காரணம் என்னவென்று ஒவ்வொருவரும் சிந்தித்து அறியவேண்டும். கதரினால் நாட்டின் பொருளாதார நெருக்கடியைப் போக்குவதாக வெளிக்குச் சொல்லிக் கொண்டு உண்மையில் வெள்ளைக்கார அரசாங்கத்தைத் தாக்குவதற்காக திரு. காந்தியவர்களாலும், காங்கிரஸ்காரராலும் உபயோகப்படுத்தும் ஓர் ஆயுதமாகும் என்பதை மறுக்கமுடியாது. ஆயிரக்கணக்கான வருடங்கட்கு முன் மனித சமூகம் நாகரீக மடையாமல் காட்டுமிராண்டிகளாயிருந்தகாலத்தில் துணி உற்பத்தி செய்த முறையை இன்றைய தினம் பின்பற்றவேண்டுமென்று அதற்காக கதர் என்ற ஒரு தொழிலை சிருஷ்டி செய்து அதன்மூலம் ஏழைகளுக்கு உதவுவதாக சொல்லப்படும் பொருளில் ஓட்டிக்கிரட்டி பொதுஜனங்களை நஷ்டப்படச் செய்வது ஒழுங்குமுறையாகாது மற்ற நாகரீக மடைந்த தேசத்தார் ஏழைகளைப் பாதுகாக்கவேண்டி பல நவீன இயந்திரத்தொழில்களை நாகரீக முறைகளில் சிருஷ்டிக்கிறார்கள். அப்படியும் தொழில் கிட்டாத ஏழைகளுக்கு உதவ ஒரு பண்டு ஏற்படுத்தி அதிலிருந்து மாதமாதம் உதவியளிக்கின்றார்கள். நமது தேசத்தாரும் இவ்வித நாகரீக முறையைக் கைக்கொள்ளவேண்டும். ஒவ்வொரு நாட்டிலும் தினம் 1-க்கு (12 மணிநேரத்திற்கு) 0-1-0 அணா கூலி கிடைக்கும் கைராட்டுத்தொழிலைப்போல் அல்லாது, இதைப்போன்று பன்மடங்கு அதிக வருவாயை அதே காலத்தில் சம்பாதிக்கக் கூடியதும், தொழிலாளர்கள் தனித்து நின்று வேலைசெய்து தங்கள் கூட்டுறவையும், முன்னேற்றத்தையும் தடைப்படுத்தாதவகையில் கூட்டுறவோடு வேலைசெய்யக்கூடிய இயந்திரத்தொழில்களையும் செய்து வருகிறார்கள்.

ஆனால் கதர்த்தொழில் தொழிலாளர்களைப்பிரித்து வைப்பதோடு, அவர்களின் மிகுதியான வருவாயையும் குறைத்து அவர்களின் முன்னேற்றத்தைத் தடைப்படுத்துகிறது. மற்றும் வெளிநாட்டிலிருந்து கப்பல் சத்தம், ரயில் சத்தம் முதலியவைகளைக் கொடுத்து நம் நாட்டில் இறக்குமதியாகும் துணிகளைவிட,நம் நாட்டிலேயே செய்யப்படும் கதர்த்துணியானது உயர்ந்தவிலைக்கு விற்கப்படுகிறது. இது எப்படி ஏழை மக்களுக்கு நன்மை விளைவிப்பதாகும்? எனவே கதர் என்பது தற்சமயம் நமது நாட்டாரை தேசியத்தின் பேரால் அடக்கியாள முற்பட்டிருக்கும் ஒரு சிறு பான்மைக் கூட்டத்தாரின் சூழ்ச்சியென்று எச்சரிக்கை செய்கிறேன்.

காங்கிரசும்---தீண்டாமையும்.

தற்போது லண்டனில் நடைபெற்று வரும் வட்ட மேஜை மகாநாட்டின் சிறுபான்மைக் கமிட்டிக்கூட்டத்தில் தாழ்த்தப்பட்டவர்களுக்குத் தனித்தொகுதி கூடாதென்று திரு. காந்தி சொல்லிவிட்டு கூட்டுத் தொகுதியை ஆதரிக்கிறார். ஆனால் ஜாதி வெறியும், மதப்பித்தும் கொண்ட இந்தியாவில் உயர்ந்த ஜாதிக்காரர்கள் என்பவர்கள் எப்படி தாழ்த்தப்பட்ட பிரதிநிதிகளுக்கு ஓட்டுக் கொடுப்பார்கள்? என்று திரு. காந்தியையே கேட்கிறேன். இன்றைய நிலைமையில் கூட்டுத்தொகுதியின் மூலம் ஒரு ஆதிதிராவிடர்கூட பிரதிநிதியாக தேர்ந்தெடுக்கப் படமுடியாது என்று உறுதி கூறுகிறேன். ஒற்றுமையும், பலமும் பொருந்திய முஸ்லீம்களுக்கும், சீக்கியர்களுக்கும் தனித்தொகுதிகொடுக்க சம்மதிக்கும் காந்தியார் வாயில்லாப்பூச்சிகளான 7 கோடி தாழ்த்தப்பட்டவர்களுக்கு "தனித்தொகுதியும், விசேஷப் பாதுகாப்பும் என் உயிர்போனாலும் கொடுக்க சம்மதிக்கமாட்டேன்" என்று சொல்லுவது எவ்வளவு அக்கிரமம்,

வஞ்சனையுமாகுமென்று நீங்களே யோசித்துப் பாருங்கள். தீண்டாமை வேலையில் காங்கிரஸ்காரர்கள் யாதொருவித தீவிர முயற்சியும் எடுத்துக்கொள்ளவில்லை. மேடை மீதேறி வெள்ளைக்காரர்களைத் தூற்றி தேசபக்தர்களென்று விளம்பரப்படுத்திக்கொள்ளும் சக்ரவர்த்தி ஆச்சாரிகளும், மூர்த்திகளும், டாக்டர்களும், சாஸ்திரிகளும், தேசியபத்திரிகைகளின் எழுத்து வீரர்களும் இன்றுவரை தீண்டாமைவிஷயத்தில் எடுத்துக்கொண்ட முயற்சியென்ன? ஆனால் சுயமரியாதை இயக்கம் என்ன செய்துவிட்டது? என்று ஒரு சிலர் கேட்கிறார்கள். 47 வருஷங்களாக அறிவாளிகளால் தோற்றுவிக்கப்பட்டு நாட்டுவிடுதலையே முதல் நோக்கமாய்க்கொண்டு உழைக்கும் காங்கிரஸ் எவ்வளவு சாதித்ததென்று எட்டனவில் சொல்லிக்கொள்ளுகிறதோ அதைவிட பன்மடங்கு 7 ஆண்டுகளாக பரவிவரும் நம் இயக்கம் செய்கையில் செய்திருக்கிற தென்பதையும், இனியும் செய்யும் என்பதையும் தெரிவித்துக்கொள்ளுகிறேன். 45 ஆண்டுகளாக தீண்டாமையை ஒழிப்பதாகச்சொல்லும் காங்கிரஸ் இன்றுவரை சமபந்தி போஜனத்தையே அறியாதிருக்கிறதென்பதை தைரியமாய் சொல்வதோடு, சுயமரியாதை இயக்கம் ஆரம்பத்திலேயே இச்சிறு காரியத்தைச் செய்திருக்கிறது.

ஆகையால் சகோதரர்களே! தீண்டாமையென்னும் பேயை நம் நாட்டை விட்டு அறவே ஒழிக்கவேண்டியது நம்போன்ற தொண்டர்களின் முக்கியகடமையாகும். தீண்டாமை என்பது இந்நாட்டைவிட்டு ஒழியும் வரையிலும் இந்தியா அடிமை வாழ்வினின்றும் ஒருநாளும் விடுதலை பெறமுடியாது! முடியாது!! முடியாது!!!

பெண்கள் நிலை.

ஜனத்தொகையில் சரிபகுதியான பெண்ணுலகம் சீர்கேடடைந்ததற்குக் காரணம் அவர்களுக்குப்போதிய கல்வியின்மையே யாகும். ஆண்களைப் போல பெண்களும் அறிவும் ஆற்றலும் உடையவர்களே. ஆனால் ஆண்கள் தங்கள் சுயநலத்தை உத்தேசித்து அவர்களை அறிவற்றவர்களாக மூலையில் முக்காடிட்டிருக்கும்படி செய்து விடுகிறார்கள். ஒருவனது வாழ்நாளனைத்தும் பக்கத்துணைவியாயிருந்து வாழ்க்கையில் உதவிபுரிவது அவனது மனைவியேயாகும். நம்மைப்போல் அவர்களுக்கும் உலக விஷயங்களை அறிய சந்தர்ப்பமும், சுதந்தரமும், சம அந்தஸ்தும் கொடுக்கவேண்டும். பெண்மணிகளின் முன்னேற்றம் தடைபடுமேயானால் அது நாட்டின் முன்னேற்றத்துக்கும் முட்டுக்கட்டை போட்டது போலாகும். பெண்களுள் விதவைகளை ஆண்களைப்போல் மறுமணம் செய்துகொள்ளும்படியும், பெண்களுக்கு சொத்துரிமையும், சகல சுதந்திரங்களையும் அளிக்கவேண்டும்.

நமது கடமை.

தொண்டர்களாகிய நமது உழைப்பே நாட்டிற்கு இன்றியமையாததாகும். உலகத்திலுள்ள எந்த தேசமும் தொண்டர்களின் உழைப்பினாலேயே முன்னேறியிருக்கிறது. மூடப்பழக்கவழக்கங்களும், வைதீக வெறியும், சமயப்பித்தும், சாதி வேட்டையும், பிராமணியக்கொடுமையும், வருணாசிரம அதர்மமும் நிறைந்த நம்நாட்டில், அவைகளை ஒழிக்க ஏற்பட்ட சுயமரியாதை இயக்கத்தின் தொண்டர்களாகிய நாமே இன்னும் தீவிர வேலை செய்யவேண்டும். நாம் இதுபோது சமூகத்துறையிலேயே தொண்டாற்றவேண்டுமே ஒழிய போலி அரசியல் கிளர்ச்சிகளில் தலையிடலாகாது. மாகாணசுயமரியாதைத்தொண்டர் மத்தியபிரசாரக் கமிட்டியார் தங்கள் திட்டத்தை இன்னும் தீவிரமாகப்பிரசாரம் செய்ய முற்படவேண்டுமென விரும்புகிறேன்.

முடிவுரை.

கடைசியாக அன்பர்களே! இவ்வரவேற்புக்கழகத்தார் என்மீதுள்ள அளவற்ற அன்பினாலும் இந்த இயக்கத்திற்கு நான் மேலும் தொண்டாற்ற வேண்டுமென்ற விருப்பத்தின் பேரிலும், வரவேற்புக்கழகத்தலைவராக தேர்ந்தெடுத்துள்ளார்கள் என்று கருதுகிறேன். என்னாலான தொண்டை நம் இயக்கத்திற்கு இனியும் செய்ய முற்படுகிறேன் என்பதை தெரியப்படுத்துவதோடு, வரவேற்புக்கழகத்தாருக்கு எனது நன்றியறிதலை தெரிவித்துக்கொள்ளுகிறேன்.

பின்னர் தோழர் ஐ. ஆ. பெ. விஸ்வநாதம், பொன்னம்பலனார் ராமசுப்ரமணியம், அம்பில் செல்லப்பா முதலியோர்கள் தோழர் அழகர்சாமி அவர்களை தலைமை வகிக்குமாறு ஆமோதித்தார்கள். தோழர் அழகர்சாமியும் தலைமை வகித்து தன் முகவுரையை நிகழ்த்தினார். [முகவுரையும் தீர்மானங்களும் அடுத்தவாரம் வரும்.]

தென் இந்திய மருத்துவர் சங்கம்.

பொதுக்கூட்டம்.

25—11—31ந் தேதி புதன் கிழமை மாலை 5 மணிக்கு சென்னை தங்கசாலை வீதி 221 ஷை சங்க நிலையத்தில் முனிசிபல் கவுன்சிலர் பண்டிட். ஆனந்தம் அவர்களின் தலைமையில் ஒரு பொதுக் கூட்டம் நடைபெற்றது. அது சமயம் பல மருத்துவர்களும், அபிமானிகளும் வந்திருந்தனர்.

அப்பொழுது கீழ்க்கண்ட தீர்மானங்கள் ஏகமனதாய் நிறைவேற்றப்பட்டன.

1. தற்காலம் லண்டனில் நடைபெறும் வட்டமேஜை மகாநாட்டில் இந்தியாவிலுள்ள தாழ்ந்தவகுப்பினருக்காகப் பாடுபடுபவரும், மருத்துவ வகுப்பினருமாகிய டாக்டர். என். ஜி. அம்பேட்கார் பி. ஏ. எல். எல். பி. அவர்கள் அரசியல் திட்டத்தில் தாழ்த்தப்பட்டவர்களின் தற்காப்புக்காகவும், சுயமரியாதைக்காகவும் தனித்தொகுதி கேட்பதைப் பற்றி இக்கூட்டம் பெரிதும் பாராட்டுகின்றது.

2. மேற்குறிப்பிட்ட விபரத்தை வட்டமேஜை மகாநாட்டின் பிரசிடெண்ட் திரு. ராம்ஸே மாக்டனால்டுக்கும், டாக்டர் அம்பெட்காருக்கும், லண்டன் டைம்ஸ் பத்திரிகைக்கும், தந்திமூலமாக அனுப்பப்பட்டது.

3. டாக்டர் ஜி. ராமச்சந்திரம் பிள்ளை அவர்களை இச்சங்கத்திற்கு காரியதரிசியாக தேர்ந்தெடுக்கப்பட்டது என ஒரு நிருபர் எழுதுகிறார்.

"போர் முரசு"

இப்பெயர்கொண்ட சுயமரியாதைக் காலணாப் பத்திரிகை தோழர். ச. ம. சி. பரமசிவம் அவர்களை ஆசிரியராகக் கொண்டு 1932 வருடம் ஜனவரி மாதம் 1ந் தேதி முதல் வெளி வரும். இதனை எல்லா சுயமரியாதைக்காரர்களும் ஆதரிக்கவேண்டுகிறோம்.

விலாசம்:—

மானேஜர்,
"போர் முரசு"
19, பெரிய செட்டி தெரு,
உறையூர், திருச்சி.

நரகம் என்பது ஒரு பூச்சாண்டி.

மலையாளம் சில்க் அங்கவஸ்திரம்.

துய்யவெள்ளை உடல்திக்கானபட்டு தினசரி துவைத்து உபயோகிக்கலாம் சலவையும் செய்யலாம். வருஷக் கணக்கில் உபயோகிக்கக்கூடியது. கம்பி அல்லது குண்டஞ்சுகரையுள்ளது.

	ரூ. அ.
2½ வீதி 5 முழம் பட்டு 1க்கு	1-10
ஷை டஜன் 1க்கு	17-0
21/4 5 முழம் பட்டு 1க்கு	1-6
ஷை டஜன் 1க்கு	15-0
3 வீதி 8 முழம் வேஷ்டி 1க்கு	3-8

S. K. R. வீவிங் பாக்டரி:
கோட்டார், திருவிதாங்கூர்,
தென் இந்தியா.

ராஜ சித்தாதி லேகியம்.

ரிஜிஸ்தர் செய்யப்பட்டது.

இந்த லேகியத்தைச் சுண்டைக்காய் பிரமாணம் காலை, மாலை இரு வேளையும் சாப்பிட்டு வந்தால் தாதுபுஷ்டி, ஜீரணசக்தி இவைகளைக் கொடுத்து நாடிகளுக்குப் பலத்தைத் தரும். சிறுக்கடிப்பு, நெஞ்சுக்கரிப்பு, வயிற்றுப்போக்கு, வயிற்றுவலி, வயிற்றில் கட்டி, மலச்சிக்கல், பாலியருக்குண்டாகும் சொப்பன ஸ்கலிதம் இவைகளைக் குணப்படுத்தும்.

1-நெ. ஒரு சேர்	ரூ. 4-0-0,	அரை சேர்	ரூ. 2-0-0.
கால் சேர்	ரூ. 1-0-0,	அரைக்கால்சேர்	ரூ. 0-8-0.
2-நெ. ஒரு சேர்	ரூ. 3-0-0,	அரை சேர்	ரூ 1-8-0.
கால் சேர்	ரூ. 0-12-0,	அரைக்கால்சேர்	ரூ. 0-6-0.

T. A. ராமலிங்க முதலியார், ஷண்முகாநந்த வைத்தியசாலை.
அங்காளம்மன் கோவில் தெருவு, செவ்வாய்ப்பேட்டை, சேலம்.

மலாய் நாட்டு நண்பர்கள் கீழ்க்கண்ட எங்கள் கம்பெனிசோல் ஏஜண்டு அவர்களுக்கு எழுதி எல்லா விபரங்களும் தெரிந்து கொள்ளவும்.

S. S., F. M. S, J. B.,
மலாய்நாடு பூராவுக்கும் சோல் ஏஜண்டு:—
P. M. வெள்ளைச்சாமி,
நெ. 616 டத்தோகிராமட் ரோடு, பினங்கு. S. S.

தாழ்த்தப்பட்டவர்களின் பிரதிநிதிகள்.

தாழ்த்தப்பட்டவர்களின் பிரதிநிதிகளாக வட்டமேஜை மகாநாட்டிற்குப்போயிருக்கும் திரு. அம்பேத்காரும், திரு. ஆர். சீனிவாசனும் பின்வருமாறு கூறுகின்றனர்.

"இந்தியாவின் பல பக்கங்களிலும் உள்ள தாழ்த்தப்பட்டவர்களிடமிருந்து எங்களுக்கு 54 தந்திகள் வந்திருக்கின்றன. இத்தந்திகளில் ஆமதாபாத்திலிருந்து வந்த தந்தியும் இருக்கிறது. இத்தந்திகளில் 52 தந்திகள், திரு. காந்தி தாழ்த்தப்பட்டவர்களின் பிரதிநிதியென, தானே உரிமை கொண்டாடுவதைக் கண்டித்தும், திருவாளர்கள், அம்பெட்கார், சீனிவாசன் ஆகியவர்களே தாழ்த்தப்பட்டவர்களின் உண்மையான பிரதிநிதிகளென்றும், ஆகையால் தனிப்பிரதிநிதித்துவம் கொடுக்க வேண்டுமென்றும் கூறுகின்றன."

பின்னும் திரு. அம்பெட்கார் கூறியதாவது:—

"நாங்கள் தாழ்த்தப்பட்டவர்களின் உண்மையான மனப்பான்மையே எடுத்துக்கூறினோம் என்பதை, எங்களுக்குக் கிடைத்திருக்கும் தந்திகளே நிரூபித்துக்காட்டும். 54 தந்திகளில் எங்களைக் கண்டிக்கும் இரண்டு தந்திகளும் ஒரு தப்பான எண்ணத்தினாலேயே நாங்கள் கூறுவதை ஒப்புக்கொள்ளவில்லை. திரு. காந்தி அவர்கள் பொதுத்தொகுதியில் தாழ்த்தப்பட்டவர்களுக்கு ஸ்தானங்கள் ஒதுக்கிவைப்பதை ஒப்புக்கொள்வதாகவும், ஆனால் தனித்தேர்தல் தொகுதியைத்தான் மறுப்பதாகவும் இந்தியாவில் ஒரு தவறான எண்ணம் பரவியிருக்கிறது. ஆனால் திரு. காந்தி அவர்கள் பொதுத்தொகுதியில் ஸ்தானங்கள் ஒதுக்கிவைப்பதைக்கூட ஆட்சேபிக்கிறார் என்பதை உணர்ந்தால், அவரை ஆதரிக்கும் சிலரும் கண்டிக்கத்தொடங்கிவிடுவார்கள் என்பது நிச்சயம்.

வியபசாரக்கணக்கு.

1928ம் வருஷத்தில் ருஷியாவில் 25,00,000 வசித்து வந்தனர். அப்பொழுது 3000 வியபிசாரிகள் இருந்தனர். இப்பொழுது மாஸ்கோ நகரில் 500 வியபிசாரிகளே இருக்கின்றனர். 1928 வது வருஷத்திலிருந்து வியபிசாரிகளின் தொகை குறைந்திருப்பதற்குக் காரணம் நாட்டில் வேலையில்லாத் திண்டாட்டம் குறைந்திருப்பதேயாம்.

மதிப்புரைகள்.

பர்மா—இந்தியன்.

இது ரங்கூனிலிருந்து ஒவ்வொரு புதன்கிழமையும் வெளிவரும் ஒரு வாராந்தரப்பத்திரிகை. இதன் ஆசிரியர் திரு. அ. சி. சிவலிங்கம்பிள்ளை அவர்கள். இதில் 'கடவுள்' வாழ்த்தும், வட்டமேஜைமகாநாட்டுச்செய்திகளும், ரங்கூன் நகரச்செய்திகளும் வெளிவருகின்றன. இது தேசியத்தை அனுசரிக்கும் பத்திரிகையாகும். இதன் வருஷ சந்தா ரூ. 3-0-0

விலாசம்:—

ஆசிரியர்:- "பர்மா-இந்தியன்"

121-36th Street Rangoon.

பள்ளு—பறையர்.

இப்புத்தகத்தில் சுயமரியாதை இயக்கத்தத்துவங்களைப்பற்றியும், தாழ்த்தப்பட்டவர்கள் விடுதலை பெறுதற்குச்சமூகத்தில் சம உரிமை பெறுவதற்கு முக்கியமான மதமே சிறந்ததென்றும் கூறப்படுகிறது. 'சமதர்மம், ஏகசகோதரத்துவம் சுயமரியாதை என்பவைதாம்' முஸ்லிம் ஆவதால் முதலில் கிடைக்கும் பலன் என்றும், 'இஸ்லாம் அல்லாதது' என்று கூறுமிடத்து லுங்கி அணிவதும், தொப்பி அணிவதும், தாடி வைத்துக் கொள்ளுவதும், தப்பட்டைகொண்டு வீடுவீடாகச்சென்று தட்டிப்பிச்சை வாங்குவதும், சமாதிகளை வணங்குவதும், சந்தனக்குடம் எடுப்பதும், கொடிமரம் ஏற்றம், குரு, பீர், முர்ஷித், மஸ்தான ஒலி, யோகி, ஆகியவர்களைப்பணிவதும், துப்பட்டி, பர்தா, கோஷா, முகமூடி என்பவைகளும் இஸ்லாம் அல்லவென்றும் விளக்கப்பட்டு உண்மையான இஸ்லாத்தைத்தெள்ளத்தெளிய உணருமாறு கூறப்பட்டிருக்கிறது. இதன் ஆசிரியர் கடப்பையில் உள்ளவரும், சுயமரியாதை இயக்கத்தைசேர்ந்தவருமாகிய திரு. குலாம் என்பவர். இந்நூலுக்கு சென்னை தாருல் இஸ்லாம் ஆசிரியர் திரு. பா. தாவூத்ஷா பி. ஏ. அவர்களும், ஷை பத்திரிகையின் உதவி ஆசிரியர் திரு பு. செல்வராஜ் அவர்களும் சிறந்த முகவுரைகள் எழுதியிருக்கின்றனர். இதன் விலை அணா 0-1-0 ஒருபுத்தகம் வேண்டுவோர் ஒன்றரை அணா ஸ்டாம்பு அனுப்பிப்பெற்றுக்கொள்ளலாம்.

விலாசம்:—

ராஜரசம் கம்பெனி

பொன்மலை, திருச்சி.

கோகுலகீதம்.

இது சுலபமான அழகியபாடல் வடிவமாக உள்ள ஒரு சிறுபுத்தகம். இதில் யாதவ சமூகத்தின் பெருமையும், அவர்கள் சீர்திருத்தம் பெறவேண்டியதின் அவசியத்தையும் வற்புறுத்தப்படுகிறது. விதவைமணம், அச்சமூகத்திற்குள்ளேயே கலப்பு மணம் முதலிய விஷயங்களை வற்புறுத்துவது பாராட்டத்தக்கது. ஒரு புத்தகத்தின் விலை ஆறுபைசா.

விலாசம்;—

எஸ். செல்லம்

சுசீந்திரம் போஸ்ட்

நாகர் கோவில்.

[6ம் பக்கத் தொடர்ச்சி.]

யில் உள்ள இந்த வெட்கங்கெட்ட கடவுள் மற்றவர்களுடைய ஜாதகத்தை ஞானதிருஷ்டியினாலறிவதும் அதை பார்வதிக்கு சொல்லுவதென்பதும் எவ்வளவு வெட்கக்கேடானவைகள். ஐயா, போகட்டும் ஏதோ அவர் தான் சொன்னாரே அதோடு நின்றதா? இல்லை! பார்வதியோ, கந்தனோ ஒன்றுவது விடாமல் இதை பனங்கொட்டைத்தலையர்களான ரிஷிகளுக்குச்சொல்லவேண்டிய காரணமென்ன? இதை யார் பக்கத்திலிருந்து கேட்டுக்கொண்டிருந்து எழுதியது? என்ன பாருங்கள்! எல்லாம மோசமாகவேயிருக்கிறது. சாதாரணமாக ஏதாவது ஒரு விஷயத்தை சிலர் சொல்ல அதை பலர் நம்பும்படியாகச் செய்ய வேண்டியதற்காக பரமசிவன் பார்வதிக்குச்சொன்னது அதை பார்வதி நந்திக்குச்சொல்ல, நந்தியானவர் அப்படியே அதை சாணத்தோடு கலந்து வெளியேதள்ள, அந்த சாணத்தை எடுத்துக்கொண்டுவந்த எங்கள் பாட்டியினுடைய அம்மாயி அதைக்கண்டு பிடித்து பொருக்கியெடுத்து எங்கள் தாத்தாவினிடம்கொடுக்க எங்கள் தாத்தாவானவர் அதை எனக்குச் சொன்னார் என்று சொன்னால் இதை மறுப்பதற்கு ஒருவரும் முன்வருவதில்லை. ஏன்? கடவுள் சொன்னது என்று முதலிலேயே அஸ்திவாரம் போடப்பட்டிருப்பதுதான் அதற்குக் காரணமாகும். ஆனால் அம்மாதிரியாக இனிமேல் ஏமாற்ற முடியாது. எல்லோரும் கண்விழித்துக்கொண்டார்கள் தூங்கினகாலமெல்லாம் மலையேறிவிட்டது. வெள்ளெழுத்துக்காரர்கூட கண்ணாடிபோட்டுக் கொண்டுவிட்டார்கள் 'கௌமார ஜோதிடம்' என்பது கழுதைப்புரளி என்று தெரிந்துவிட்டது. இனிமேல் எந்தவகையிலும் ஏமாற்ற முடியாது இந்த கௌமார ஜோதிடமே காற்றில் பறக்கையில் மற்ற ஜோதிடங்கள் மாளாமல் என் செய்யும்? என்பதோடு இதை முடிக்கிறேன்.

இந்தியா முன்னேற்றமடையவேண்டுமானால்?

கவி. தாகூரின் அபிப்பிராயம்.

மாஸ்கோவில் உள்ள புரொபசர் பீரிட்ரோ என்பவர் கவி. தாகூருக்குக் கீழ்க்கண்ட தந்தியை அனுப்பினார்.

"ருஷியாவில் கைத்தொழில், விவசாயம், விஞ்ஞான ஆராய்ச்சி ஸ்தாபனங்கள், சர்வகலாசாலைகள், பாடசாலைகள் கலைவளர்ச்சி இவைகள் உயர்ந்தநிலையை அடைந்ததற்கு நீங்கள் என்னகாரணம் கூறுகிறீர்கள்? அடுத்த 5 வருஷங்களுக்கு உங்களுக்குள்ள வேலைத்திட்டம் என்ன? அவைகளுக்குத்தடை யாது?"

இதற்குக்கவி. தாகூர் அவர்கள் அனுப்பிய பதில் தந்தி.

"உங்களுடைய வெற்றிக்குக் காரணம் தனிப்பட்ட நபர்களிடமிருந்த செல்வம், மானிட சமூகத்தினிடம் வந்துசேர்ந்ததேயாகும்.

நாங்கள் கீழ் நிலையில் இருப்பதற்கு எங்களுக்கு சமூகத்துறையிலும், அரசியல் துறையிலும், ஏற்பட்டுள்ள பைத்தியக்காரத்தன்மைகளும், வெறிபிடித்ததன்மைகளும், கல்வியில் முன்னேற்றமடையாததும்தான் காரணமாகும்.

தீண்டாமைக்குச்சாவுமணி

—:0:—

பரோடா சர்க்காருக்கு உத்தரவு.

தீண்டாதாருக்காக ஏற்படுத்தப்பட்டுள்ள தனிப்பள்ளிக்கூடங்களை 23ம்தேதிமுதல் மூடிவிடும்படி பரோடா சமஸ்தான சர்க்கார் உத்தரவு பிறப்பித்திருக்கின்றனர்.

16ம்தேதிமுதலே பரோடாவில் இவ்வேலை ஆரம்பமாகிவிட்டது இனிமேல் 'தீண்டாதார்' சாதாரண பள்ளிக்கூடங்களிலுள்ளமற்ற உயர் ஜாதி மாணவர்களுடன்பயில்வார்கள்.

ஆதிதிராவிடர்மகாநாடு.

கோயமுத்தூர் ஜில்லா காங்கயம் டிவிஷனிற்கடுத்த வெள்ளகோவிலில் ஆதிதிராவிடர் 2-வது மகாநாடு 7-12-31ம்தேதி மாலை 8-30 மணிக்குக்கூடும் நீலகிரி ராவ்சாகிப் வி.ஐ. முனிசாமிபிள்ளை எம். எல். சி. அவர்கள் தலைமை வகிப்பார். ஆர். கே. ஷண்முகம் எம். எல். ஏ. மகாநாட்டைத்திறந்துவைப்பார். அன்று மாலை ஆதிதிராவிட வாலிபர் மகாநாட்டிற்கு திரு. சாமி சகஜானந்தம் எம். எல். சி. அவர்கள் தலைமை வகிப்பார். அவ்வமயம் ஆதிதிராவிட அபிமானிகள் பலர் சொற்பொழிவாற்றுவார்களென மகாநாட்டின் காரியதரிசி எழுதுகிறார்.

தூத்துக்குடி.

இவ்வூர் இரக்ஷண்யபுரம் டாக்டர் மாதவன் நாயர் வாசகசாலை அங்கத்தினர்களால் 17—10—31ம் தேதியன்றும் 20—10—31ம் தேதியன்றும் (தசரா எழாம் திருநாள், பத்தாம் திருநாள்) சுயமரியாதை வாக்கியங்கள் நிறைந்த காகித வெளிச்சப் பெட்டிகளுடனும், பக்க வாத்தியங்களுடனும் சுயமரியாதைக் கோஷ்டி ஊர்வலமாகஷ்டிவாசகசாலையினின்று பெருத்த கூட்டத்தினிடையே முக்கிய வீதிகளில் சுற்றி வந்தனர். ஒவ்வொரு சந்தியிலும் சுயமரியாதைக் கொள்கைகளை பொது ஜனங்கள் நன்குணருமாறு உபந்நியாசங்களும், இன்னிசைப் பாடல்களும் பாடப்பட்டன. இவ்வூர் முனிசிபல் கவுன்சிலர் திரு. மாசுவராஜ் அவர்களால் உள்ளூர் காங்கிரஸ் புரட்டை விளக்கும் கீதம் ஒன்று பாடப் பட்டது. அது சமயம் மக்கள் ஆரவாரம் செய்தனர். இவ்வூரில் இதுவே முதல்தரமான சுயமரியாதை ஊர்வலமாகும் என்று இதை அமைதியுடன் நடத்திவைத்த ஷ்டி வாசகசாலை அங்கத்தினர்களை பாராட்டுகிறோமென ஒரு நிருபர் எழுதுகிறார்.

சடங்கற்ற திறப்பு விழா.

தூத்துக்குடி கிரேட் காட்டன் ரோடு 274 நெம்பர் கடையில் தோழர் சாமுவேல் அவர்களது “நியூஸ் மார்ட்”, “சமதர்ம ஜவுளி ஸ்டோர்” என்னும் நிலையங்கள் 2-11-31 ம் தேதி யாதொரு சடங்குகளின்றியும், ஆடம்பரமின்றியும் தோழர் க. அருணாசலம் அவர்களால் திறந்து வைக்கப்பட்டது. அவ்வமயம் ஏராளமான தோழர்கள் விஜயம்செய்திருந்தார்கள். ஷ்டி நிலையங்களில் எந்த நேரங்களிலும் சண்டமாருதம், திராவிடன், ஜஸ்டிஸ், குடி அரசு, புதுவைமுரசு, குமரன், தமிழன் முதலிய தினசரி வாரப்பத்திரிகைகளையும், புத்தகங்களையும் தோழர் சாமுவேல் அவர்கள் லகுவில் கிடைக்கும்படி செய்து பொது மக்கள் கல்வியபிவிர்த்தியடையும்படி செய்து வருகிறாரென ஒரு நிருபர் எழுதுகிறார்.

திருவளர்சோலை.

திராவிட வாசகசாலை.

16-11-31ம் தேதி திங்கட்கிழமை 12 மணிக்கு இவ்வூர் கிராம சீர்திருத்த சங்கத்தின் பொதுக்கூட்டமொன்று திராவிட வாசகசாலையின் ஹாலில் நடைபெற்றது. திருவாளர் குமாரசாமி தம்பிரான் அவர்கள் தலைமை வகித்தார்கள். கூட்டத்திற்கு பல கிராம முக்கியஸ்தர்கள் வந்திருந்தனர். தலைவர் வேண்டுகோளின்படி திரு. அ. அழகப்ப பிள்ளை அவர்கள் “கிராம சீர்கேடும். கிராமசீர்த்தமும்” என்னும் பொருள் பற்றி மூன்று மணி நேரம் பேசிய பிறகு தீர்மானங்கள் நிறைவேறின பின் கூட்டம் கலைந்ததென ஒரு நிருபர் எழுதுகிறார்.

விவாகம்.

உயர் திரு. டி. முருகேசன் அவர்களின் குமாரர் திரு. செல்லப்பா பி.ஏ. அவர்களுக்கும், உயர் திரு. பி.வி. மாணிக்கம் நாயக்கர் அவர்கள் குமாரத்தி பி. ஜீவமாணிக்கம் பி.ஏ. அவர்களுக்கும் 1931வது வருடம் நவம்பர் மாதம் 30ம் தேதி திங்கள்கிழமை காலை 10 மணிக்கு சென்னை பிரமசமாஜத்தில் விவாகம் நடைபெறும். அவ்வமயம் மணமகனை ராவ்பகதூர் திரு. எம். வெங்கட்டப்பா பி.ஏ., அவர்களும், மணமகளை டாக்டர் திருமதி எஸ். முத்துலக்ஷிமி ரெட்டி எம். பி.. சி. எச்., அவர்களும் அறிமுகப்படுத்தி வைப்பார்கள்.

அன்று மாலை 5 மணிக்கு உயர் திரு. பி. வி. மாணிக்கம் நாயக்கர் அவர்களின் பங்களாவில் ஒரு டீ தேநீர் விருந்து நடைபெறும் என ஒரு நிருபர் எழுதுகிறார்.

மாதர் சுதந்தரச் சங்கம்.

அருப்புக்கோட்டை தாலூக்கா முத்து ராமலிங்கபுரம் திரு. வா. வெ. வெங்கிடசாமி அவர்கள் இல்லத்தில் 15-11-31ம் தேதி இரவு 7 மணிக்கு அழகியநல்லூர்சுயமரியாதைப்பாவலர் திரு. அ. வெங்கடசாமி அவர்கள்மாதர் சுய வுரிமைப் போரின் அவசியத்தைப் பற்றியும், மாதர்கள் சங்கங்கள் கூட்ட வேண்டிய அவசியத்தைப் பற்றியும் கூற, ரெட்டப்பட்டி போர்டு பாடசாலைத் தலைமை ஆசிரியர் திரு. எல். என். ஜான் ரெட்டியார் அவர்களை சங்கத்தை திறந்து வைக்குமாறு கேட்டுக் கொண்டார். அதன் படியே திரு. ரெட்டியார் அவர்கள் ஒரு விரிவான சொற் பொழிவாற்றி சங்கத்தை திறந்து வைத்தார் இக் கூட்டத்திற்கு சுமார் 50 பெண்மணிகளும் ஏராளமான ஆடவர்களும்விஜயம செய்திருந்தார்கள். இச்சங்கத்திற்கு திருமதி ஜான் ஜெபமணி அம்மாள் தலைவராகவும் திருமதி மூக்காயி அம்மன் காரியதரிசியாகவும், திருமதி. வா. வெ. சொக்கம்மாள் பொக்கிஷதாரராகவும் தேர்ந்தெடுக்கப் பட்டார்களென ஷ்டி சங்கக் காரிய தரிசி எழுதுகிறார்.

இலங்கை

இந்தியா சுயமரியாதைச்சங்கம்.

இச்சங்கத்தின் பொதுக்கூட்டமொன்று 14-11-31ம் தேதி கொழும்புகொன்பட்டி ‘ஞானாணியர்’ தெனிந்திய கிறிஸ்துவ சங்கத்தின் அறையில் திரு. டேட்டஸ்ஷி கனகசபை அவர்களின் தலைமையில் கூடியது. இக்கூட்டத்திற்கு ஏராளமான பொதுஜனங்கள் வந்திருந்தனர். பின் திருவாளர்கள் பி. அருணாசலம், எஸ். பெரியசாமி, இன்னும் பல அன்பாகள் சுயமரியாதை இயக்கத்தின் கொள்கைகளையும், புதுவை முரசின் ஊழியத்தைப்பற்றியும், பேசியபின் சில தீர்மானங்கள் நிறைவேறியபின் கூட்டம கலைந்தது என ஒரு நிருபர் எழுதுகிறார்.

சாமிகளுக்கு ஆபத்து.

விஜயநகரத்திற்கு நான்கு மைல்கள் தூரத்திலிருக்கும் ராமதீர்த்த கிராமத்தில் ராமர் ஆலயத்தின் கதவை உடைத்து, உள்ளே சென்று ராமர் விக்கிரகத்தை மூன்று துண்டாக உடைக்கப்பட்டும், சீதா விக்கிரகத்தின் தலை துண்டாக்கப்பட்டும், லக்ஷ்மண விக்கிரகத்தை வேரோடு அசைத்து பிடுங்கி போடப்பட்டிருக்கிறது. இக்கோவில் விஜய நகரசமஸ்தான ஆதிக்கத்திற்கு உட்பட்டதாகையினால் இச்சம்பவத்தை சமஸ்தானத்திற்கு தெரிவிக்கப்பட்டிருக்கிறது. தேவஸ்தான சூப்பரின்டெண்டும், அதிகாரிகளும் அக்கிராமத்திற்கு சென்றிருக்கிறார்களென ஒரு நிருபர் எழுதுகிறார்.

மைலாப்பூர் அம்மன் தாலி அறுபட்டாள்.

மைலாப்பூர் விருபாக்ஷீஸ்வரர் கோவிலில் உள்ள ஒரு பெண் விக்கிரகத்தின் தாலியை யாரோ திருடிக்கொண்டு போய்விட்டதாகவும், அம்மனுக்கு உடுத்தியிருந்த சேலையும் கோவில் தோட்டத்தின் மூலையில் கிடந்ததாகத் தெரிகிறது.

சர்வலோக நாயகியாகிய அம்மன் தன்னுடைய தாலியையும் பறிகொடுத்துவிட்டு, சேலையைக்கூட காப்பாற்றிக்கொள்ள சக்தியில்லாமல் போனபடியால், அவ்வம்மாள் மீது நம்பிக்கையில்லை என ஒரு நிருபர் தெரிவிக்கிறார்.

சுயமரியாதைத் திருமணம்.

20-11-31ம் தேதி காலை 8 30 மணிக்கு சிவகெங்கை பலசரக்கு வியாபாரம் திரு. கண. குருசாமி நாடார் குமாரத்தி செல்வி. அமிர்தத்தம்மாளுக்கும், விருதுநகர் ந. கி. சங்கரலிங்க நாடார் குமாரர் செல்வன் கந்தசாமிக்கும் சுயமரியாதை முறையில் திருமணம் தோழர். ஆர். சுப்பிரமணியம் அவர்களால் சிறப்பாக நடத்தி வைக்கப்பட்டது என ஒரு நிருபர் எழுதுகிறார்.

வர்த்தக குமாஸ்தாக்கள் சங்கம் ஈரோடு.

22-11-31ம் தேதி ஈரோடு வர்த்தக குமாஸ்தாக்கள் சங்கத்தின் ஆதரவில், ஈரோடு முனிசிபல் கவுன்சிலருமாகிய ஸ்ரீமான் தேசவலால்காளிதாஸ் சேட் தலைமையின்கீழ் நடைபெற்றது. பின்னர், “நமது கடமை” என்பது பற்றி பிரபல முனிசிபல் கவுன்சிலர் திரு. மு. க. முத்துக்கருப்பஞ் செட்டியார் அவர்கள்தெளிவாகப்பேசினார். பின்னர் சங்கத்தலைவர் ஈ. ஜி. சின்னுசாமி நாயுடு அவர்களால் வந்தனோபசாரம கூறப்பட்டு தலைவர் முடிவுரையுடன் கூட்டம் இனிது முடிந்தது என காரியதரிசி எழுதுகிறார்.

(4-ம் பக்கத்தொடர்ச்சி)

ஊழியஞ்செய்ய வேண்டுமென்ற உயரிய கொள்கை ‘கடவுள்’ ‘திருப்பணி’யால் இடைஞ்சலடைகின்றது. உண்மையில் மக்களுக்குத் தொண்டாற்ற வேண்டுமென்று விரும்பும் ஆத்திகரும் தமது தவறான சமய உணர்ச்சியின்படி ‘கடவுளு’க்குச் செய்யும் சேவையினால் தமது வாழ்க்கையின் முக்கியத்தை யிழந்து விடுகின்றனர். இதின்றான் நாத்திகர் ஆத்திகரோடு மோதுகின்றனர். பயனுடைவாழ்க்கையைக் ‘கடவுள்’ உணர்ச்சி பாழ்படுத்துகின்றது. அந்த உணர்ச்சி ஒழியுமேல் ஆத்திகரும், நாத்திகரும் ஒன்றுபட்டு மக்களது முன்னேற்றத்திற்கு நன்கு பாடுபட வியலும். ஆயினும் அது எளிதில் இயலுங்கருமமெனக்கருதிடக் கூடுவதில்லை.

புனித வாழ்க்கை, பயனுடை வாழ்க்கை என்ற இரண்டினுள் பின்னதே சிறந்ததென முன்பார்த்தோம். இரண்டையும் நாத்திகர் பலர் நடத்தி யுள்ளனரெனவும் சரித்திரம் சான்று பகருகின்றது. எனவே ஆத்திகம் நாத்திகம் என்ற இருகொள்கை களின் மூலதாரத் தத்துவம் கிஞ்சித்து வேற்றுமையுடன் ஒன்றெனல் உறுதி. எதிர்காலத்தில் பாரதப்பெருநாட்டில் ‘நாத்திகம்’ ஒரு பலம் பொருந்திய கொள்கையாகப் பரவுமென்பதில் ஐயமின்று. அங்ஙனம் பரவுவதால் அதனால் விளைவது நன்மையே யென்பது எனது திடமான நம்பிக்கை எனவே, ஆத்திகரை நான்வேண்டுவதென்னவென்றால்--தயவு செய்து நுஞ்சோதாராம் நாத்திகரை இழிவுபடுத்தற்க; எதிர்த்துப் போர்புரியற்க, அன்னாரும் நாட்டுக்கு--மக்களுக்கு நலஞ்செய்பவே உழைக்கின்றனர். ‘ஆத்திகரெல்லாம் ஆத்திகரல்லர், நாத்திகரெல்லாம் நாத்திகரல்லர்’ வேடதாரிகளான நம் ஆத்திகர் பலர் உண்மையில் குரூரமனத்தினரான கொடியரும், கொலைக்கஞ்சாப்பாவகருமாயிருக்கின்றனர். ‘கடவுளை’ மறுத்து, சமயங்களை வெறுத்து, மதக்கோட்பாடுகளைத் தகர்த்தெறிய முற்படும் ‘நாத்திகர்’ உண்மையில் உத்தமரே--நல்லோரேயாவர், ஆதலின் அவருடன் இயன்றளவு ஒன்றி ஒத்துழைத்துநாட்டுக்கும், மக்கட்கும் நலஞ்செய முற்படுவீராக.

மேற்போந்தவற்றை எனது ஆத்திக அன்பர்கள் அலசிப்பார்த்து, ஆராய்ந்து சிந்தை செய்து முக்கியமும், முதன்மையுமானது நாட்டுத்தொண்டு, மக்கள்பணி என்பதை உள்ளத்தே கொண்டு வேண்டுவன செய்ய விரைவில் முற்படுவார்களாக.

சுயமரியாதைத் திதி.

செங்கற்பட்டு தாலூகாவைச் சேர்ந்த சிறு குன்றத்திலிருக்கும் திரு. கஜானனம்பிள்ளை தமது தாயாரின் திதியை 28-11-31-ம்தேதி யன்று மூடப் பழக்க வழக்கங்களை ஒழித்து சுயமரியாதை முறைப்படி கொண்டாடினர் என ஒரு நிருபர் எழுதுகிறார்.

ரோஜா முத்தையா ஆராய்ச்சி நூலக அறக்கட்டளை

(3ம் பக்கத் தொடர்ச்சி)

தெரியாதபடியால், மனம்போனவாறு உத்தேசித்துவந்தார்கள். இதனுல் தான், ஒரு சுருதி மற்ளெரு சுருதிக்கு மாறுபட்டு எழுதப்பட்டிருக்கிறது. இந்த சுருதிகள் ஒரு காலத்தில் ஒருவரால் எழுதப்பட்டவைகள் அல்ல—அந்தந்த காலங்களில் யார் யார் சிருஷ்டியைப்பற்றி யோசிக்கத் தொடங்கினூர்களோ அவரவர்கள் மனம் போனபடி உத்தேசித்தார்கள். அவரவர்களுக்கு ஆதாவு அவரவர்களுடைய மனமே. "மனத்தினுல் எண்ணித்தானே வந்தது இவ்வுலகம் என்ருர்" ஒருவர். "வெளிச்சம் உண்டாகுக" என்றபோது உலகம் உண்டாயது என்ருர் மற்ளெருவர். சில தெய்வகணங்கள் ஆகாயமார்க்கமாக விதை விதைத்துக் கொண்டு போகையில் அவ்விதைகள் உலகங்களாகவும், நட்சத்திரங்களாகவும் முளைத்தனவென்று சிந்தித்தார் இன்னெருவர். இவ்விதமாக சிருஷ்டிக்கதைகளைக்கட்டி, அதற்கு வேண்டிய சொற்பொழிவுகளை அமைத்து வேதங்களெனவும், சுருதிகளெனவும், புராணங்களெனவும், பெயரிட்டு, பாமர உலகம் நம்பி நடக்க சூழ்ச்சிகள் செய்துள்ளார். ஒவ்வொரு புராணக்கதையும் இவ்வாறே கற்பிக்கப்பட்டன. சிற்சில கிராமாந்தரங்களில் ஆதிகாலங்களில் வழங்கி வந்திருந்த ஊர்க் கைகளையும், ஜாதிக் கதைகளையும் (Folk Tales) கூட்டி, புராணமெனப் பெயரிட்டு, பார்வதிக்கு பரமசிவன் சொன்ஞர், அதைக்கேட்டிருந்த ஜனங்கள், ஜனூர்த்தருக்குச் சொன்ஞர் என்று மழலைக்கதைகளை கட்டி, பொது ஜனங்களின் மூடபக்தியை வளர்க்கச்செய்து அதன் பயனுககோயில்களையும், குளங்களையும், கோபுரங்களையும் கோடானகோடி மக்களைக்கொண்டு கட்டுவித்து நாளைக்கும் நமது நாட்டு ஜன சமூகங்கள், இக்கட்டுக்கதைகளை உண்மையென நம்பும்படி செய்து வாழ்க்கை முழுமையும் பயம் நிறையச்செய்துள்ளார்கள்.

இந்த பயம் குழந்தைப் பருவத்திலேயே ஆரம்பிப்பதைப்பார்க்கலாம். அதாவது பூதமிருக்கின்றது, பேயிருக்கின்றது என்று பயத்தைக்குழந்தைகளுக்கு முதல் முதல் ஆரம்பிக்கின்ருர்கள். அதன் பிறகு ஐந்து கண்ணனை சிருஷ்டித்து, குழந்தைகளை மிரட்டி வருகின்ருர்கள். பிறகு புலி, கரடி, சிங்கம் விழுங்கிவிடுமென்று குழந்தைகளை அதட்டுகிருர்கள். கடவுளைத்தொழு இல்லாவிடில் அவர் தண்டிப்பார் என்றும் நரகமென்ருென்றுளது அதில் கொண்டு போய் போடுவார்களென்றும், கட்டுக்கதைகள் மூலமாகவே மனித குலத்தை பயப்படச்செய்து வருகின்றனர். இவ்வித பயத்தில் வளர்ந்து வந்த சிறுவன், சிறுமிகள் வாழ்வு முழுமையும் பயந்தே எதையும் விசாரித்துணராமல் மூடநம்பிக்கைகளில் ஆழ்ந்து, சஞ்சலத்திலேயே காலம் கழித்து வருகின்றனர். கடவுள் பயமும், நரக பயமும், காட்டேரி முனீஸ்வரன், பயமும், மாரியப்பன் பயமும், இன்னும் பற்பல பயங்களும் நமது தொட்டில் பழக்கங்களென அறிக. மதங்களின் ஆபாசங்களையும், புராணப் பித்தலாட்டங்களையும் தெள்ளத்தெளிய எடுத்துக்காட்டி வந்தும் உலகம் பொய் நம்பிக்கைகளிலும், மூடபக்திகளிலும் ஆழ்ந்திருப்பது நமது தொட்டில் பழக்கங்களே காரணமென்றறிக. (தொடரும்)

நாயக்கர்களின் ஜாதித் துவேஷம்.

அருப்புக்கோட்டைக்கடுத்த புளியம்பட்டியில் உள்ள நாயக்கமார்கள் அவர்களின் வீதிவழியாக காட்டிற்குச்சென்று புல் கட்டுகள் கொண்டு வரும் ஆதிதிராவிடசகோதரிகளை அத்தெருவழியாக வரக்கூடாதென்று கண்டவாறு தூஷித்து புல்லுக்கட்டுகளைபிடுங்கிஎறிந்து கொடுமைப்படுத்தியும் வருகிருர்களாம். மேலும் ஆதிதிராவிடசகோதரிகள்—சகோதரர்கள் நல்ல உடைகளும், நல்ல நகைகளும் அணியக்கூடாதென்று துன்புறத்துகிருர்களாமென ஒரு நிருபர் எழுதுகிருர்.

சுயமரியாதை இயக்கப் பிரமுகர்கள்.

திருவாளர்கள், 1. ஈ. வெ. ராமசாமி, 2. W. P. A. சௌந்திர பாண்டியர், 3. ஆர். கே. ஷண்முகம், 4. எஸ். ராமநாதன் 5. கைவல்ய சாமியார், 6. ஈ. வெ. ரா. நாகம்மாள், 7. இந்திராணி பாலசுப்பிரமணியம். 8. சிவகாமி, சிதம்பரஞர், 9. குருசாமி குஞ்சிதம், 10. நீலாவதிராமசுப்பிரமணியம் 11. சுலோசஞு, பொன்னம்பலஞர், 12. சிவாநந்தம். ஆகியவர்களின் போட்டோ படங்கள் 6½ x 4¾ சைஸ் படம் 1-க்கு 0—8—0. ஈ. வெ. ரா. 8½ x 6½ 1-க்கு 1—0—0. மொத்தமாய் வாங்குகின்றவர்களுக்கு 100க்கு 6—4—0 வீதம் கமிஷன் கழித்துக் கொடுக்கப்படும்.

தனி காப்பி வேண்டியவர்கள் விலைக்கு மேல் 4 அணு ஸ்டாம்பு அனுப்ப வேண்டும்.

விலாசம்: — பாலு & Co.,
No. 3 ஒப்பணக்காரத்தெரு
ஈரோடு.

புதிய சந்தாதாரர்களுக்கு இனாம்!

"குடி அரசு"க்குச் சந்தாவாக ஒரு வருஷத்திய கட்டணம் 3 ரூபாயை மணியார்டர் செய்பவர்களுக்கு பத்திரிகையுடன் 0—8—0 அணுவிலையுள்ள குடி அரசு வெளியீட்டுப்புத்தகங்கள்' இனமாகக்கொடுக்கப்படும்.

வெளியிடுவோர் "குடி அரசு" ஈரோடு.

இங்கிலீஷ் பாஷையைக் கற்றுக்கொள்ளுங்கள்.

உபாத்தியாயரின்றி, தேகசிரமமின்றி, அதிகபணச்செலவின்றி, மூனறு மாதத்திற்குள் ஷை பாஷையைக்கற்று பேச எழுத, படிக்க தெரிந்துகொள்ளுங்கள். இக்காலத்தில் இப்பாஷையை தெரிந்துகொள்ளவேண்டியது மிகக அவசியம். விபரத்திற்கு, ஒரு அணு தபால் ஸ்டாம்புடன் எழுதி தெரிந்துகொள்ளவும். அந்நியதேசவாசிகள் இண்டர்நேஷனல் ரிப்ளே கூப்பன் அனுப்பவும்.

எஸ். நாராயணசாமி, பெரும்புகளூர், திருவாரூர் போஸ்டு, தஞ்சாவூர்.

தாதுபுஷ்டிக்கு

பழநி சி. எம். சாமி,

மன்மத குளிகை

யை உபயோகியுங்கள்.

நீங்கள் என்றும் எதிர்பாராத ஆனந்தமும், மன உறுதியும், தேகவலிமையும், இல்லற சுகமும் அடைவீர்கள்.

புட்டி 1க்கு ரூ 2. தபால் சார்ஜ் வேறு.

பழநி சி. எம். சாமி

குருதாம்பர பஸ்பம்

சகல வியாதிக்கும் கைகண்டது.

தீராத திமிர், குஷ்டம், சூலை, மதமதப்பு, தடிப்பு பத்து, கிரந்தி, ஆராத குழிப்புண், குறை நோய், ரணங்கள் முதலிய சகல வியாதிகளும் கண்டிப்பாய் தீரும். 50 வேளை 'பஸ்பம் விலை ரூ. 25. 25 வேளை 12-8-0. ஏழைகளுக்கு பாதிவிலை.

ஏராளமான நற்சாட்சிகளைக் கேட்லாக்கில் பார்க்கலாம்.

அந்நிய தேசவாசிகள் மருந்திற்கு ஆர்டர் செய்யும்போது முன்பணம் ரூ. 5 அனுப்பவேண்டும்.

வைத்திய ஆசிரியர் C. மஹலயப்பசாமி, நித்தியானந்த மெடிக்கல் ஹால் பழனி S. I.

கெய்ரோடைன்

பத்தியம் கிடையாது! ரிஜிஸ்டர் செய்தது. ஆறுமுக முத்திரையுள்ளது. கெடுதல் செய்யாது.

இது இரத்த சுத்திக்கும் இரத்த விருத்திக்கும் தாது பலத்திற்கும் அதிசயமான டானிக் மருந்து. நாள்பட்ட வெள்ளை, நெடுநாள் மூலச்சூடு, வெட்டை, மேகவியாதி, துர்நீர் வியாதிகள் உஷ்ண வியாதிகளைத் திரும்பிவராமல் குணப்படுத்தும். தேகக்குளிர்ச்சியும், செழிப்பும், அழகும், பலமும் உண்டாக்கும். இந்த மருந்தில் சிலாசத்து பஸ்பம், சந்தனம், அயசெந்தூரம், ரசம், கெந்தகம், நிமிளை குருபஸ்பம் முதலிய அதிசயமான மருந்துகள் சேர்ந்திருக்கின்றன. இது ஒரு கல்ப மருந்து.

(10) இந்த ஒரே மருந்தினால் தீரும் வியாதிகளாவன:—

நாள்பட்ட வெள்ளை	மூலவாய்வு	சுவாச காசம்	மலடு	கண் மங்கல்	கிரந்திப்புண்
வெட்டை	இரத்த மூலம்	இழுப்பு, திகைப்பு	சூதக வெள்ளை	காதில் சீழ்வடிதல்	ஆர் நீர்கள்
கீழ் மேகம்	மூலக்கடுப்பு	குன்ம வயிற்றுவலி	பெரும்பாடு	பீனிசம்	கண்டமாலை
தந்தி மேகம்	எரிச்சல்	வாய்வு	வெட்டை வாய்வு	புழு வெட்டு	கரப்பான் புண்கள்
சொப்பனஸ்கலிதம்	மூலக்குத்தல்	நெஞ்சு வலி	இடுப்புவலி	பித்த வெடிப்பு	பித்த நீர்
தேக மெலிவு	வாய்ப்புண்	நெஞ்சு எரிவு	மூழங்கால் வாதம்	பித்த மயக்கம்	வாத நீர்
எலும்புருக்கி	குடல்புண்	பசிக்குறைவு	சூலைக்கட்டு	சிரங்கு	வாதம் 80
இரத்தக்குறைவு	வயிற்றுப்புண்	உஷ்ண வயிற்றுவலி	கால் குடைச்சல்	நமைச்சல்	பித்தம் 40
பலக்குறைவு	நீர்தாரைப்புண்	சூதக வயிற்றுவலி	முகவாதம்	பத்துக்கள்	ஐயம் 96
தேக வெளுப்பு	நெஞ்சுப்புண்	சூதக வாய்வு	கண் எரிச்சல்	கட்டிகள்	வாய்வு 10
கைகால் அசதி	மேகசுரம்	சூதகக்கட்டி	காக்கை வலிப்பு	சிலந்திகள்	குன்மம் 8
தாது நஷ்டம்	உஷ்ண இருமல்	கருப்பக்கிருமி	அக்கி மாலை	அரையாப்பு	வலிப்பு 5
மூலச்சூடு	ஈளை இருமல்				

முதலிய வாதபித்த ஐய சம்பந்தமான சகல வியாதிகளையும் ஆச்சரியமாகக்குணப்படுத்தும். இதை வியாதியில்லாதவர்களும் யாதொரு பத்தியமும் இல்லாமல் சாப்பிட்டு வந்தால் பலவீனமும் தேகத்தளர்ச்சியும் நீங்கி மெலிந்த தேகம் பருத்து இரத்த விருத்தியும் அழகும் பலமும் தாதுபுஷ்டியும் உண்டாகும். ஆண், பெண், குழந்தைகள் யாவரும் சாப்பிடலாம். பத்தியமில்லை. இது மீன் எண்ணெய்யைவிட நூறு மடங்கு உயர்ந்தது. ஒரு புட்டி மருந்தினால் உடம்பில் 10 முதல் 20 ராத்தல் நிறையுள்ள சதையுண்டாகும். தேக புஷ்டிக்கு நல்ல மருந்து. வைத்தியர்களும், டாக்டர்களும், வாங்கிப் பரீட்சை பார்க்கலாம். இது சுத்தமான மருந்து. எல்லா உடம்புக்கும் பொருத்தமானது. யாதொரு பத்தியமுமில்லாமல் சாப்பிடலாம். உடம்பிலுள்ள உஷ்ண வியாதி யெல்லாம் தீரும்.

வெட்டைச் சூட்டினாலும், உஷ்ணத்தினாலும், மெலிந்து வாடியிருக்கிற பெண்கள் இதைச்சாப்பிட்டால் தேகச் செழிப்பும் முகக்களையும், அழகும், வசீகரமும், வனப்பும், தேக புஷ்டியும் உண்டாகும். உடம்பு நல்ல மேனியிட்டு சுந்தர வடிவம் உண்டாகும். தேகக்குளிர்ச்சிக்குக் கைகண்டது.

உடம்பு மெலிந்திருக்கிற வாலிபர்கள் இந்தக் கெய்ரோடைன் மருந்தை ஒரு புட்டி வாங்கிச் சாப்பிட்டால் உடம்பில் சதை புஷ்டி உண்டாகி நரம்புகளுக்குப் பலமும், தேக புஷ்டியும், அழகும் உண்டாகும்.

மெலிந்து தளர்ந்திருக்கிற கிழவர்கள் இதை உண்டு வந்தால் தளர்ந்துபோன ஜீரணக்கருவிகள் உறுதி பெற்று ஜீரணசக்தியும் ஆகாரமும் அதிகப்பட்டு உடம்புக்கு நல்ல பலமும் புதிய ஊக்கமும் உண்டாகும்.

இந்தக் கெய்ரோடைன் டானிக் மருந்தை எத்தனை விதமான நோயுள்ளவர்கள் சாப்பிட்டாலும், எந்தெந்தநோயினால் உடம்பு எவ்வளவு மெலிந்திருந்தாலும், நோய்களைத் தடுத்து நல்ல சுகத்தையும் பலத்தையும் தரும். பற்பல வியாதிகளையும் வராமல் தடுக்கும்.

தாதுபுஷ்டிக்கு ஐம்பது வயதுக்கு மேற்பட்டவர்கள் சாப்பிட்டாலும் என்றும் எதிர்பாராத வீரிய பலம் உண்டாகும். இளங்குமாரர்களுக்குச் சொல்லவேண்டியதில்லை. "நிசமாக இம்மருந்தின் பெருமை கேளாய், அறமாதா அணைந்திடினுஞ் செயல்கள் துஞ்சி ஆணவமில்லாததோர் அசதி நோய்க்குத், திறமாகமண்டலந்தான் பாதியுண்டால் ஜெகமாதர் அஞ்சமிகப் போகமீறும், குறமாதைச் சேர்ந்தோன் தன்ஆணை சொன்னேன் குவலயத்தில் விடர்களுக்கீ துரைத்திடாதே" என்று நூல் இருக்கிறது.

குழந்தைகள் முதல் பெரியவர்கள் வரை வியாதி இருந்தாலும் இல்லாவிட்டாலும் இதைச்சாப்பிட்டால் உடம்பிலிருக்கிற சிவப்பு இரத்த உயிர் அணுக்கள் (Red Blood cells) ஏராளமாக விருத்தியாகி சதை புஷ்டியுண்டாகி மேனி வளர்ந்து புதிய பலமும் புதிய அழகும், புதுமையும் ஊக்கமும், புதிய செழிப்பும் ஏற்பட்டு தேக ஆரோக்கியமும் இரத்த சுத்தியும் உண்டாகும்.

எமது "சித்தர் சஞ்சீவி மாத்திரை"யை ஒன்றிரண்டு நாளைக்குப் பேதிக்குச் சாப்பிட்டு அதன் பிறகு 'கெய்ரோடைன்" டானிக் சாப்பிட்டால் சீக்கிரம் குணம் உண்டாகும். சித்தர் சஞ்சீவி மாத்திரை புட்டி 1க்கு விலை அணா 8.

பூரண சுகத்திற்கு ஒரே புட்டி மருந்து போதுமானது. 80 வேளை மருந்து புட்டி 1க்கு விலை ரூ. 5—0—0.

எல்லா மருந்துகளுக்கும் பாக்கிங் தபால் செலவு வேறு. மலாய் நாட்டார்கள் ஆர்டருடன் முன்பணம் அனுப்பவேண்டும். (கேட்லாக் இனாம்.)

தந்தி விலாசம்,— "சித்தர்" மதுரை. } விலாசம்:— **ஆர். எஸ். பதி அன்கோ, (Regd)**

ஸ்ரீ மீனாட்சியம்மன் கோயில் மேலைக்கோபுரம் உட்புறம், மதுரை.

விற்பனைக்காக நம்மிடம் உள்ள இதர பதிப்புப் புஸ்தகங்கள்.

1.	இயற்கைமதம் ...	0—8—0
2.	சிதம்பர ரகசியம் ...	0—8—0
3.	சுதந்தரப்போர் அல்லது உப்பள முற்றுகை	0—4—0
4.	சுயமரியாதைத் தத்துவக் கீதங்கள் ...	0—4—0
5.	பகுத்தறிவே விடுதலை அல்லது ஜீவாத்மா இல்லை (சித்திரப்படங்களுடன் 100 பக்கங்களுக்கு மேல் உள்ளது)	0—6—0
6.	மாதர் சுதந்தரம் or பெண்மக்கள் பெருமை	0—8—0
7.	ஆராய்ச்சி அணிகலம் ...	0—12—0
8.	சென்னை லோக்கல் போர்ட் ஆக்ட் ...	2—0—0
9.	மோட்டார்கார் இயந்திர சாஸ்திரமும் அதன் அனுபோகப் பயிற்சியும் (50 படங்களுடன் 200 பக்கங்கள் அடங்கிய பெரிய புஸ்தகம். ஆர்டருடன் 4 அணா ஸ்டாம்பு அனுப்பவேண்டும்.) ...	2—0—0
	ஈ. வெ. ராமசாமியின் போட்டோ படம் ...	0—8—0

குறிப்பு:—புஸ்தகங்களுக்கு ஸ்டாம்பு வைத்து அனுப்புகின்றவர்கள் புஸ்தக கிறயத்துக்கு மேலாக புஸ்தகம் ஒன்றுக்கு ஒன்றரை அணா ஸ்டாம்பு அனுப்பவேண்டும். 8 அணாவுக்குக் குறைந்த ஆர்டருக்கு வி. பி. அனுப்பப்படமாட்டாது. ஆர்டர்களுக்கு பாதித்தொகையாவது முன்பணம் அனுப்பவேண்டும்.

'குடி அரசு' 'ரிவோல்ட்' மாலைகள்.

குடி அரசு மாலைகள் கோர்வையாக முதல் வருஷத்திலிருந்து சென்ற வருஷம் வரை 5 வருஷகாலம் வெளியான மலர்களைத் தனித்தனி வருஷமாக பைண்ட் செய்து புஸ்தகமாக வைக்கப்பட்டிருக்கிறது.

ஒவ்வொரு வருஷமாலை கிரயம்	ரூ. 4—0—0
ரிவோல்ட்டு ஒரு வருஷமாலை பைண்ட் செய்தது கிரயம்	ரூ. 4—0—0

மானேஜர், குடி அரசு புத்தகாலயம்,
ஈரோடு

நீங்கள்

கதரின் புரட்டை உணரவேண்டுமா?

அப்படியானால்

திரு. எஸ். இராமநாதன் எம். ஏ., பி. எல்., அவர்களால் தொகுக்கப்பட்ட

'கதர்-மூட நம்பிக்கை' என்னும் ஆங்கில புத்தகத்தைப் படியுங்கள்.

இதன் விலை அணா 0-2-0. ஒரு புத்தகம் வேண்டுவோர் 3 அணா ஸ்டாம்பனுப்பவும்.

மானேஜர் "குடி அரசு" ஈரோடு.

'சண்டமாருதம்'

சுயமரியாதைத்தமிழ் தினப்பதிப்பு.

லண்டன் மகாநாட்டுச் செய்திகள்
அச்சமற்ற கண்டனங்கள்
ஆணித்தரமான அபிப்பிராயங்கள்
ருசிகரமான குறிப்புகள்
தேனின் இனிய "திரட்டுப்பால்"
நகைச்சுவை மிக்க நாவல்கள்
மெய்கூச்செறிக்கும் "மின்வெட்டு"
அறிவைப்பெருக்கும் "அஷ்டதிக்கு"
முதலியன "சண்டமாருத"த்தில் வெளியாகின்றன.

சந்தா விவரம்.

உள்நாடு மாத சந்தா	ரூ. 1—2—0
தனிப்பிரதி	ரூ. 0—0—6
வெளிநாடு வருட சந்தா	ரூ. 18—0—0
ஆறுமாதம் ...	ரூ. 10—0—0

மானேஜர்
'சண்டமாருதம்'
திருச்சினாப்பள்ளி.

சென்னை லோக்கல் போர்டு ஆக்டு.

(1930ம் வரையிலுமுள்ள சீர்திருத்தங்களுடன் கூடியது)

M. S. பார்த்தசாரதி அய்யங்கார், B. A., B. L., அவர்களால் மொழிபெயர்க்கப்பட்டது.

விலை ரூபா 2—0—0. வி. பி. செலவு ரூ. 0—5—0

மானேஜர்,
குடி அரசு புத்தகசாலை, ஈரோடு

சுயமரியாதைப் பொக்கிஷம்

எனும்

புதுவைமுரசு விசேஷ அநுபந்தம்.

இதில், சுயமரியாதை இயக்க அறிஞர், தலைவர், அன்பர் ஆப்டோன் படங்கள், அரியகட்டுரைகள், விகடங்கள், சின்டல்கள், கவிகள் அடங்கியிருக்கின்றன. பத்திரிகைகள் அனைத்தும் நமது அநுபந்தத்தைப்பற்றித் தெரிவித்துள்ள நல்லபிப்பிராயங்களையும் வாசகர் அறிவர். 130 பக்கங்கள் கொண்டது விலை ஆறே அணா.

3 காப்பிகளுக்கு குறைந்த ஆர்டருக்கு வி. பி. யில் அனுப்ப முடியாது. ஒரு காப்பி வேண்டுவோர் 7 அணா ஸ்டாம்பு அனுப்புக.

மானேஜர்,
புதுவை முரசு,
புதுச்சேரி, F. இந்தியா.

பண்டிதர். உயர்திரு. சாமி சிதம்பரனார் அவர்களியற்றிய

மாதர் சுதந்திரம் அல்லது

பெண் மக்கள் பெருமை.

என்னும் அரிய நூல் விலை அணா 8. (எட்டு)

கிடைக்குமிடங்கள்:- "குடி அரசு" புத்தகாலயம். ஈரோடு.
இம்பீரியல் பிரஸ், மாயவரம்.

மறியலும், தேசீயமும் எலக்ஷன் சூழ்ச்சி.

குடி அரசுப் பதிப்பக வெளியீடுகள்.

சந்தாதாரர்களுக்கு முக்கால் விலை.

கைவல்யம் அல்லது கவலைக்கியானம்.

இது கைவல்ய சாமியாரவர்களால் எழுதப்பட்ட கட்டுரைகளைத்தொகுத்து வெளியிடப்பட்டது. இக்கட்டுரைகளைப்படிப்பதால் அனேக சாஸ்திர, புராண, இதிகாசங்களையும் அவற்றில் உள்ள சாதிப்புரட்டு, சமயப்புரட்டு, முதலியவைகளையும் உணர்ந்து நிகரற்ற பண்டிதராகலாம். இதன் விலை அணா. 0—8—0

இராமாயண ஆராய்ச்சி.

இதில் இராமாயணத்தின் ஆபாசங்களை அறியலாம். கம்ப இராமாயணம், வால்மீகி இராமாயணம் இரண்டிலும் உள்ள ஊழல்களையும், ஒன்றற்கொன்று உள்ள வேறுபாடுகளையும் ஆராய்ந்து அவற்றில் உள்ள தெய்வீகப்புரட்டுக்களை வெளியாக்குவது.

இதன் விலை முதற்பாகம் பாலகாண்டம் அணா. 0—4—0

இரண்டாம் பாகம் அயோத்தியாகாண்டம் அணா. 0—8—0

ஞானசூரியன்.

இதில் வேதம், புராணம், ஸ்மிருதி முதலிய வைகளின் ஆபாசங்களைக் காணலாம். மதங்களின் ஆபாசங்களையும், மதச் சடங்குகளின் ஆபாசங்களையும் அறியலாம், இதை ஒருமுறை படித்தால் ஆரியர்களின் புராதன நாகரீகத்தின்வண்டவாளம்முழுதும்தெரியும். பெரியபுத்தகம். 150 பக்கம். இதன் விலை அணா. 0—4—0

மநுநீதி மருமம்.

இது மநுதரும சாஸ்திரத்தில் உள்ள அநீதிகளையும், பார்ப்பனர், பார்ப்பனரல்லாதாரை அடிமைப்படுத்துவதற்கு ஏற்படுத்தியுள்ள சூழ்ச்சிகளையும் விளக்குவது. இதன் விலை அணா. 0—2—0

இராமலிங்க சுவாமிகள் பாடல் திரட்டு.

இது இராமலிங்க சுவாமியால் பாடிய அருட்பாவில், ஆறும் திருமுறையில் உள்ள பாடல்களிலிருந்துதொகுக்கப்பட்டது. இதில் உள்ள பாடல்களால், வேதம், புராணம், மதம் முதலிய வைகளின் சூழ்ச்சிகளையும், அவைகள் பொய் என்பதையும் உணரலாம்.

இதன் விலை அணா. 0—2—0

சுயமரியாதைத் தாலாட்டு.

இதில் தீண்டாமைக் கொடுமை, சாதி சமயக் கொடுமை, ஏழை பணக்காரக் கொடுமை முதலிய வற்றைக் கண்டித்துக் கூறப்பட்டிருக்கிறது. இனிய பாடல். எளிதில் பொருள் விளங்கும்.

இதன் விலை அணா. 0—2—0

சோதிடப் புரட்டு.

இதில், சோதிடம் என்பது பொய் என்பதையும், பார்ப்பனர்களும், புரோகிதர்களும், ஜன சமூகத்தை ஏமாற்றுவதுதான் சோதிடமென்பதையும் இனிமையான-சுலபமான பாடல்களால் விளக்கிக் கூறப்பட்டிருக்கிறது. இதன் விலை அணா. 0—2—0

ஈ. வெ. ராமசாமியின் சீர்திருத்த மகாநாட்டுச் சொற்பொழிவு.

இதில் ஜனசமூகம், சீர்திருத்தம்பெற்றுச் சுகமாக வாழ வேண்டியதற்கான வழிகளைக்காணலாம். மக்கள் அடிமைப்பட்டுப்பகுத்தறிவின்றி வாழ்வதற்குக் காரணங்களை உணரலாம். ஈ. வெ. ராமசாமியின் சொற்பொழிவுகளில் இது தலை சிறந்ததாகும். இதன் விலை அணா 0—2—0.

சுயமரியாதைப்பாடல்.

இதில் சுயமரியாதைக்கொள்கைகளை விளக்கி, இனிமையான புதியவர்ணமெட்டுகளில் பாடியபாடல்கள் அடங்கியுள்ளன.

இதன் விலை அணா 0—2—0.

தர்ம பரீக்ஷை அல்லது புராண ஆபாசம்.

இது ஒரு பழைய நூல். இதில் புராணங்களின் பொருத்தமற்ற கதைகளையும், முன்னுக்குப்பின் முரணான கொள்கைகளையும் தெள்ளத்தெளிய உணரலாம். இரண்டு இளைஞர்கள் மாறு வேடம் பூண்டு பொது ஜனங்களுக்குப் புராணபுரட்டுக்களை வெளிப்படுத்தும் முறையில் எழுதப்பட்டிருக்கிறது.

இதன் விலை அணா 0—3—0.

பங்கஜம் அல்லது பார்ப்பனக்கொடுமை.

இது ஒருநாடகம், பார்ப்பனர்களின் புரட்டுக்களையும், ஜாதி வேற்றுமை, மதக்கொடுமை, சாஸ்திரக்கொடுமை, முதலியவற்றையும் விளக்கிச் சமதர்மத்தைப்போதிப்பது. இதுவே தமிழில் உள்ள முதல் சுயமரியாதை நாடகம்.

இதன் விலை அணா 0—4—0.

மேயோ கூற்று மெய்யா? பொய்யா?

இது அமெரிக்க நாட்டு மாதாகிய "கன்னி மேயோ" எழுதியதில்உள்ள உண்மைகளையும், அதில் சொல்லப்படாமல் இருக்கும்—நமது நாட்டில் உள்ள வேறுபல ஆபாசங்களையும் எடுத்துக்காட்டிச் சீர்திருந்த வேண்டுமென்னும் உணர்ச்சியை உண்டாக்குவது.

இதன் விலை அணா 0—3—0

அகத்தியர் ஆராய்ச்சி.

இதில் முச்சங்கங்களின் புரட்டுக்களையும், அகத்தியர் சரித்திரப்புரட்டுக்களையும் தமிழ் நூல் ஆதாரங்களோடுவிளக்கப்பட்டிருக்கிறது. சென்னை, பண்டிதர் கா. நமச்சிவாய முதலியாரால் எழுதப்பட்டது.

இதன் விலை அணா 0—2—0

கடவுளை நிந்திக்கும் கயவர்கள் யார்?

இதில், கடவுளை நிந்திப்பவர்கள் சுயமரியாதைக்காரர்கள் அல்லவென்றும், புராணமரியாதைக்காரர்கள் தான் கடவுளை நிந்திக்கும் கயவர்களென்றும், இதிகாச புராணங்களின் ஆதாரங்களைக் கொண்டே விளக்கிக் காட்டப்பட்டிருக்கிறது. பண்டிதர் அ. ராகவன் அவர்களால் எழுதப்பட்டது.

இதன் விலை அணா 0—2—0.

கதர்-மூடநம்பிக்கை (இங்கிலீஷ்)

இதில், திரு S. ராமநாதன், அவர்கள் கதரைப்பற்றிச்செய்த உபந்யாசமும், அதற்குத் திருவாளர்கள், பட்டாபி சீதாராமையாவும், என். எஸ். வரதாச்சாரியும் எழுதிய மறுப்புரைகளும், அவைகளுக்கு எஸ். ராமநாதன் எழுதிய பதில்களும் ஆங்கிலத்தில்வெளியிடப்பட்டிருக்கின்றன. இதைப் படித்தால் கதர்ப் புரட்டை உணரலாம்.

இதன் விலை அணா 0—2—0.

முக்கிய கவனிப்பு:— மேல்கண்ட புத்தகங்கள் "குடி அரசு" சந்தாதாரர்களுக்கு முக்கால் விலைக்குக்கொடுக்கப்படும். ஆனால் பாதித்தொகை முன்பணமாக அனுப்பவேண்டும்.

மானேஜர், குடி அரசு புத்தகாலயம், ஈரோடு.

உண்மை விளக்கம் பதிப்பகத்தில் அச்சிடப்பட்டு திருமதி நாகம்மாள் அவர்களால் வெளியிடப்பட்டது.